சுசீல வள்ளல்

# அம்மானை

15912
8255



# சுசீலவள்ளல் அம்மானை

தமிழ்நாடு அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூல்நிலையம்

# சுசீலவள்ளல் அம்மானை

தமிழ்நாடு அரசு
கீழ்த்திசை நூலகச்
சுவடி

பதிப்பாசிரியர்

எஸ். செளந்தர பாண்டியன் எம். ஏ., பி.எட்.,

பொறுப்பாசிரியர்

டாக்டர் இரா. நாகசாமி

வெளியிட்டோர்

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

1981.

First Edition 1981
T. N. D. A. Publication No. 86.

© Tamilnadu State Department of Archaeology

# Susila Vallal Ammanai

Editor
**S. Soundara Pandyan** M.A. P.Ed.

General Editor
DR. R. NAGASWAMY

Price : Rs. 8-25.

Printed and Published by the State Dept. of Archaeology
On behalf of
Oriental Manuscripts Library. Madras.

C. ARANGANAYAGAM
Minister for Education
Government of Tamilnadu

Fort St. George
Madras-600009.
27-12-80

The Government of Tamilnadu, under a special scheme of publication of unpublished Tamil Manuscripts have come forward to undertake the printing and publishing of all the available unpublished Tamil Manuscripts in the State. Necessary funds towards the publication have been provided for the purpose. It is estimated that several hundred unpublished Tamil manuscripts dealing with native medicines, mathematics, music, fine arts, and literary compositions of various nature, are lying unpublished in different Manuscripts Libraries of this State and also in other parts of the country. Various Manuscript Libraries in the State, have been approached to make available their unpublished texts for publication. The authorities of these Manuscripts Libraries have come forward with interest and enthusiasm to afford necessary facilities for the same. Eminent Tamil Scholars, well-versed in the art of editing have been requested to take up the work of editing. Under the scheme the texts will be critically edited with suitable foot-notes and brief introductory analysis both in English and Tamil for the benefit of researchers and scholars. The selection of manuscripts, copying and editing have been entrusted to the Tamilnadu State Department of Archaeology.

So far the texts of 75 manuscripts have been copied and a number of them edited and are made available in printed form in this series. I am thankful to all the institutions and scholars who have come forward to join the Government in this venture. It is only a beginning and I do hope that all the available texts will be in the hands of scholars, educational institutions and public Libraries, so that the contribution of the Tamils through the centuries in different fields will be available for the proper understanding and comprehension of the Tamil Language, Literature and Culture.

C. ARANGANAYAGAM
27-12-80.

செ. அரங்கநாயகம்
கல்வி அமைச்சர், தமிழ்நாடு அரசு

செயின்ட்ஜார்ஜ் கோட்டை,
சென்னை-600009.

தமிழ்நாடு அரசு இதுகாறும் அச்சில் வெளிவராத பழம் ஓலைச்சுவடிகளைப் படி எடுத்து அச்சிட்டுப் பதிப்பிக்க ஒரு திட்டத்தை மேற்கொண்டுள்ளது. அதற்கு உரிய பண ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழ்நாட்டிலும், மற்றும் நாட்டின் பிற பகுதிகளிலும், பல்வேறு சுவடி நூலகங்களில் தமிழக மருத்துவம், கணக்கு, இசை, நாட்டியம், சிற்றிலக்கியங்கள், பேரிலக்கியங்கள் இன்னபிற நூல்கள் அச்சிடாமல் இருப்பது கணக்கிடப்பட்டுள்ளது. நாட்டில் உள்ள பல்வேறு சுவடி நூலகங்களையும், அந்நிறுவனங்களில் உள்ள அச்சில் வராத நூல்களை அச்சிடும் பணிக்கு உதவுமாறு அரசு கேட்டுள்ளது. பல்வேறு நூலகத்தார்களும் தேவையான வசதிகளை அளிக்க மனமுவந்து முன் வந்துள்ளனர். தமிழ்த் துறையில் வல்லுநர்கள் இந்நூல்களை ஆராய்ச்சிக் குறிப்புடனும், முன்னுரையுடனும் பதிப்பித்துத்தர முன்வந்துள்ளனர். இந்த நூல்கள் ஆங்கிலத்திலும், தமிழிலும் அடிக்குறிப்புக்களுடன் வெளியிடப்படும் ஓலைச்சுவடிகளைத் தேர்ந்தெடுத்துப் படி எடுத்துப் பதிப்பிக்கும் பணியைத் தொல்பொருள் ஆய்வுத்துறை, மேற்கொண்டுள்ளது.

இதுகாறும் 75 நூல்கள் படியெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் பல அச்சாகி இந்நூல் வரிசையில் வெளிவருகின்றன. அரசின் இந்தப் பணியில் ஒத்துழைக்க முன்வந்துள்ள ஆராய்ச்சி வல்லுநர்களையும், தமிழ்ப் பெரியோர்களையும், சுவடிநூலகங்களையும் நான் வாழ்த்துகின்றேன். இதுபோன்று விரைவில் அச்சில் வராத அனைத்து நூல்களும் ஆராய்ச்சியாளர்களுக்கும் கல்வி நிறுவனங்களுக்கும் மற்றும் பொது நூலகங்களுக்கும் கிடைக்கும் வகையில் வெளிவரும் என்பதில் ஐயம் இல்லை. இதன் பயனாய் காலந்தோறும் தமிழில் தோன்றிய பல்வேறு கருத்துக்களையும் பண்பாட்டையும் முழுமையாக அறிந்து கொள்ள இயலும் என்பதில் ஐயம் இல்லை.

**செ. அரங்கநாயகம்**
*27-12-1980*

# INTRODUCTION

This interesting work is on a mythical King Susila Vallal who is said to have ruled with Amirthapura as his capital. Susila gets a son after performing Putrakāmēshti yāga, and names him Indrakomān. His minister Vibhega likewise gets a son Indrakesari. Indra Komān, the Prince, decides to get himself crowned only after conquerring many countries and goes with his friend Indrakesari on a war expedition. They attack a King Kuccara, and subsequently learn that Kuccara's daughter Sauri was abducted by Nāgendra and held captive in Pātāla. Both the youngsters fight with Nāgendra, and rescues Sauri and bring Nāgendra's daughter Nāgakanya as captive. But Indra intercepts them on the way and carries the girls to his land. The Prince follows them and rescues the girls. Indra Kōmān marries Sauri and Indrakesari, Nagakanya.

The story, a novel theme is a mixture of many episodes found in *Rāmāyana*, *Chintāmani* and *Perunkadai*. The story of Nāgakanya, Nāgendra and Pātāla (the neither world) reminds one of the story of *Pīlivaḷai* and *Killivalavan*, a Chola mentioned in the *ulas*.

The author of this work is one Kumaraswami Kavirāyar son of Alagiya Chirrambala Kavirāyar of Mallaiyur. Mallaiyur Chirrambala Kavirayar, was an eminent Poet of 17th century and his descendents were also eminent poets. Kumaraswamy Kavirāyar the author of this work Susila Vallal Ammanai, was his son. His elder brother Kulandai Kavirāyar, wrote Bojarāyan caritra Ammanai.

The manuscript of *Bojarāya caritra Ammānai* is preserved in the Government Oriental Manuscripts Library,

Madras. The son of this Kulandai Kavirāyar, whose name is Pāndikkavirāyar composed *"Nala Damanyanti Kummi"* His sister is said to have composed *"Menaka caritram"* and *"Valliyammai caritra"*. It is evident from the above that the family distinguished itself in Tamil Literary poems.

The date of Mallaiyur Chirrambala Kavirāyar is known from other sources. He was a contemporary of Thirumalai Sethupathi of Ramanāthapuram, and Thirumalai Nayak of Madurai. He composed a Pillai Tamil on *'Marungapuri vira puccaiya Nāyaka'* in Saka 1569 (1647 A. D.) He is the author of the famous work *'Mallai civantelunta Pallavarāyan Ulā.*

At the end of this work *"Susila Vallal Ammānai"* Kumāraswāmi Kavirāyar praises the greatness of his father Chirrambala Kavirayar and his family. He is said to have won the King by his composition *'Vannappā'*. Chirrambala Kavi composed a *talapurāna* (i. e. 1815) on the lord of Piranmalai. Sethupathi learnt Tamil from him and gifted four lands irrigated by 48 *madais* in Rajasinga mangalam. But of this the poet gifted one *madai* land to Kanyakumari temple and another to Brahmins. He retained the rest of 46 *madai* lands. The Sethupathi King composed a poem on this poet. The poet gifted the 46 *madai* lands back to the King (i. e. 1828). He got as gift Pusāri patti (i e 1834-1840) Malavupatti, Pulavankudi, Kavirayarpatti, Kothamangalam, Konādupatti, Maravan ental, Manmettupatti, Sevur, Tenātchipatti, Karaiceāran patti and Karukaippilan patti.

A memorial stone was erected to this poet by his son and his services were inscribed. He belonged to the Kāsyapa Gotra and was a great Saivite.

Kumāraswamy Kavirāya was a great devotee of Lord Muruga and says that he composed this work by the grace of Lord Subrahmanya. In the text he frequently praises Lord Muruga of Kunrakkudi and it seems that this work

itself was a novel theme to extol the presiding deity of Kunrakkudi. May be it was sung there during festivals. At the end the poet pays obeisance to Mallai Kavirāya and their descendents.

'*Varga Venba*' by the same poet on Lord Muruga is added at the end.

This work is edited by Pulavar Soundara Pandyan, M.A. of Government Oriental Manuscripts Library, Madras.

R. Nagaswamy

# உள்ளடக்கம்


1. பதிப்புரை 1

2. நூல் 15

3. உள் தலைப்புகளின் அகராதி 104

4. வர்க்க வெண்பா முன்னுரை 117

5. வர்க்க வெண்பா 121

6. பாடல் முதற்குறிப்பு அகராதி 140

8. அச்சில் வெளிவந்துள்ள அம்மானை நூற்கள் 143

# பதிப்புரை

செந்தமிழ்த் தாய்க்கு அணிகலன்களாக மின்னும் நூற்கள் பலப்பல; மின்னி மறைந்த நூற்கள் இன்னும் பல. எவர்க்கும் புலப்படா வண்ணம் மறைந்திருக்கும் நூல்களும் எண்ணில. அங்ஙனம் மறைந்திருந்த அருந்தமிழ் நூல்களுள் ஒன்றே இச்சுசீலவள்ளல் அம்மானை. பிற அம்மானை நூற்களைப் போலவே பலசிறப்புக்களைப் பெற்ற இவ்வம்மானை, தமிழுக்குக் கிடைத்த புதுச் செல்வமாம்.

## கதைச்சுருக்கம்

சுசீலவள்ளல் அம்மானை, முற்றிலும் ஒரு கற்பனைக் கதையாகும்[1]. இராமய்யன் அம்மானை போன்று வரலாற்று நிகழ்ச்சியினை அடிப்படையாகக் கொண்ட நூல் அல்ல இது.

சுசீலன் எனும் சிற்றரசன் அமிர்தபுரத்தைத் தலைநகராகக்கொண்டு ஆள்கிறான். அவனுக்கோ பிள்ளையில்லாத குறை. தவமிருந்து ஓர் ஆண்மகவைப் பெறுகிறான். அவனே இந்திர கோமான். இந்திரகோமானைப் போன்றே சுசீலனின் மந்திரி விபேகனுக்கும் இந்திரகேசரி பிறக்கிறான். சுசீலன் இந்திர கோமானுக்கு முடிசூட்ட எண்ணுகிறான். ஆனால், பல நாடுகளை வென்ற பின்தான் முடிசூடுவேன் என்று சொல்லி, இந்திரகோமான், இந்திரகேசரியுடன் போர்மேற் செல்கின்றான்.

சென்ற காளையர், குச்சரன் என்ற ஒரு சிற்றரசனைத் தாக்குகின்றனர். குச்சரனின் மகள் சவுரி என்பாளை நாகேந்திரன் என்பான் தூக்கிச்சென்று சிறை வைத்திருப்பதை அறிகிறார்கள். நாகேந்திரனோடு போராடிச் சவுரியை மீட்டு,

1. சுசீலன் என்றொரு கோசல தேசத்து வைசியன் இருந்தான். அவன் வேதியர் ஒருவரின் அறிவுரைப்படி விரதம் இருக்க, தேவி தோன்றி, என்றும் வறுமையே வராது ஆக்கினாள். (அபிதான சிந்தாமணி (1910) பக். 428). குமாரசாமிக் கவிராயர் இதனை உளங்கொண்டு இந்நூலைச் செய்தாரோ என ஐயுற இடமுண்டு. இருப்பினும், கதையால், நிகழ்விடத்தால், இவ்வம்மானை முற்றிலும் கற்பனையே எனலாம்,

நாகேந்திரன் மகள் நாக கன்னிகையையும் கவர்ந்து வருகின்றனர். வரும் வழியில், தேவேந்திரனான இந்திரன் மங்கையர் இருவரையும் எடுத்துச் சென்றுவிடுகிறான். மீண்டும் இந்திரகோமானும், இந்திரகேசரியும் வானுலகம் சென்று இந்திரனிடமிருந்து சவுரியையும் நாக கன்னிகையையும் மீட்டுத் திரும்புகின்றனர்.

அனைவரும் சுசீலவள்ளலைப் பார்த்து இன்புறுகின்றனர். இந்திரகோமானுக்கு முடிசூட்டப்பெறுகிறது. இந்திரகோமானுக்கும் சவுரிக்கும், இந்திரகேசரிக்கும் நாக கன்னிகைக்கும் திருமணம் நடைபெறுகிறது. இந்திரகேசரி, இந்திரகோமானின் அமைச்சனாகிறான். இருவரும் செங்கோல் இனிதோச்சுகின்றனர். இதுவே கதை.

இதில், இந்திரகோமான் ஆற்றல் வாய்ந்தவனாகவும், அழகு மகனாகவும், நற்பண்புகள் கொண்டவனாகவும் சித்திரிக்கப் பெறுகிறான். இவ்வம்மானை, சுசீலனின் சிறப்பை ஒரு பகுதியாகவும், இந்திரகோமானின் சிறப்பை ஒரு பகுதியாகவும் நவில்கிறது.

## அம்மானை எனும் இலக்கிய வகை

தமிழ்நாட்டில், பெண்களின் விளையாட்டுக்களுள் அம்மானை என்பதும் ஒன்று. அம்மானைக் காய்கள் மூன்றைக் கைக்கொண்டு, இரு கையாலும் பெண்கள் விளையாடும் ஆட்டம் இது. இரண்டு கைகளிலும் இரண்டு காய்கள் இருக்க, மேலே ஒன்று இருக்கும். ஒரு பெண் ஒரு கையில் இருக்கும் அம்மானைக் காயை மேலே வீசி, அந்தக் கையால் மேலுள்ள அம்மானைக் காயைப் பிடித்தல் வேண்டும். இப்படிச் சாமர்த்தியமாக ஆடும்போது, காய் தவறிக் கீழே விழுந்துவிட்டால் வேறு ஒரு பெண் ஆடுவாள்.........இப்படி அம்மானை ஆடும்போது பாட்டுப் பாடிக்கொண்டே இருப்பார்கள். அந்தப் பாட்டுக்கும் அம்மானை என்ற பெயர் வழங்கும். [1]

1. கலைக்களஞ்சியம். பக். 101. தொகுதி I.

சீர்சால் சிலம்பில், அம்மானை வரி எனும் பாடல்கள் காணப்படுகின்றன. நமக்குக் கிட்டும் அம்மானை வரிகளுள் இதுவே மிகப் பழமையானது. சிலப்பதிகார வாழ்த்துக் காதையில், பெண்கள் அம்மானை ஆடிச் சோழன் சீர் பாடுவதாக அம்மானை வரிப் பாடல்கள் நான்குள.

தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாகிய கலம்பகத்தில், 'அம்மானை' எனும் உறுப்பு உண்டு. அது மூன்று பெண்டிர் பாடுவதாக அமைந்திருக்கும்.

அம்மானைப் பருவம், பிள்ளைத் தமிழ் எனும் சிற்றிலக்கிய வகையில், பெண்பாற் பிள்ளைத் தமிழில் வரும். இதனை எட்டாம் பருவமாக அமைப்பர். பாட்டுடைத் தலைவியைத் தாய்மாரும் செவிலியரும் அம்மானையாடும்படிச் சொல்லும் முறையில் இப்பருவப் பாடல்கள் இருக்கும்.

மூவரம்மானை முதலிய சில அம்மானை நூல்களில், ஒவ்வொரு பாடலிலும் 'அம்மானை' எனுஞ்சொல் மூன்றிடங் களில் வருகின்றன. ஆயின், இச்சுசீலவள்ளல் அம்மானையில், அம்மானை எனுஞ்சொல் ஒரோவழியே இடம் பெறுகிறது. இம்முறையே இராமய்யன் அம்மானை,[1] மாகபுராணஅம்மானை[2] ஆகிய நூல்களிலும் காணப்படுகிறது.

"அம்மனை என்பது தாய் என்ற பொருளை உடையது. பெண்களைப் பொதுவாக அம்மா என்று அழைப்பதுபோல, அம்மனை என்றும் அழைப்பது இலக்கிய மரபு. பாட்டில், வாக்கியத்தின் முடிவில் பெண்ணை விளிக்கும் விளியாக அம்மானை என்பது அமைந்தது. இதுவே, அம்மானாய் என்றும் வரும். இந்த முடிவுடைய வாக்கியங்கள் இப்பாட்டில் வருவதனால் இந்தப் பாட்டும் விளையாட்டும் அம்மானை என்ற பெயரைப் பெற்றனபோலும்."[3]

1. சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூல்நிலைய வெளியீடு. XIV.
2. ஷை —CXLV
3. கி. வா. ஜ. கலைக்களஞ்சியம், தொகுதி 1, பக். 101.

இவ்வாறு, அம்மானை எனும் வழக்குக்கும், அம்மானை வரிக்கும் நீண்ட நெடிய வரலாறு இருப்பினும், அம்மானை என்ற இலக்கிய வகை கி. பி. 17-18-ஆம் நூற்றாண்டின் வளர்ச்சியே எனலாம்.[1]

## அம்மானை நூல்களின் பொதுத்தன்மைகள்

அம்மானை எனுஞ்சொல் விரவி வருதலைத் தவிர்த்து, எண்ணற்ற பொதுத் தன்மைகளையும் அம்மானை நூல்கள் கொண்டிருக்கின்றன என்பதை இந்நூற்களை ஆய்வோர் தெளிவர். எடுத்துக்காட்டாக ஒன்றிரண்டை இங்கு நோக்கு வம்.

"விக்கினங்கள் வாராமல் விழிநோக்கி வாருமய்யா
ஈதுமல்லா விச்சபையி லியம்புகின்றே னோர்வசனம்."[2]

எனச் சிவகங்கைச் சரித்திரக் கும்மியும் அம்மானையும் என்ற நூலில் வருகிறது. இதுபோன்று, 'கூறுகின்றா னோர்வசனம்' அல்லது 'கூறுகின்றா ளோர்வசனம்' என்றாங்கு, பல அம்மானை நூல்களிலும் வரல்காணலாம். காட்டாக, இந்நூலில்,

"பங்கேருக வதனி பார்த்துரைப்பா ளோர்வசனம்"
(வரி.1447)

என்பதைச் சுட்டலாம்

இவைபோன்ற சொற்றொடர்கள் பல, அம்மானைகளில் காணப்படுவது ஒரு பொதுத் தன்மையாகவுளது.

"பழமறையெல் லாந்துதிக்கும் பரமபதங் காணவென்றே
தளமதையும் போங்களென்று தனித்தே யிருவர்களும்"
(வரி. 1735-36)

எனச் சுசீலவள்ளல் அம்மானையில் வருவது போன்றே,

"தீரன் கவுரிதனைச் சிவகங்கை சேருமென்று
அனுப்பிவிட்டுப் போகவிட்டு அப்பால் தளத்துடனே"
(பக். 270)

எனச் சிவகங்கைச் சரித்திரக்கும்மியும் அம்மானையும் என்ற நூலிலும், 'தளம்' (படை) எனும் சொல் ஆளப்படும்.

1. பேராசிரியர் தெ. பொ. மீ. மாகபுராண அம்மானை. முன்னுரை. பக். 19.

2. சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூல்நிலைய வெளியீடு 34. பக். 107.

பிறிதொரு எடுத்துக்காட்டும் காணலாம். இந்நூலில் இந்திரகோமானைக் கண்ட பெண்டிர்,

"வீரனெனும் அர்ச்சுனனோ? விகர்ணனோ?..." என வியக்கின்றனர். இதே பாங்கில், இராமப்பய்யனைக் கண்ட மங்கையர் நிலையும் இருந்ததாகக் காண்கிறோம்.

"வீமன்காண் என்பாரும் விசயன்காண் என்பாரும்"[1]
என இராமப்பய்யன் அம்மானையில் பாடப்பெறுவதைக் காணலாம்.

இன்னும், இறைவாழ்த்தில் 'முன்னடவாய்' எனலும், நூலிறுதியில், 'சொன்னோர், கேட்டார் வாழி' எனப்பாடுதலும், 'வெடுவெடென' 'கிடுகிடென' என்றாங்கு இரட்டைக் கிளவி வரலும், காதல், வீரம் இவற்றைச் சிறப்பாகப் பாடுதலும் அம்மானை நூற்களின் பொதுத் தன்மைகளாம்.

## வழக்குச் சொற்கள்

இந்நூலில் எண்ணற்ற வழக்குச் சொற்களும், தொடர்களும் விரவிக்கிடக்கின்றன.

"சுருக்காக நீங்கள் சென்று,"
"நீபாது காராவிட்டால் நெஞ்சைப் பிளந்திடுவேன்,"
"நாமளிரு பேரும்இந்த நாழிகையி லேபறந்து,"

'கக்குதிரை', 'பெலத்துக்கு', 'வாரமென்றார்,' 'கெதியென்று' 'தும்பங்களைவேன்', 'அம்மன்துரை', 'முழித்தகண்ணு மூடாமல்" 'நாயங்கள்', 'வாரவரை,' என்றாங்கு காணக்கிடக்கின்றன.

"இவ்வாறான வழக்குச் சொற்களையெல்லாம் பிழையென ஒதுக்காது ஆய்ந்தால், காலந்தோறும் ஏற்படும் சொல்மாற்றங்களை அறியமுடியும். கால அடைவில் ஒலி வேறுபடுதலும் அவற்றிற்குத்தக வரிவடிவுகள் மாறுதலும் மிகச் சாதாரணமான உண்மைகளாகும். இவ்வகையிலே இப்பிழைகளும் பயன்படும் என்பது உறுதி. இவைகளேயன்றி ஏடு எழுதுவோரால் நேர்ந்த பிழைகளும் பலதிறத்தனவாம்.

1. இராமப்பய்யன் அம்மானை. வரி. 2226. சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு 17.

அன்றியும் பாட பரிசோதனையிலும் மூலச்சுவடிகளின் பரிசோதனையிலும் இப் 'பிழைகளை' ஆராய்ந்து வகைப்படுத்துதல் விஞ்ஞான சாஸ்திர நோக்குப்படி இன்றியமையாததாகும்''[1]. இக்கருத்துக்கிணங்கவே, இவ்வம்மானை நூலில் காணும் சொல் - ஒலி மாற்றங்களையும், வடசொற்களின் மாற்றங்களையும் காணல் தகும்.

## சொல் – ஒலி மாற்றங்கள்

'வெற்றி' என வரவேண்டிய இடங்களில் 'வெத்தி' எனவும், 'மகிழ்ச்சி' என வரவேண்டிய இடங்களில், 'மகிட்சி' எனவும் வந்துள்ளன. இன்னும், சாரதிக்கு - சாரதிக்கி; அதனால் - அதினால்; யாற் - ஆர்; ஐம்பத்தாறு - அம்பத்தாறு; செய்தி-சேதி; மனைவி-மனவி; தொலை-துலை; என்றபடி எண்ணிறந்த ஒலிமாற்றங்களைக் கண்ணுறலாம். இவைகளை ஆய்வார்க்கு, காலந்தொறும் ஒலிமாற்றங்கள் எங்ஙனம் ஏற்பட்டுள்ளன என்பது தெளிவாகும்.

## வடமொழிச் சொற்கள்

மேற்குறித்த வழக்குச்சொற்கள், ஒலிமாற்றங்கள் போன்றே, வடசொற்களையும் ஆய்தல் தகும். இவ்வாசிரியர், வடசொற்களுக்குத் தமிழெழுத்திட்டுப் பாடியுள்ளார்.

ஜலம்-செலம்; விஷம்-விசம்; கடாக்ஷம்-கடாச்சம்; காஷ்யபர்-காசிபர்; அந்தக்ஷணம்-அந்தச்சணம்.

எனப் பல காணலாம். சுசீலவள்ளல் அம்மானை எனும் இந்நூலெழுந்த பிற்காலத்து, தமிழில் வடசொற்கள் புணர்த்து எழுதுவது எளிதிற் காணக்கூடிய செயலாம். இதற்கொப்பவே இந்நூலும் அமைந்துள்ளது என்பது அறியத்தகும்.

## பல்சுவை நூல்

இனி, இழுமென் மொழியால் விழுமியது நுவலும் இந்நூலின் சுவை அருமையைச் சிறிது காணலாம். இவ்வம்மானையில் சில அரிய உவமைகள் விரவிக்கிடப்பதைப் படிப்பார் உணரலாம். காட்டாக,

---

1. S. வையாபுரிப்பிள்ளை. திவ்யப்பிரபந்தம் - முதலாயிரம். முன்னுரை. பக். XI.

"பாற்றுளிதான் வெந்தநெய்யிற் பட்டதுபோ லேயிரைந் தான்!"

என்று ஓர் உவமை வருகிறது. வெந்த நெய்யினில் குளிர் பாலின் துளிபட்டால், 'சொய்'யென ஒரு இரைச்சல் கேட்கு மல்லவா? அதுபோல அவனும் கோபத்தில் இரைந்தானாம்! பிறிதோரிடத்தில்,

"பூணுலக்கைப் பைங்கொடியை" என வருகிறது. பூண் பிடிக்கப்பட்ட கரியநிற உலக்கை, பார்ப்பார் கண்ணைக் கவரும்படியாக இருக்கும். அதனைப் பெண்ணுக்கு உவமை யாக்கிப் பாடியுள்ளார் புலவர்.

ஆசை தருங்கோடி அதிசயங்களிலே ஓசை தருமின்பம் உவமையிலா இன்பமன்றோ?

"மன்மதனோ? யிந்திரனோ? மாலோ மறையவனோ?
பொன்மான்பின் னாற்றுடர்ந்த பூமா னிராகவனோ?"
"மன்னர் நெருங்கிவர மந்திரிகள் ஆர்ப்பரிக்க
அன்ன நடைமாதர் அசைந்தே நடித்துவர!"

இவைபோன்ற இடங்கள் இதன்கண் பலப்பல.

கருத்துக்களைத் தொகுத்தும் வகுத்தும் படிப்பார் நெஞ்சையள்ளும் பாங்கில் தருகின்றார் இந்நூலுடையாராகிய குமாரசாமிக்கவிராசன்.

"பெண்ணால் மடிந்தவர்கள் பேருலகில் மெத்தவுண்டு;
கண்ணான சானகியால் கயிலைஎடுத் தான்மாண்டான்!
அனலிற் பிறந்தாள்மே லாசைவைத்து நின்கொடியான்
மனவிகிளை தம்பியோடு மாண்ட தறிந்திலையாய்!
அகலிகை தான்சுகித்து ஆயிரங்கண் யோனிபெற்றான்
மகிதலத்து(க்) கன்னிகையால் மாள்வதுநீ நிச்சயமே!"

இவ்வாறு, பெண்ணால் மடிந்தவர்களைப் பட்டியல் போட்டு நயம்பட எழுதிச் செல்கிறார் ஆசிரியர். பிற்காலக் கவிவாணர் களிடையே இவ்வாறு தொகுத்துக் கூறும் பாங்கு இருந்

தமையைக் காணமுடிகிறது. மனுநீதிக்காதல்[1] எனும் நூலை இதற்குத் தக்க எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

பிற்காலத்துத் தோன்றிப் பெருகிய சிற்றிலக்கியங்களை யெல்லாம் காணின், சிற்றின்பக் கூறு அவற்றுள் பயின்று வரல் தெளிவாகும். அதற்கொப்பவே, இந்நூலிலும் சிற்றின் பக்கூறு சிறந்து காணப்படுகிறது. ஆடவரைக் கண்ட பெண்கள் நிலை (வரி 1543 முதல் 1550 முடிய) ; மங்கையரைக் கண்ட ஆடவர் நிலை (1551 - 1564 ), இந்திரகோமான் சவுரி கூடல் (950 - 973) ; முதலிய பகுதிகளில் அகச்சுவை நனிசொட்டுகிறது.

நூலிடையே உரையாடலை அமைத்துச் செல்லும் அழகும் உள்ளத்தை ஈர்ப்பதாக இருக்கிறது. விபேகன் (சுசீலனின் அமைச்சன்), இந்திரகோமானின் மனைவி சவுரியை யாரென அறிய விரும்புகிறான். அதற்கு, ''யார் இவள்?'' எனக் கேட்க வில்லை ! ''யார் இந்தத் தாய்'' எனக் கேட்கிறான்! ஓர் அமைச்சனுக்கேயுரிய சொல் வன்மையோடு கேட்கும் விபேகனை, சொல்லின் செல்வராகப் படைத்திருக்கிறார் குமார சாமிக் கவிராசர்.

## வரலாற்றுக் குறிப்புக்கள்

இந்நூலின் கதைப்போக்கிலும், நூலிறுதியில் உள்ள நூலுடையாரின் தந்தை பற்றிய குறிப்புக்களிலும், பல வரலாற்றுச் செய்திகளைக் காணலாம்.

''நன்னயமான குன்றைமலை நான்காண
வேண்டுமென்றார்''

என ஓரிடத்தில் வருகிறது. இக்குன்றைமலை யாது? திருப்பரங் குன்றமா? குன்றக்குடியா? பிறிதோரிடத்தில் (வரி. 155) 'குன்றாக்குடி' என வரலான், அது காரைக்குடிக்கு ஏழு கல் தொலைவிலுள்ள குன்றக்குடியே எனத் துணியலாம்; அதன் பழைய பெயர் 'குன்றாக்குடி' என்பதும் அறியக் கிடக்கிறது.[2]

1. தெய்வச்சிலையா பிள்ளை எழுதியது.

2. ''கி. பி. 12-ஆம் நூற்றாண்டில் குன்றக்குடிக்குப் பெயர், 'திருக்குன்றக் குடி' என்பதாகும்''

—Dr. R. Nagaswami. Ramanathapuram, An Archaeological Guide, p. 85

இன்று முகவை மாவட்டத்தில் 'கோனாபட்டு' என்று வழங்கும் ஊர், அன்று 'கோனாடுபட்டு' என்று வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும் இந்நூல் வாயிலாக அறிகிறோம்.

தம்மைப் பாடிய புலவர்க்கு, அரசர்கள் பரிசாகப் பொருட்களை மட்டுமன்றி, பல ஊர்களையும் பரிசாக அளித்துள்ளமையை இங்கு காண்கிறோம். மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக் கவிராயருக்கு, ராசசிங்கமங்கலம்[1], பூசாரிபட்டி,[2] செம்மலவு பட்டி, புலவன்குடி, கவிராயர் பட்டி, கொத்தமங்கலம், கோனாடு பட்டி, மறவணியேந்தல், மண்மேட்டுப் பட்டி, செவ்லூர்,[3] தேனாட்சி பட்டி, காரைச்சரான் பட்டி, கருகைப்பிலான் பட்டி ஆகிய ஊர்கள் பரிசாக அளிக்கப்பட்டுள்ளன.

இவற்றில் சில அதே பெயருடன் இன்றும் வழங்குகின்றன; சில மருவி வழங்குகின்றன. காட்டாக, 'புலவன்குடி' என அன்று வழங்கியஊர், இன்று, 'பல்வான்குடி' என வழங்கி வருகிறது. இப்பலவான்குடி, குன்றக்குடியிலிருந்து பள்ளத்தூர் செல்லும் வழியில் இரண்டு மைல் தொலைவில் உள்ளது. அதேபோன்று, 'மண்மேட்டுப்பட்டி' என அன்று வழங்கிய ஊர் இன்று, 'மணமேல்பட்டி' என வழங்கப்படுகிறது. இவ்வூர், திருப்பத்தூரிலிருந்து காரைக்குடி செல்லும் வழியில் ஒரு கல் தொலைவில் உள்ளது.

இவ்வாறு, ஊர்களின் பெயர்கள் சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு எவ்வாறிருந்தன என அறிந்துகொள்ள அரிய கருவூலமாகவும் இவ்வம்மானை நூல் விளங்குகிறது.

## இயற்கையிகந்த நிகழ்ச்சிகள்

பொதுவாகத் தமிழ் நூல்களில் பிற்கால நூல்கள் இயற்கையிகந்த நிகழ்ச்சிகளை மிகக் கொண்டுள்ளன; முற்கால

1. ''இராஜசிம்மன் என்ற பல்லவன் பெயரால் வழங்கும் ஊர். இங்குள்ள பெரிய கண்மாயைக் கட்டுவித்தவனும் இவனே.''
(Tamilnadu District Gazetteers, Ramanathapuram, p. 942)

2. கோட்டாம்பட்டியிலிருந்து சுமார் 6 கல் தொலைவில் உளது.

3. பூலாங்குறிச்சியிலிருந்து மிதிலைப்பட்டி செல்லும் வழியில் 2 கல் தொலைவிலுள்ளது.

நூல்களில் இப்பாங்கினைக் காணவியலாது.[1] இந்நூல், இராமப்பய்யன் அம்மானை போலாது, கதைப்போக்கிலேயே பல அதீதக் கற்பனைகளைக் கொண்டிலங்குகிறது.

கந்தனே வணிகனாக வந்து இந்திரகோமானுக்குச் சவ்வீரநகர் பற்றிய கதையைக் கூறுகிறான். இந்திரகேசரி ஞான திருஷ்டியால் கண்டு, நாகேந்திரன் பெண்ணைக் கடத்திச் சென்றமை பற்றிக் கூறுகிறான். இந்திரகோமான், இந்திர கேசரி முதலானோர் வானுலகம் சென்று இந்திரனைக் கண்டு திரும்புகின்றனர்!

இவைபோன்ற அதீதக் கற்பனைக்கு இந்நூலிற் பல இடங்களைக் காட்டலாம். அறிஞர் மறைமலையடிகளார் கூறுவதுபோன்ற பிற்கால மரபின் தாக்குரவை இச்சுசீலவள்ளல் அம்மானையும் பெற்றுளது எனலாம்.

## ஆசிரியரின் பத்திமை

இச்சுசீலவள்ளலம்மானை பல்சுவைநூலாக அமைவதோடு, ஒரு சிறந்த பக்திநூலாகவும் மிளிர்கிறது. கதைமாந்தர்களின் பக்தியோடு, நூலாசானின் பக்தியும் பளிச்சிடுகிறது. சுசீலன் சிறந்த பக்திமானாக விளங்குகிறான். அவனுக்கு மகன் தோன்றியது கந்தன் அருளாலே என்கின்றார் ஆசிரியர். இறுதிக்கண், இறைவனே காட்சியும் தருகிறார்!

இவைமட்டுமல்லாமல் இறைவனைப் பற்றிக் குறிக்குமிடங்களிலெல்லாம் இக்குமாரசாமிக் கவிராசன் நெக்குருகிப் போவதை அறியலாம். குச்சரன் இறைவனோடு இரண்டறக் கலக்க விரும்புகிறான்.

"மெய்க்கொண்ட சத்தியுடன் மேவுஞ் சிவன்பதத்தைக்
கண்டு தொழுது பிறவாநெறி கைப்பிடித்துக்
கொண்டுசா யுச்சியவழி கூடவேண் டுங்குயிலே!"

என்று எழுதிக்காட்டுகிறார் ஆசிரியர்.

---

1. மறைமலையடிகள். முற்கால பிற்காலத் தமிழ்ப் புலவோர். பக். 151.

"எவ்வாதை வந்தாலும் மெந்தாய்குன் றக்குடியார்
அவ்வாதை யைத்தீர்த்தார் அவர்அருளால் எண்ணாளும்
வாழ்ந்திடுவீர்!" என வாழ்த்துகிறான் சுசீலன்.

இந்திரகேசரிக்குச் சஞ்சிதர் அறிவுரை கூறும்போது,

"அந்து பொறியடக்கி ஐந்தெழுத்தை உச்சரித்து
சிந்துஅனற் கண்ணுடைய சிவனைத் தொழுதுநின்றால்
நாடிவந்து வேணவரம் நன்மையுடன் கேளுமென்பார்"!

என்கிறார். இவ்விடங்களில் இறையோடு ஒன்றிப்பாடும் ஆசிரியரை நாம் காணமுடிகிறது. முதலிலிருந்து முடிவுவரை பத்திமை அடிச்சரடாக அமைந்துகிடப்பதை நோக்கின், இந்நூல் சிறந்த பக்திநூலாக ஆமாறு விளங்கும்.

## நூலாசிரியர்

சுசீலவள்ளல் அம்மானையின் இறுதிப் பகுதியில், நூல் எழுதிய ஆசிரியரின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அழகிய சிற்றம்பலக் கவிராயர் மகன் குமாரசாமிக் கவிராசன் என்பாரே அவர். "இற்றைக்கு முன்னூறு ஆண்டுகட்கு முன்னர் (கி. பி. 1650 அளவில்), மகாபலிபுரத்தில் பிறந்த சிற்றம்பலக் கவிஞர் வள்ளல்களை நாடித் தென்னாடு சென்றார்.[1] அங்கு சேதுபதியைப் புகழ்ந்து 'தளசிங்கமாலை'எனும் நூல் பாடியதற்காக மிதிலைப்பட்டியைப் பரிசாகப் பெற்றார்.[2] அன்றியும், 'வெங்களப்ப நாயகர் குறவஞ்சி' என்ற மற்றொரு நல்லிலக்கியத்தையும் இச் சிற்றம்பலக் கவிராயர் படைத்துள்ளார்.[3] சிற்றம்பலக் கவிஞன் கொடையாகப் பெற்ற பட்டிகளை இந்நூல் படிப்பார் எளிதிலறியலாம். இத்தகு சிறப்புக்கள்பெற்ற அழகிய சிற்றம்பல கவிஞனின் மகன் இவ்வம்மானை ஆசிரியர் என்பது இந்நூலுக்கு அணி சேர்ப்பதாம்.

1. தமிழ்ப்புலவர் வரிசை. கழக வெளியீடு, பக். 91.
2. ரா. இராகவையங்கார், சேதுநாடும் தமிழும், பக். 16.
3. தமிழ்ப்புலவர் வரிசை. பக். 92.

இக் குமாரசாமிக் கவிராயர் வர்க்க வெண்பா எனும் பக்தி நூல் ஒன்றையும்[1], போஜராஜன் சரித்திர அம்மானை[2] ஒன்றையும் யாத்துள்ளார். அவைகளின் பெற்றி இவரின் நுண்மாண் நுழைபுலத்தைப் புலப்படுத்தும்.

இத்தகு நற்புலவராம் குமாரசாமிக்கவிராயரின் குடும்பத்தில் தோன்றிய பலரும் பெரும் புகழ்வாய்ந்த புலவர் பெருமக்களாகத் திகழ்ந்துள்ளனர்.

குமாரசாமிக் கவிராயரின் தமையனார் குழந்தைக் கவிராயர். இக்கருத்தை போஜராஜன் சரித்திர அம்மானை[3] எனும் சுவடியிலிருந்து அறிகிறோம். அதில், "என் தமையனார் குழந்தைக் கவிராயர் இயற்றிய வெண்பா" என எழுதப்பட்டுள்ளது. இக் குழந்தைக் கவிராயர், 'நல்லாண்டவர் பேரில் கும்மி,'[4] 'திருட்டுக் கும்மி'[5] முதலிய நூல்களை யாத்துள்ளார். இக்குழந்தைக் கவிராயரின் புதல்வரும் ஒரு மகா கவிஞரே! அவர் பெயர் பாண்டிக் கவிராயர் என்பதாம். அவர் எழுதிய நூல், 'நளதமயந்தி கும்மி'[6] ஆகும். இப்பாண்டிக் கவிராயரின் சகோதரியும் நற்புலவரே. அவரின் பெயர் புலப்படவில்லை. அவர் யாத்த நூல்கள் 'மேனகை சரித்திரம்'[7] 'வள்ளியம்மை சரித்திரம்'[8] என்பவையாம்.

## நூலின் காலம்

இதன்கண் சேதுபதியொருவன் குறிக்கப் பெறுகிறான். இவனே இராசசிங்கமங்கலத்தை இந்நூலாசானின் தந்தைக்கு ஈந்தவன். சேதுபதிகளின் வரலாறு கி. பி. 1605-க்குப் பின்னே தொடங்குகிறது.[9] ஆகலின், இந்நூலும் கி. பி. 1605-க்குப் பின்னெழுந்த ஒரு நூல் எனத் துணியலாம்.

---

1. அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம். சுவடி எண். R. 4981.
2. அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம். சுவடி. எண். R. 5028. (போசராசன்-கி. பி. 11.)
3. சென்னை, அ. கீ. சு. நூலகம். சுவடி எண். R. 5028.
4. சென்னை, அ. கீ. சு. நூலகம். சுவடி எண். R. 5030.
5. சென்னை, அ. கீ. சு. நூலகம். சுவடி எண். R. 5031.
6. சென்னை, அ. கீ. சு. நூலகம், சுவடி எண். R. 5035.
7. சென்னை, அ. கீ. சு. நூலகம். சுவடி எண். R. 5053.
8. சென்னை, அ. கீ. சு. நூலகம். சுவடி எண். R. 5054.
9. சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூல்நிலைய L. R. vol. XXI. பக். 401.

திருமலைச் சேதுபதியிடம் பரிசில் பல பெற்றவர் அழகிய சிற்றம்பலக்கவிராயர்.[1] இத்திருமலைச் சேதுபதி யார் என்பதை அழகிய சிற்றம்பலக் கவிராயர் வாக்காலேயே உணரலாம்.

"...திருப்புல்லாணிக் கோபுரங் கட்டிவைத்த
விஜயரகுநாத சேது தளசிங்கமே"[2]

என்பதினின்றும், விஜயரகுநாத சேதுபதியே திருமலைச்சேதுபதி எனலாம்; ஏனெனில், அழகிய சிற்றம்பலக் கவிராயர் இராமநாதபுரம் திருமலைச் சேதுபதி மீதுதான் 'தளசிங்க மாலை' எனும் நூல் ஒன்றைப் படைத்தளித்து நன்கொடை பெற்றுள்ளார்.[3]

இந்த ரகுநாத சேதுபதியின் காலம் கி. பி. 1647-72. ஆகும்.[4] ஆகவே, அழகிய சிற்றம்பலக்கவிராயரின் காலமும் இதுவேயாம்.

இவ்வழகிய சிற்றம்பலக் கவிராயருக்கு, மல்லையூர் சிற்றம்பலக் கவிராயர் என்ற பெயரும் உண்டு.

"இம் மல்லையூர் சிற்றம்பலக் கவிராயர் சிவந்தெழுந்த பல்லவராயன் மீது ஓர் உலாப் பாடியுள்ளார்.[5] விசயரகுநாத சேதுபதி, சேலம் கட்டிமுதலி,[6] வீர திருவேங்கடநாதன் முதலியோர் மீதும் பாடல்கள் பாடியுள்ளார். சிவந்தெழுந்த பல்லவராயனின் காலம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் இடைக்காலமாம். இன்னும் இச் சிற்றம்பலக் கவிராயர், மருங்காபுரி வீரபூச்சைய நாயக்கர் மீது ஒரு பிள்ளைத் தமிழும் பாடினார். அதற்காக

---

1. ரா. இராகவையங்கார். சேதுநாடும் தமிழும். பக். 5.

2. சேதுநாடும் தமிழும். பக். 5.

3. தமிழ்ப் புலவர் வரிசை, பக். 93 (நான்காம் புத்தகம்).

மைசூர் மன்னன் கண்டீசுவரனின் முற்றுகையை முறியடித்தமைக்காகத் திருமலைநாயக்கர் இரகுநாத சேதுபதிக்குத் தந்த பட்டமே 'திருமலை சேதுபதி' யாம். (Dr. R. Nagaswami. Ramanathapuram. An Archaeological guide p. 32.

4. Tamilnadu District Gazetteers, Ramanathapuram (1972).p. 82.

5. இச் சிவந்தெழுந்த பல்லவராயன் உலாவில், சிறுபிரபந்தங்கள் 96 என்ற குறிப்புக் காணப்படுகிறது.

6. கெட்டி முதலியார்களின் வம்சாவளி, சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூல்நிலையச் சுவடி எண் D. 2955-இல் விளக்கப்பெற்றுள்ளது.

இரண்டு ஊர்களைத் தானமாகப் பெற்றார். தானம் கொடுத்த ஆண்டு சகம் 1569 (கி.பி. 1647). இவ்வாண்டு, சிவந்தெழுந்த பல்லவராயன் காலத்துக்கு ஒத்துவருவதும் குறிப்பிடத்தக்கது.''[1]

ஆகலின், கி. பி. 17-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் பெரும்புகழ் நூல்கள் யாத்தவர் அழகிய சிற்றம்பலக் கவிராயர் என்பது பெற்றாம். எனவே இவர் மகனார் குமாரசாமிக் கவிராயரின் காலமும் - சுசீலவள்ளல் அம்மானையின் காலமும் கி. பி. 17-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியாகலாம்.

## மூலச்சுவடி

இவ்வெழில்மிகு அம்மானை-இதுவரை அச்சில்வாரா ஒன்று. சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூல்நிலையத்தில் ஓலைச்சுவடி வடிவில் இருந்ததாகும்.[2] சிறிது சிதைந்துள்ள அவ்வோலைச் சுவடியில் சில விடங்களைப் படித்தறியக் கூட வில்லை. அவ்விடங்களில் புள்ளிகளிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

இதன்கண் காணலாகும் உட் தலைப்புக்கள் யாவும் படிப் பார் எளிமைக்காகப் பதிப்பாசிரியரால் இடப்பட்டனவாம். சில விடங்களில் இருக்கவேண்டிய எழுத்துக்கள் எனக் கருதப்படும் எழுத்துக்கள் அடைப்புக்குறிக்குள் இட்டு எழுதப்பெற்றுள்ளன. மூல ஓலையில் அவை இல்லையெனக் கொளல் வேண்டும். இந் நூல் நிலையத்தில் இவ்வொரே சுவடி மட்டும் உள்ளதால் ஒப்பு நோக்கிக் காண இயலவில்லை.

**எஸ். சௌந்தரபாண்டியன்**
பதிப்பாசிரியர்.

1. டாக்டர். இரா. நாகசாமி ''கல்வெட்டு''. காலாண்டு இதழ் 6. பக். 14.
2. ஓலைச்சுவடி எண். R. 4981.

# சுசீலவள்ளல் அம்மானை*

## முருகர் துதி

அன்னையுநீ யப்பனுநீ யானகுரு தெய்வமுநீ
முன்னையுநீ பின்னையுநீ முற்றிலுநீ! - யென்னையுநீ
பாராமல் வேறு பராமுக[1] மாமுருகா,
யீராறு கண்ணா லெனை![2]

"உள்ளா யடியர(ங்)கத் துற்றா யுறார்தமையுங்
கொள்ளாய் குறிஞ்சிக்[3] குமரேசா - தள்ளாயேல்
சந்ததிபா ரம்பரையாய்ச் சார்ந்தோநின் றாள்[4]சரணாய்
பந்தவினை தீர்த்தாளென் பால்!"

## கீர்த்திக் கவி

பூவுலகோர் தான்புகழும் பூலோகச்
சக்ரவர்த்தி புகழே பூண்டோன்;
மேவுகுடைக் கன்னனினு[5] மேன்மடங்கு
கொடைகொடுப்போன் மிகுந்த நூல்கள்
தாவுபடா[6] மற்றெரிவோன் தனதநிதி
இவன்பா லேதான் பெற்றால்
நாவுடையோர் தன்புகழைச் சொல்லப்
போகாதா[7] யினும்யான் நவிலுவேனே!

*"இவை - சுசீலன் அம்மானை. முருகர் துணையாக வேண்டியது. வாலை முன்னிற்(க). அழகிய சிற்றம்பலக் கவிராசர் குமாரன் குமார சாமிக் கவிராஜன் இயற்றியது. ஷியார் இயற்றிய வர்க்கவெ(ண்பா)வு மிதிலிருக்கின்றது".—இது ஓலையிற் காணும் குறிப்பு.

1. பராமுகம் - கவனிப்பின்மை.

2. "முருகொத் தீயே முன்னியது முடித்தலின்" (புறம்: 56-14) என்ற நக்கீரர் கூற்றுப்படி, எடுத்த செயலை வெற்றியுடன் முடிப்பவன் முருகனாதலின் முதற்கண் முருகனை வணங்குகிறார் குமாரசாமிக் கவிராயர்.

3. பழந்தமிழ் நூற்கள் கண்ட நான்கு நிலங்களில் முருகனே குறிஞ்சிக் கடவுள்; குறிஞ்சி - மலையும் மலைசார்ந்த இடமும்.

4. ள, 'ழ' என்றே ஓலையிற் காணப்படுகிறது.

5. கன்னன் - கர்ணன்.

6. தாவுபடா - குறைவு படாமல், ஐயந்திரிபற.

7. போகாது - நிரம்பாது.

வள்ளலிலே முதல்வள்ளல் ! மாரனிலே[1]
முதல்மாரன் ! வணங்கார் தம்மைத்
தள்ளரிய வில்லாளி தனஞ்செயனும்[2]
அஞ்சிடுமால் தக்கா ருண்டோ?
கள்ளமில்லாப் பொறைதயவு சத்தியவான்
நீதிநூற் கரையுங் கண்டோன் !
உள்ளமகிழ் அமிர்தபுரந்[3] தனைப்புரப்போன்
சுசீலமன்ன னும்பர்[4] மேலோன் !

## நூல்

### கடவுள் வணக்கம்

சீர்பெருமம் மானையொன்று செப்பமன தொப்புடனே
பேர்பெருகும் யானைமுகப் பிள்ளையார் காப்பாமே;
யானையுரித் தேயுடுத்து மாதியரன் பாதமதை
நானே முடிசூட்டி நானுமற வேன்,பிறவேன்
அய்யனிடப் பாகமதில் ஆனந்தங் கொண்டிருக்கும்
பொய்யாத பார்வதியாள் பொற்பாதம் யான்மறவேன்!
திருப்பாற் கடலில் திவ்விய வரவணையில்[5]
விருப்பாகக் கண்வளரும்[6] விண்ணவர்சி காமணியை
சங்குசக்கர முள்ளவரைச்[7] சங்கரிக்கு முன்னவரை[8]
எங்குநின்ற மாயவரை யென்னாளு நான்மறவேன்!

1. மாரன் - மன்மதன். பேரெழில் வாய்ந்தவன் சுசீலவள்ளல் என்பது கருத்து.

2. தனஞ்செயன் - அர்ச்சுனன்.

3. அமிர்தபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவன் என்க.

4. உம்பர் - வானுலகோர்.

5. அரவணை - பாம்பணை.

6. கண்வளரும் - துயிலும்.

7. திருமால்.

8. சங்கரிக்கு முன்னவர்-பார்வதி தமையன்,

சீதேவி பூதேவி சேர்ந்திலங்குஞ் செங்கணரை
வாதே புரியசுரை [1] வாட்டியிடும் வல்லவர்தம்
உந்திக் கமலமதில் உற்பத்தி யாம்பொருளை
பந்தத் துள்ளாகப் படைத்தவண்ண வாகனனை
நீங்காமல் நாவில் நிறைந்திருக்கும் வாணியென்றும்

நீங்காமல் என்நாவில் நிருத்தமிடுஞ் [2] சற்குணியை
முக்கால மும்மறவேன், முன்னநின்று வாக்கருள்வாய்!
எக்காலும் நீங்கா திருப்பாய் இருதயத்தே!
சந்ததிபா ரம்பரையுஞ் சற்றும் பிரியாமல்
சிந்தைகுடி கொண்டிருக்குஞ் செல்வமுத்தை யான்மறவேன்!

சேவற் கொடிபிடித்துச் சித்திரமயி லேறியெந்தன்
ஆவலடங் கக்கொடுக்கும் ஆறுபடை வீட்டானை
திக்குள்ளார் போற்றுந் திருப்பரங்குன் றுள்ளானை
சுக்குதிரை மோதுங் கடற்செந்தூ ருள்ளானை
அன்பர் பணியும் பழனிமலை யுள்ளானை

இன்பமுடன் சோலைமலை யென்றுமக லாதவனை
திருவே ரகம்நிறைந்த தெய்வானை நாயகனை
குருவா யரற்கோதுங் [3] குன்றுதோ ருள்ளானை
சூரர்குலம் வேரறுத்த சுப்பிரமணிய மெய்ப்பொருளை
பாரோர் துயர்தீர்க்கும் பன்னிருகை யுள்ளானை

குஞ்சரி[4]வள் ளிக்குயிலைக் கொண்டிணையும் திண்புயனை
தஞ்சமென்ற யேழைகளைத் தாயன்பாற் காப்பவனை
கலியுகத்தில் மெய்(க்)கதிகள் காட்டும் கடம்பனை
சலியாமல் முப்போதுஞ் சக்திதந்தா னைப்பணிவேன்
நிர்வாண சுரூபமென்று நீங்காத காரிதன்னை

---

1. அசுரரை.
2. நிர்த்தமிடும் எனவுள்ளது. நிருத்தமிடும்-நடனமாடும்.
3. அரனுக்கு ஓதும்.
4. தெய்வயானை.

கெர்வமுள்ள பேர்தமையே கீண்டிடு[1]ஞ்சூ லாதரனை
சாரலுத்தி யானமதிற் சார்ந்திருக்குஞ் சாத்தா[2]தன்
பூரணை[3] புட்கலையாள் பொற்பாதம் நான்மறவேன்
தக்கனுட வேள்வி தனையழிப்பச் சங்கரன்பால்
உக்கிரகோ ரத்துடனே யுற்பத்தி யாம்பொருளை

அகோரமுள்ள வீரபத்திர அய்யன்றாள் யான்மறவேன்!
சிகாரவகா ரம்மகரஞ்[4]சே ரும்பொருளைச் சேர்ந்திடுவேன்!

## நாட்டுச் சிறப்பு

மாப்பலாத் தெங்கு மரமோங்கு மாநாடு
காப்பான வோடைந்து[5] தான்சூழ்ந்த நன்னாடு
சோலையுத்தி யானவனஞ் சொல்லரிய சுந்தரமும்

நீலவரைக் கொப்பாக நிற்கும் மலைவளமும்
அம்மலையின் மேலருவி யாடைகோ டையகலா[6]
செம்மையுடன் நாற்புறத்தில் [7]செறுசாரும் சார்ந்துவரும்
மந்திதா வும்விசையால் மலைமரத்தின் தேன்ராட்டுச்
சிந்தி யுடைந்துவெகு சீக்கிரத்தி லேபறந்து

மீறிவிழுந் தேநதியில் மேல்விசையா கச்சேர்ந்து
பீறியே கல்லிப்[8] பெருக்கெடுத்து ஓடியது
கண்டகண்ட மார்க்கமெல்லாங் கான்யாறாய்க் காலோடி[9]
மண்டலத்தில் மேன்மை மதிக்கும் அமுர்தபுரந்
தன்னிலேசெந் நெல்கன்னல் குங்குமம்மஞ் சளுந்தழைப்ப

---

1. கீண்டிடும் - பிளக்கும்.
2. சாத்தா - அய்யனார்.
3. பூரணை, புட்கலை - அய்யனார் தேவியர் பெயர்கள்.
4. சிவம்.
5. ஓடைகள் ஐந்து. இங்கு நீர்வளம் பாடப்பெறுகிறது.
6. மலைமீது நீர் தவழ்ந்து வருவது, ஆடை போர்த்தியுள்ளது போல உள்ளது. அந்நீர் கோடையிலும் வற்றாது வரும் என்கிறார்.
7. செறு-வயல்.
8. கல்லுதல்-துருவுதல்.
9. கால்-வாய்க்கால்.
''சரயுவும் பலகாலி னோடியும்'' (கம்ப. நாட். 60) (கி. பி. 12).

உன்னி வளர்கதலி யோடெலுமிச் சைபழுப்ப
வந்துநதி பாய்ந்த வளமோங்கும் நன்னகரம்
நந்துவரால் கெண்டைமுதல் நாளும்நீ ரில்வாழும்
செந்து[1] மிகுந்திருக்கும் சீரோங்கு நன்னகரம்
மேதி[2]களா லேர்பூட்டி மேன்மேலுஞ் சாலடிப்பச்

சாதிமள்ளர் வெண்கருப்பைத் தான்பறித்துச் சாடுதலால்
கொள்ளரிய முத்துவிரை கொண்டிரைத்தாற் போவிருக்கும்
கள்ளமில்லா மள்ளர்குலக் கன்னியர்கள் கூட்டிவந்து
பள்ளமேடு செப்பனிட்டுப் பாங்காய் நடவுசெய்ய
உள்ளமகிழ் வாய்க்குரவை யோலமுட னேநடுவார்

ஓங்கிவள ரும்பயிர்க்கு ஓருளமாம் நற்கதிர்கள்
தாங்கித் தலைவணங்கத் தான்மிகுந்த நன்னகரம்
இவ்வளங்கள் விஞ்சி யிலங்கும் அமுர்தபுரஞ்
செவ்வையுடன் வாழ்மனையைச் செப்புவே னம்மானை!

**நகரச் சிறப்பு**

நான்குதெரு வீதிகளும் நாகலோ கத்திணையாம்

வான்குலவும் மாளிகையும் வண்ணவண்ணக் கோபுரமும்
தேரோடும் வீதிகளும் சேர்ந்திலங்கும் மண்டபமும்
நீரோடை வாவிகளும் நேர்பளுங்கு மாளிகையும்
நான்மறையோர் தான்வாழும் நல்லதெரு வீதிகளும்
தானஎதிர்த்தா ரைத்துணிக்கும் சத்திரியாள்[4] வீதிகளும்

மேன்மைபெறுங் கல்மணிகள் விற்கும்வணி காள்தெருவும்[5]
தான்யேவ லேபுரியும் தாழ்சூத்திரர் தன்தெருவும்

---

1. உயிரினம்; ஜந்து என வழக்கில் உள்ளதே இவ்வாறு வந்துள்ளது.
2. மேதிகள் - எருமைகள்.
3. 'அம்மானே'. என ஓலையில் உளது.
4-5. சாத்திரியாள், வணிகாள் என வழக்காறாய் வந்தமை காண்க.

**படைச்சிறப்பு**

சூரியனைப் போய்த்தாவும் சொர்ண[1]நிகர் கோட்டைகளும்
பாரிய[2]நா கேந்திரன்முடி பாய்ந்திடு மாழகழியும்
ஆனை யகலாமல் அசைந்தாடும்[3] மண்டபமுந்
தானை[4] குதிரைகட்குத் தக்கதொரு பந்திகளும்[5]

**கொடைச்சிறப்பு**

தடைபடா மற்கொடுப்போர் தான்வசிக்கும் வீதிகளும்
வாங்குவார் யில்லையென்றே[6] வழிபார்த்து நிற்பவரும்
நாங்கொடுப்ப வாங்குமென்றே நாடிவந்தார் சொல்வதுவும்

**இன்னும் எத்தனையோ சிறப்பு!**

பைங்கிளிபோ லங்குறையும் பாவையரை யார்பகர்வார் ?
தங்கும்ரதி யையிழந்து தான்மார னிங்கிவர்பால்
ஏவற் றொழில்புரிந்தால் என்னவென்று நான்புகல்வேன்?
பாவாற் புகழ்படைத்த பன்மைசெறி மந்திரிமார்
சேர்ந்திருக்கும் வீதிச் சிறப்பதனைச் சொல்லுவதோ?
சார்ந்துநடு நாயகம்போற் சந்திரனொளி யேபரப்ப
நவமணிக ளால்முத்து நாகரிக மேடைகளும்
சிவமருளுங் கந்தர் திருக்கொலுவைச்[7] செப்பிடலாம்!

---

1. சொர்ணம் - பொன்.
2. பாரிய - பருத்த.
3. அசைந்தாடும் யானை, வலி மிக்கது எனப்பொருள்படும்.
''தாடாழ் படுமணி யிரட்டும் பூநுத
லாடியல் யானை'' (புறம் : 165) எனப் பெருந்தலைச்சாத்தனார் பாடுதலாலும் அறியலாம்.
4. தானை - படை; 'தாளுளந் தபுத்த வாண்மிகு தானை'' (புறம்; 205) என்றார் பெருந்தலைச் சாத்தனார்.
5. பந்தி - யானை குதிரை முதலிய நிற்கும் சாலை.
''இவுளிகள் கண்ணு பந்தியிற் கட்டத் தகுமென'' (திருவாலவா, 27, 16)
6. ''வண்மையில்லையோர் வறுமையில்லையால்'' எனும் கம்பர் வாக்கு நினையத் தகும். (நகர. 53.)
7. ஒளிபொருந்திய கந்தனின் தோற்றத்தைத் தமிழ் நூற்கள் சிறப்பாகப் பேசுகின்றன.
''உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு
ஓவற விமைக்குஞ் சேண்விளங் கவிரொளி!'' என்பார் நக்கீரர் (திருமுரு : 1-3)

### சுசீலமன்னன் அரசிருக்கை

அக்கொலுவில் வீற்றிருந்து அந்நகர் புரப்போன்
தக்கோர் புகழ்ந்தேற்றுந் தர்மன் சுசீலமன்னன்
மந்திரிமா ருஞ்சூழ மாமறையோர் ராசிசொல்லச்

செந்திரு வாழநின்று திருப்புயத்திற் கூந்தலாட
அன்பத்தாறு[1] தேசமன்னர் அங்குகப்பம்[2] கட்டிநிற்க
இன்பத்தால் மாதர்பணி யென்றும்அக லாதுசெய்ய
வீராதி வீரவந்து வீரன் கழல்பணிந்து
நேராரை[3]க் காட்டவென்று நின்றுகர முங்குவிப்ப

வானாட்டுப் பஞ்சதரு[4] வந்துஅரு குற்றதுபோல்
தானாட்ட மானபொருள் தான்கொடுக்கும் பொக்கிஷமும்
இருபா லினுமிருப்ப இந்திரனிலு யெண்மடங்காய்த்
தருகாமல் ரம்பையர்கள் மேனகைகள் தானடிப்பக்
கண்டுமகிழ்ந் தேயிருக்கும் காலே யன்னேரம்,

### சுசீலவள்ளல், தனக்குப்பின் அரசாள மகன் பிறக்கவில்லையே எனல்

விண்டிடுவா னோர்வசனம் விபேகனெனும் மந்திரிபால்,
"(நாமுமர சாண்டினிது) நாள்பலவா யாச்சுதினி
தாமுமுடி யாதுமைந்தன் தானுமில்லை மந்திரியே!
என்அரசைத் தாங்குதற்கே யேற்றதொரு நற்புதல்வன்
தன்னேரி லாதபுத்தி சாலி யொருதவந்தான்

செய்யவென்று யெண்ணுதுயென் சிந்தைப் படியாமோ?
பையயிதன் நுட்பமெல்லாம் பார்த்தெமக்குக் கூறு"மென்றார்!

### சுசீலவள்ளல் செய்யவேண்டியதை, அமைச்சர் கனவில் கூறல்

நல்லதென்று மந்திரிமார் நானூறு பேர்களுமே,
"வல்லவரே நாளை பதில்மொழிதான் சொல்வ"மென்னச்
சபைகலைந்து யாவர்களுந் தங்களில்ல மேசார்ந்து

1. ஐம்பத்தாறு.
2. கப்பம் - வரி.
3. நேரார் - பகைவர்; "நிதியந் திறையளந்தார் நேராரும்" (புறப். வெ மா. 3,10)
4. பஞ்சதரு - ஐந்து தேவலோக மரங்கள். அவை : சந்தானம், தேவ தாரம், கற்பகம், மந்தாரம், பாரிசாதம்.

உபயோக மாம்பொருளை யொவ்வொன்றாய் உள்ளுணர்ந்து
மற்றாநா ளைக்கொலுவில் மன்னர்மன்னன் முன்னம்வந்து
முற்றாலோ சித்துவந்தோம் மொய்ம்பு[1]வலி யுள்ளமன்னே
இம்மந் திரிகளிலே யென்னைமுதன் மந்திரியாய்ச்
செம்மைபெற வைத்தருளுஞ் சிங்கமே கேட்டருள்வீர் 120

குன்றுதோறும்[2] நின்றருளுங் குன்றைக் குமரேசா
என்றுமனத் தெண்ணி யிருந்தேன் கனவில்வந்து
''அஞ்சாய் விபேகனெனும் அன்புள்ள மந்திரியே
பஞ்சாயம் வேண்டாமென் பால்வந்தால் தந்திடுவோம்
வந்திடநீ சொல்பேர் வரந்தருவோ மென்று''சென்றார் 126

தந்திடுவா ரென்றுமந்திரி தான்உரைத்தான் மன்னர்முன்னே
சற்றுநின்ற மந்திரிகள் ''சொல்சரியே'' யென்றுசொன்னார்
மற்றுமுள்ளத் தேமதித்து மன்னவர்கோ மானுரைப்பான்,

**சுசீலவள்ளல் குன்றைமலை
போகவேண்டும் எனல்**

தேவர்சிறை தீரவென்றே செங்கவடி வேல்தீரன்
மூவர்களால் வெல்ல முடியாதகு ரனைவென்றான் 130

நாவலந்தீ வு[3]ள்ளவர்கள் நாடும் பொருள்கொடுப்போன்
சேவற் கொடியுடையான் சித்திரமயி லேறுசெல்வன்
என்னகத்தை நீங்காமல் என்றுநிறை வாயிருப்போன்
நன்னயமாங் குன்றைமலை நான்காண வேண்டு''மென்றார்

**பறையறைதல்**

அன்றுசென்று மற்றாநாள் ஆனைபடை சேனையோடும் 135

நின்றுவெளிப் ப(ா)டெ[4]ன்று நேர்முரசு சாற்றுமென்றார்
ஆனையின் மேலேற்றி அடித்தாரண் டங்கலங்க
தானை வெளிப்பமெ[5]ன்றே தானுரைத்துத் தானடிப்ப

---

1. மொய்ம்பு-மிக்க வலிமை.
''சூர்மருங் கறுத்த மொய்ப்பின் மதவலி'' (திருமுரு; 275) என்று நக்கீரர் பகர்வது காண்க.
2. ''குன்றுதோ றாடலும் நின்றதன் பண்பே'' (திருமுரு : 217) என்பார் நக்கீரனார்.
3. ஏழு தீவுகளில் ஒன்று. சம்பு (நாவலந்தீவு), பிலக்ஷம், குசை, கிரவுஞ்சம், சாகம், சால்மலி, புஷ்கரம். நம் நாடு நாவலந்தீவில் இருப்பதாகக் கருத்து.
4-5. சேனையுடன் அரசன் வெளிச் செல்வது.

### படைமக்கள் திரளுதல்

வந்துநிறைந் தார்கடல்போல் வச்சிரவேல் வில்லுடனே
இந்துநுத லார்கள்வெளி யேறிவந்தா ரென்சொலுவேன்!

மல்லிகைமுல் லையிருவாச்சி பச்சிலை கள்முடித்தே
நல்லியலார் ஓர்கோடி நங்கையரும் நாடிவந்தார்
ஆனை ஒருகோடி யுளை[1]யதனில் இருகோடி!
சேனையுமே நாற்கோடி தேர்(க்)கூட்டம் செப்பரிதே!
அதனிற் றலைமைபெற்றோன் நம்மன்ன ரைப்பணிந்து

''இதமுடனே காத்தருளும் எங்கோவே யேதுபணி?''
விண்ணப்பஞ் செய்யமன்னன் விள்ளுவான் சேனைகட்கே,

### சுசீலன் குன்றைமலைக்கேக விருப்பதாகக் கூறல்

தண்ணளி[2]யால் நோக்கித் ''தளப்[3]பெருக்கைத் தான்கூட்டிக்
குன்றைமலைக் கேகுதற்கே கொண்டோங்'' (கேட்)டதனில்
இன்றளவிற் செல்லுவீ ரென்றுரைத்தா ரேகினரே.

### சுசீலன் தன் மனைவி போகவதியை அழைத்தல்

மன்னவனு மன்னேரம் மாளிகையு ளுட்புகுந்து
பொன்னா பரணமின்னும் பொற்கொடியாள் போகவதி
மின்னாள் வடிவை விளம்பரிது மேதினியோர்
''பெண்ணேயென் கண்மணியே, பேசரிய கிஞ்சுகமே[4]
யின்னேகுன் றாக்குடிக்கே யேகிடுவோம், என்மயிலே

வாராயென்'' றேயுரைப்ப வண்ணநிறப்[5] போகவதி,
''தாராள நின்மனதின் சம்மதந்தார் வேந்தனெ''ன்றாள்.

---

1. உளை - குதிரை.
2. தண்ணளி - இரக்கம். ''தண்ணளி வெண்குடை...வேந்தன்'' (பெரியபு. மநுநீதி. 45) (கி. பி. 12).
3. தளம் - படை ''எதிர்த்து வெட்டுந் தளமோ'' (தாயு. பராபர. 383) (கி. பி. 18).
4. கிஞ்சுகம் - கிளி.
5. வண்ண நிறம் - அழகான நிறம்; வண்ணம் - அழகு.

### பரிவாரமுடன் குன்றக்குடி நோக்கிச் செல்லல்

மன்னவரும் போகவதி மங்கையுஞ்சிங் காரமுடன்
மின்னொளிவு (ஒப்பனைகள்) மேன்மேலு மேபுனைந்து
பொன்னி ரதத்தேறிப் புறப்பட்டா ரன்னேரம்

சென்னிமகு டஞ்சொலிப்பச், சேடியார் ஆர்த்திசெய்ய
சொர்ணக் குடைபிடிக்கச் (சொன்னார்கள்) கட்டியர்கள்
"கர்ணமக ராசன்வந்தான் தர்மனைவெல் மாரன்வந்தான்
சூராதி சூரன்வந்தான்! சொல்லில்அரிச் சந்திரன்வந்தான்
தீராதி தீரனெ''ன்றே தேவகட்டியங் கூறினரே!

நானூறு மந்திரிமார் நானூறு தேரேறி
மேனூறு வாத்தியஒலி மேன்மேல தாய்முழங்க
முன்னடப்ப யானைபரி முற்றிலுங்கா லாள்நடக்க
பின்னடப்ப வாத்தியங்கள் பேராறாய்[1]த் தாநடக்க
காளையருங் கன்னியருங் கைகோர்த்துத் தான்செலவே,

வாளைவென்ற கண்மடவார்[2] வந்துநட னம்புரிய
காடுமலை மேடுமடுக் கான்[3]யாறுந் தான்கடந்து
நாடுநக ருள்ளதெல்லா(ம்) நாள்மூன் றிலேகடந்தார்!

### குன்றக்குடி வலம் வருதல்

எந்தையாம்[4] கந்த ரிருக்குங்குன் றாக்குடியை
சிந்தைமகிழ்ந் தேகண்டு சென்னிது ளக்கிமன்னன்

ஏறும்ரதம்[4] விட்டிறங்கி யெங்கோன் கிரிவலமாய்
மீறுதனத் தாள்கரத்தை மென்கையி லேபிடித்து(ச்)
சுற்றிவட பாரிசத்தில்[5] சொல்[6]முல்லை தாண்டவமாய்
வெற்றிபெறச் செய்தடத்[7]தின் வேலைநுட்பம் என்னசொல்
வேன்?

---

1 போராறாய் என்றே ஓலையிலுளது.

2. கண்ணை வாளுக்கு ஒப்பிடுதல் மரபு.
''வரிசிலை யண்ணலும் வாட்கண் நங்கையும்'' என்றார் கம்பர்.

3. கான் - காடு.

4. யெந்தையாம், யேறும்ரதம் என்றே ஓலையில் உள்ளன.

5. பாரிசம் - திசை, பக்கம். ''காவிரிக்கு வடபாரிசத்தில்'' (திருப்பு. 183) (கி. பி. 15)

6. சொல் - நெல்.

7. தடம் - மலை.

## யோகி ஒருவரைக் கொண்டுவர மந்திரியிடம் சொல்லல்

*அந்த நதிக்கரையில் ஆவலுடன் கூடாரம்*
*விந்தைபெற வேயடித்து வீற்றிருந்தான் மன்னவனும்*
*மந்திரிமார் சேனைகட்கும் மற்றுமுள்ள தானைகட்கும்*
*இந்திரவி மானம்போல் இசைந்தடித்தார் கூடாரம்*
*வீற்றிருந்த மன்னவனும் விள்ளுவான் மந்திரிக்கு[1]*
*நாற்றிசையோ ரும்புகழ நாநடத்தும் யாகமதை*
*சாற்றுதற்கு மேலான சாத்திர நிபுணனுமாய்*
*மாற்றுரை கொடுப்பவராய் மந்திரமுங் கற்றவராய்*
*நல்லவரா(ய்) யாகம் நடத்தும்த போதனராய்[2]*
*ஒல்லை[3]யினி லிங்கழையென் றோதினான் மந்திரிக்கே.*

## மந்திரி யோகியைக் கூட்டிவரல்

*மன்ன னுரைத்ததனை மந்திரியா லோசனையாய்*
*யென்னசெய்வேன் யோகியரை யெங்குசென்று யான்காண்பேன்*
*என்றே குமரர் இருதாளை யுள்[4]நினைந்து*
*நின்றே வருந்தஅங்கு நேரில்வந்தார் யோகியைப்போல்*
*கண்டு பணிந்துமந்த கரிகால்வளவன்[5] சொற்படியே*
*கொண்டுவந்து காட்டிவிட்டார் குன்றைக் குமரேசன்*
*என்றுமன்னர் முன்னாக யிட்டுவரு முன்னெழுந்து*

## யாகம் செய்துதர யோகியைச் சுசீலன் வேண்டல்

*சென்றுஅர சன்பணிந்து செப்புவார் யோகிமுன்னே*
*புத்திர காமேட்டி புகழ்பெரிய யாகமதைச்*
*சித்திரமாய்ச் செய்யவென்று சிந்தைகொண்டேன் செய்திடுவீர்*
*என்றுமரு காற்பணிந்து எழுந்துகை கட்டிநின்றார்.*

---

1. 'மந்திரிக்கி' என்பதே ஓலை.
2. தபோதனர் - முனிவர். ''தங்கி வைகுந் தபோதனர்'' (கம்ப. கங்கை. 10.)
3. ஒல்லை - விரைந்து. ''ஒல்லைச் கெடும்'' (குறள். 563)
4. உள் - மனம். ''தலைகொடு வந்தானுண்மலிய'' (பு. வெ. 4, 12, கொளு)
5. சுசீலவள்ளல்.

### யோகி சொற்படி மந்திரிக்குச் சுசீலன் ஆணை

ஒன்றுக்கு மஞ்சாதே யோர்நொடி யில்முடிப்பேன்
மன்னவனே யாக வகைமுடிக்கும் மார்க்கமெல்லாஞ்
சொன்னபடி நீகொடுத்தால் சொற்படிய தாய்முடிப்பேன்
அப்போதே மந்திரிக்கி அண்ண லுரைத்திடுவார்
இப்போதே யோகியர்தம் எண்ணப் படிதானே

என்னென்ன கேட்டாலும் இல்லையென்று சொல்லாமல்
சொன்னே னொருதாழ்வுஞ் சூழாம லே[1]கொடுப்பாய்

### யாகத்தீயினின்றும் பூதம்

நல்லதென்று சம்மதித்து நாட்டிடப் படிதானே
வல்லவனும் மந்திரியும் வாங்கிவாங் கிக்கொடுக்க
அய்யன்கை யாற்செய்த யாகமதைக் கூறிதே

துய்யவனற்[2] குள்ளிருந்து தோன்றியதே ஓர்பூதம்!

### பூதம் அமுது தரல்

கையிற் றளிகைதனைக் காரணனார் முன்னர்வைத்து
வெய்ய தழற்புகுந்து விட்டதுவே பூதமது

### போகவதிக்கும் மந்திரிமனைவிக்கும் அமுதைத்தரல்

அந்தவமு தையெடுத்து ஆனந்த மாய்யோகி
சிந்தைமகிழ் வாகியதைச் செம்பாதி[3] யாய்ப்பிரித்து

மன்னன்மனை போகவதி மாதுதனக் கோர்பாகம்
தன்னைத் தொழுமமைச்சன்[1] றன்மனைவிக் கோர்பாகம்
உண்ணுமென வேகொடுத்து ஓதுவார் மன்னனுக்கு

### ஆற்றல்மிகு மகன்பிறப்பான் எனயோகிகூறல்

"கண்ணுக் கினியவராய்க் கலைகள்மிகக் கற்றவராய்
ஆணைமுத லெறும்பீ றானஉயிர்ப் பாசைகளுந்

1. சூழாமல் - ஆராயாமல் "நின்னொடு சூழ்வ றோழி" (கலித். 54)

2. துய்யவனல் - தூய நெருப்பு; துய்ய - தூய; "துய்ய தேவர்" (கம்ப. பிரமாத். 189) (கி. பி. 12)

3. சரிபாதி.

4. 'அமச்சன்' என்பதே ஓலை.

*தானைபடை யோடெதிர்த்தால் தாக்கியிடுந் தந்திரமும்*
*கூடுடனே யெவ்வுருவுங் கொள்ளுந் திறமைகளும்*
*நாடுடனே தேவேந்திரன் நன்னகரும் வென்றிடுவார்!*
*நாகலோ கம்மாளும் நாகேந்திரன் றன்னரசை*
*வாகாக ஆண்டிடுவார் வல்லப[1]த்தைச் சொல்லுவதோ?*
*இவரை ஜெயிப்பவர்கள் ஈரேழு உலகிலில்லை!*
*அவரே அவர்பெலத்துக்கு[2] ஆண்மை யுடையராகும்!*
*செங்கோல் செலுத்துமன்னே, செங்கைவடி வேலவரை*
*இங்கே பணிந்திடு"மென் றேகினார் யோகியரே!*

## சுசீலன் வேலவனிடம் சந்ததி கேட்டிறைஞ்சுதல்

*யோகியர் தஞ்சொல்லை யுறுதியென்று கேட்டுமன்னன்*
*நாயகி யோடெழுந்து நாடிச் சரவணத்தில்*
*மூழ்கி, யனுட்டானம்[3] முடித்துக் கரையேறி*
*வாழ்கிரி[4]யை முக்காலும் வந்துவல மாகவுமே*
*தையலுடன் மந்திரிமார் தான்சூழ வேபடியிற்*
*பையநடந் தேறியெந்தை பாதமதி லேபணிந்து*
*"சண்முகமே! மெய்ப்பொருளே! சத்திதந்த பாக்கியமே!*
*விண்மண் முழுதாளும் மேலவனே! வேலவனே!*
*நாயடியேன் நின்பாதம் நாடிவந்தேன் என்கருத்தை*
*தாய்போல அன்புவைத்துத், தந்திடுவீர் சந்ததியை"*

## அங்கு தோன்றிய பூசகரிடம் வரம் கேட்டல்

*என்றிரந் தேநின்ற ஏந்தல்முன்னே பூசகர்போல்*
*நின்றுவரம் வேணதெல்லாம்[5] நீர்கேளும் என்றுரைத்தார்!*
*எல்லாமு நின்னருளால் என்தாயே யானுடையேன்*
*"வல்லானாய்க், கல்வியறி வாகரமு[6] முள்ளவராய்,*

1. வல்லபம் - மிக்க வலிமை.
2. பலத்துக்கு.
3. அனுட்டானம் - நியமம்.
4. கிரி - மலை.
5. வேணதெல்லாம் - விரும்புவதெல்லாம்.
6. ஆகரம் – மேலானது.

சற்புத்திர னாகஒரு சந்ததிதான் வேண்டுமென்ன''

**''யோகியாக வந்தவனும் நானே! மகவு உண்டாகும் எனல்''**

''உற்பத்தி யாக்கிவிட்டோம் முன்னிலுமே யெண்மடங்காய்
யாகமது செய்வதற்கு யாந்தானே யோகியென்று
பாகமது செய்துவந்தோம் பந்தனத்[1] தோடென்றும்
வாழ்வாய் நீடூழி வளர்ந்திடுவா னுன்மைந்தன்
ஆழ்வான்பூ லோகமுதல் ஆண்டிடுவான் மண்ணுவிண்ணும்

**சுசீலன் மகிழ்ச்சியால் ஈதல்**

என்றுசொல்லிச் சென்றா ரிறஞ்சினான் மன்னர்மன்னர்
நின்றமறை யோர்தமக்கே, நேர்ந்தபடி யாய்க்கொடுத்து,
கோ[2]தானம் பூதானங் கோடிகன்னி காதானம்
மீதான தானமெல்லாம் மேன்மேலாய் வேலவர்முன்
செய்துகுன்றை வேலவர்க்குச் செய்த சிறப்பதனால்,

**சுசீலன் ஊர்திரும்ப விடைகேட்டல்**

மெய்புளக மாகி[3]மன்னன் மேன்மேலு மேபணிந்து
''யென்னூர்க்குச் செல்லவிடை யீந்தருள்வீர்!'' என்றிரப்ப

**அசரீரி பதில்**

''ஒன்னூர்க்குச் செல்''லெனவே ஓதுமச ரீரிசொல்ல,

**சுசீலன் அமிர்தபுரம் திரும்புதல்**

வந்தபடை யோடுமன்னன் வாம்பரித்தேர் மீதேறி
கந்தர்தமை யேதுதித்துக் கால்வேக மாய்நடந்து
வந்தான் தனதுசெங்கோல் வாழ்வேங்க மங்கையுடன்

---

1. பந்தனத்தோடு - நல்ல காவலுடன்.
2. கோ - பசு.
3. புளகமாகி - மகிழ்ந்து.

சிந்தா குல[1] நீக்கிச் சென்றான் அமிர்தபுரம்
தன்னிற் சுசீலமன்னர் தாம்முறை தப்பாமல்
நன்னீதி குன்றாமல் நானிலத்தை யாண்டிடுநாள்

### மன்னன் மனைவி கருவுறுதல்

ஒன்றாகி ரெண்டாகி ஓர்மூன்று திங்கள்செல்ல
குன்றார் தனமாதின் கொங்கைகருப் பங்குகண்டார்
ராசனுக்குச் சேடியர்போய் நல்வசனங் கூறிடவும்

### வளைச் சடங்கு

வாசக் கடம்பணிந்த[2] வள்ள(ல)ரு ளென்றுமன்னன்
ஐந்தாம் மாதத்தில் அணிந்தார் வளைச்சடங்கு
பைந்தார் மலர்க்குழலாள் பச்சையுடம் பாயினளே
ஆறேழாம் திங்களிதிற் சீமந்தங் கள்செய்தும்

### குழந்தை பிறப்பு

வாரேறு பூண்முலைக்கி மாதமெட் டொன்பதுவாய்
பத்தாக சிப்பி ஈன்றெடுத்த ஆணிமுத்தாய்ச்
சித்தாக வந்துதித்தான் தேவர்புட்ப மாரிபெய்யக்
கோடியாஞ் சூரியர்கள் கூடியொன்று பட்டதொப்ப
நாடியே கண்டவர்கள் நற்பாலன் ற(ன்)னொளிவால்
ஓடிச் சுசீலமன்னர்க் கோதினா ரோகை[3]யுடன்

### சுசீலன் வாரி வழங்குதல்

நீடிப் புகழேறு நீதிபரன் றான்மகிழ்ந்து
வந்துசொன்ன மாதருக்கும் மாமறையோர் வாணருக்கும்
நந்து[4]றையு மேரிவயல் நன்னிதிய முங்கொடுத்து
''அள்ளிக் கொடுத்தால் அடங்கா தெனதாவல்

---

1. சிந்தாகுலம் - வருத்தம். ''இந்தா விஃதோ ரிளங்குழவி யென்றெடுத்துச் சிந்தாகுலம்திரத் தேவிகையி லிந்தனனே'' (கந்தபுராணம், தக்ஷகாண்டம். வள். திருமணப் படலம். 35)

2. காடம்பணிந்த என்பது ஓலை. கடம்பணிந்த - கடப்ப மாலை அணிந்த முருகன். அதனால் முருகனுக்குக் 'கடம்பன்' என ஒரு பேர் உளது. ''காந்தனைக் கந்தக் கடம்பனை'' என்றார் அருணகிரிநாதர் (கி. பி. 15) (கந்தரலங்காரம் 72.)

3. ஓகை - மகிழ்ச்சி. ''ஓகையோ டிருத்தி'' (பாரத. குருகுல. 93) (கி.பி. 14).

4. நந்து - சங்கு

அள்ளிக் கொடுபோ''வென் றாவலுடன் அங்குரைத்து
ஏழுநாள் மட்டும் எடுத்தெடுத்துக் கொண்டுசெல்ல
நாளுமின்னாள் நல்லதென்று நாடிமறை யோர்கூற
மன்னன் எழுந்துவந்து மைந்தன் முகம்நோக்கி
யென்னரசைத் தாங்கவந்த யேந்தலி[1]வ னாகுமென்று
மந்திரிமா ரோடுரைத்து மாளிகையில் வந்தமர்ந்தார்.

### மந்திரி, தன் மனைவிக்கும் குழந்தை பிறந்துள்ளது எனக்கூறுதல்

தந்திரி களில்மிகுத்த தர்மன் விபேகனெனும்
மந்திரியும் மன்னன் மலர்க்கழலி லேபணிந்து
சுந்தரிஎன் பைந்தொடிபோல் தோற்றின னோர்புதல்வன்
என்றுசொல்லக் கேட்டுமன்னன் இன்புற் றிருக்கையிலே

### குழந்தைக்குப் பெயரிடாத குறை

குன்றுதனத் தார்கள்சில கோதையர்கள் ஓடிவந்து
மன்னன் கழலில் மலர்தூவித் தண்டனிட்டு(ச்)
சொன்னா ''ரோர்மாதஞ் சுதன்பிறந்து தானாச்சு
யென்றுயெங்கள் நாயகியா ளேந்திற் குறையுமென்ன
யின்றுசொன்னோ மென்''ன்றவர்கள் யேகினார் மாளிகையில்

### சுசீலன் சஞ்சிதரை அழைக்கச் சொல்லல்

வேந்தன் சுசீலமன்னன் விள்ளுவான் மந்திரியாற்
''சாந்த குலகுருவாஞ் சஞ்சிதரைத் தந்திடெ''ன்ன
அங்குநின்ற தூதர்க் கருளினார் மந்திரியும்

### புலவிடங்களில் அலைந்து சஞ்சிதரைக்கண்டு அழைத்து வரல்

எங்குசென் றாரறியோ மென்று பரந்தேகிக்
காடுமலை சோலையெல்லாங் காலோ யவுநாடி

1. ஏந்தல் - அரசன்.

நாடுகளுந் தேடி நடந்து வரும்வழியில்
ஏகின்ற சஞ்சிதரை இன்பமுட னேபணிந்து
"பாகென்ற மென்மொழியெம் பார்த்தீபன்[1] தங்கள்தனைத்
தாவென்றா ரோடித் தவித்துயெங்குங் காணாமல்
கோவண்டை செல்லவுமே கூட்டினது தெய்வமென்ன
நல்லதென்று சஞ்சிதரு "நாமுமங்கு தான்போறோம்
வல்லவரே வாங்களெ"ன்று வானமீதி லேயெழுந்து
மன்னன் கொலுவிருக்கும் மத்தியிலோர் ஆசனத்தில்
இன்னவழி யாய்வந்தா னென்றறியக் கூடாமல்
ஆசனத்தில் கண்டுமன்னன் ஆவலுட னேயெழுந்து
வாசமலர் சாற்றி வணங்கிநின்றான் பாதமதில்

## சஞ்சிதர் ஆசி

"வேந்தா சுசிலாநீ வேலவென்றாள் வேண்டினதும்
நாந்தா மறிந்துகொண்டேன் நன்மைசொல்ல இங்குவந்தோம்
வேல்வேந் திருந்திடென்று விள்ளுவான் மெய்முனிவன்
மால்போல வந்துதித்த மைந்தர்களால் வாழ்வுமுண்டாம்
கந்தர் செயலாலே காணாத காட்சியெல்லாம்
சிந்தைமகிழ் வாய்ப்பெறுவாய் சிங்கமே யென்றுசொல்லி

## சுசீலன்மகனை, அலங்கரித்தல்

மைந்தன் தனைப்பார்க்க மன்னர் முனிவருடன்
இந்தநே ரம்வாரார்[2] என்றியம்பி யேந்திழையார்
சாந்தாற் றரைமெழுகிச் சந்தனத்தால் கோலமிட்டு
பூந்தா மரைத்திருவைப் போலிருக்கும் பொற்கொடிக்கி
மங்கள ஸ்னான வகைமுடித்து மைந்தருடன்
பைங்கள பவஷத்து வகைபாரத் தனந்திமிர்ந்து
சிங்கா தனத்திருத்திச் சீராய் அலங்கரித்தும்
மங்காத கீர்த்திமன்னர் வாரதொரு மார்க்கமதிற்

1. அரசன்
2. வருகிறார்

பூப்பந்தல் போடுவித்தும் பொன்னால் அலங்கரித்தும்
காப்பாக ஆலாத்திக் காரர் நிறைந்துநிற்க
மன்னவரும் மந்திரியும் வந்த முனிவரோடும்
கன்னல்[1]மொழி யாராடக் கட்டியங்கள்[2] கூறிவர
வாத்தியத்தின் வர்க்கவகை வர்ணித்துச் சொல்லரிதே!

## சஞ்சிதர் இருகுழந்தைகளுக்கும் பெயரிடல்

சாத்திரத்தின் மாட்சிவகை சஞ்சிதரோ டங்குவர
வேந்தன் மனைவி விரைவா யெழுந்துவந்து
சாந்தன் குலகுருவாஞ் சஞ்சிதரைத் தாள்வணங்கி
கைப்பிடித்த மன்னன் மலர்க்காலிற் பணிந்துநின்ற
மைப்படிந்த[3] கண்ணிதந்த மைந்தன் முகநோக்கி
மந்திரத்தாற் சுத்திசெய்து மாமுனிவ ரும்மகிழ்வாய்
இந்திரகோ மானென்று இசைத்தார் திருநாமம்
விபேகனெனும் மந்திரிபெற்ற வித்தைக் களஞ்சியத்தை
சபையோர் புகழுமிந்திர சாலனென்று சாற்றியிதே
நாமகரண மி[4]ட்டோ நன்றாய் வளர்ங்களென்று
காமமதை யேகடிந்த கார்த்ததெய்வ மானமுனி
இவரால் அனேகமின்ப மெய்துவீர்நீ வீரென்று
சிவநாமம் உச்சரித்துச் சென்றார்விண் மார்க்கமதில்

## சுசீலன் மகனுக்குத் தாலாட்டு

தன்னேரி லாத[5]புத்தி சாலிவி பேகனொடும்
மன்னவரும் சொந்தமனை மேவி யாண்டிடுநாள்

---

1. கன்னல் - கரும்பு.
2. கட்டியங்கள் - புகழ்மொழிகள்.
3. மை தீட்டப்பெற்ற கண் பைந்தமிழ் இலக்கியங்களில் மிக்குப் பேசப் படும். ''இரும்பீர் வடியொத்து மைவிளங்கும் கண்'' (பரிபாடல், வையை 56) என்பது காணவாம். அஃதாவது, இரும்புமணையில் மாவடுவைப் பிளந் தால், அவ்வடுவின் நடுப்பகுதி ஓரத்தில் கருப்பு எப்படிக் காணப்படுமோ அதுபோல மைதீட்டப்பெற்ற கண் என்பது ஆசிரியர் குறிப்பு.
''மையெழில் உண்கண்'' (அகம், களிற்: 81-14.)
''மையுடை வாட்கண்'' (திருக்கோவையார், 46) என்றார், மாணிக்க
4. நாமகரணம் - பெயரிடுதல்.
வாசகர் (கி. பி. 9).
5. தன்னேரிலாத - தனக்கு நிகரில்லாத,

வளர்பிறையை நேராய் வளர்ந்து வரும்மைந்தர்
பலமறையுங் கற்றறியும் பாலிவ ராகுமென்றே
சீராட்டிப் பாராட்டிச் செம்பொன்செய் கொடியின்மேற்
தாராட்டி[1]க் கியான[2]யிசை தான்கூட்டி ஆட்டினளே
சிந்தா மணியே செகராசன் கண்மணியே
மைந்தா என்அன்பே மதனைவெல்ல வந்தவனே
பாரோர் புகழ்ந்துபோற்றும் பன்னிருகண் ணாரருளால்
வாரேறு பூண்முலையார் மையல்கொள்ள வந்தவனோ
சந்திரனோ சூரியனோ சண்முகனோ சக்கரனோ
இந்திரனோ பூலோக மெங்குமர சாள்பவனோ
மூதாக்கள்[3] செய்தவமோ முடிவேந்து செய்தவமோ
மாதாக்கள் செய்தவமோ மாதடியாள் செய்தவமோ
அன்பத்தார் தேசத் தரசர் களையடக்க
இன்பத்தால் அக்கந்தர் தந்தசேயே கண்வளராய்
மாதர்களும் யென்னை மலடியென்றே கூறாமல்
ஆதரவாய்ப் பூலோகம் ஆளவந்த வற்புதனோ
யென்றுதா ராட்டியன்னை இன்புற் றிருக்கையிலே.

## இந்திரகோமகனும் இந்திரசாலனும் இணைபிரியாமை

ஒன்றிரண்டு ஐந்தா முயர்ச்சிவய தானதுவே
இந்திர சாலனென் றிசைத்தயிள மந்திரியும்
சோடுபிரி யாமலொன்றாச் சொல்லும்பொருளேபோலக்
கூடுவிட்டால் சீவனிலை கொள்ளாத தன்மையைப்போல்
செலத்தைப் பிரியாத செந்துகளைப் போலாயும்[4]
நலத்தை யனுபவித்த நாயகனும் நாயகிபோல்
கொட்டியுட னாம்பநெய்தல் கூடுஞ் செலமேபோல்[5]
ஒட்டியே பூவும்மணமு மொன்றுபடு மாறதுபோல்

1. தாலாட்டி.
2. கானம்.
3. மூதாக்கள் - முன்னோர்.
4. நீரை விட்டுப்பிரியாத உயிரினம்போல.
5. அற்ற குளத்தின் அறுநீர்ப்பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர் — அக்குளத்திற்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி யுறுவார் உறவு (மூதுரை. பா. 17)
எனும் ஔவை வாக்கு இங்கு ஆளப்பட்டுள்ளது.

ஈருடலா யோருயிரா யென்றும் பிரியாமல்
காருட வித்தை[1] கரைகாணுங் காளையராய்

**மன்னன் இருவருக்கும் கற்றுத்தரச் செய்தல்**

மீறிவளர்ந் தோளாண்மை மேலாகக் கண்டுமன்னன்
தேறித் தெளிந்த திறமையுள்ள பண்டிதர்பால்
கற்றறிவீ ரென்றுஇரு காளையரைக் கைக்கொடுத்து
முற்றறி வித்தால்நீர் மொழிந்தபடி யான்தருவேன்
என்றுசொன்ன மன்னவர்பா லென்னா லியன்றமட்டும்
யொன்றுங் குறையாம லோதுவேன் என்றுரைத்துப்

**காளையர்க்குக் கற்றுத்தரல்**

பாலரிரு வோர்களையும் பண்பாய் அருகிருத்தி,
வேலரரு ளால்செனித்தீர்! வித்தையினிற் சித்தம்வைப்பீர்
யென்று மறியோம் என்றியம்பும் பொருளதனை
நின்று நிறைவாக நிகழ்த்தினான் பண்டிதனும்
நால்வேத[2] மாறுசாஸ்திர[3] நன்னீதி யுள்ளவெல்லாம்
மால்போல் வந்துதித்த மைந்தருக்குத் தாமுரைத்தார்
தேறினார் மைந்தர் தெளிந்தார் திறமையெற்றார்
மீறினா ரெக்கலையு மேன்மேலாய்க் கற்றறிந்தார்!

**கவிதை**

ஆசானுக் கெண்மடங்காய்க் கலைகள் தேர்ந்தும்
யானைபரி ரதநடத் தாண்மை யோராய்
வாசார் கோசர[4]மாங் கணைக டாங்கி
வல்லவர்கள் வில்லில் இரண்டைக் கையேந்தி
தேசாதி தேசமெங்கும் செயிப்போ ராகுந்
திறமைதன்னை யுபாத்தியாயர் செப்பக் கேட்டு
காசாலை யான[5]தந்தை சுசீல மன்னன்
கழிப்பதனால் மைந்தர்செயல் கண்ணுற் றானே!

1. காருடவித்தை - விஷவித்தைகளுள் ஒன்று.

2. 'நாலு வேதம்' என்பது ஒலை, நால் வேதம்: ரிக், யஜுர், சாம, அதர்வணம்.

3. ஆறு சாஸ்திரம்: வேதாந்தம், வைசேடிகம், பாட்டம், பிரபாகரம், பூர்வமீமாம்சை, உத்தரமீமாம்சை.

4. கோசரம்-பூந்தாது

5. காசாலையான - அக்கறையான. இச்சொல் வழக்காற்றில், ''இவன் ரொம்ப காசலைக்காரன்'' என வழங்குதல் அறியலாம்.

### மகனுக்கு முடிசூட்ட விழைதல்

பன்னிரண்டு வயசுஆச்சு நமது பாலர்
படித்தறிந்தார் மந்திரியே பகரக் கேளாய்!
சென்னியிலே[1] நமதுமுடி தன்னைச் சூட்டிச்
செங்கோலை(க்) கைக்கொடுத்துச் சிறப்ப தாக
இன்னிலத்தை யாளுமென மைந்தர்(க்) கோதி
யெடுத்தசென்மம் முத்திபெற ஈசன் பாலே
உன்னி[2] நல் தவமிழைத்துப் பிறவா வண்ணம்
உமாதேவி கேள்வன்[3] றாள் உறைகு வோமே!

### இந்திரகோமானையும் இந்திரகேசரியையும் அழைத்துவரச் செய்தல்

நல்லதென மந்திரியும் நாதன்றா ளேபணிந்து
"வல்லவரே மைந்தர் மனதறிந்து இவ்வார்த்தை
சொல்லுதலே நல்ல"தென்று சொன்னான் விபேகனுந்தான்
வெல்லுந் திறமுடைய வேந்தனுமே சம்மதித்தான்
பக்கநின்ற தூதர்முகம் பார்த்தரசன் கூறலுற்றான்
தக்கபுகழ் பெற்ற தனையனிந்திர கோமானை
நீங்காத சாயல்[4] நிகர்த்தவிந்திர கேசரியும்
பாங்காய் உறைந்தவிடம் பார்த்தழைத்து வாருமென்ன.

### காளையரிருவரும் வேட்டையாடிய நிலை

ஓடினார் மாளிகையி னுள்ளிருக்கக் காணாமல்
தேடினார் கானகத்தில் தெள்ளமுர்த மானவரை
அங்கே இருவர்களு மானைபுலி மானையெய்துஞ்

---

1. சென்னியிலே - தலையிலே.
2. உன்னி-விரும்பி. "வேறுபுல முன்னிய விரகறி பொருந" (பொருந: 3)
3. உமாதேவி கேள்வன்-சிவன்.
4. சாயல்-நிழல். நிழல்போல இந்திரகோமானோடு இருப்பவன் இந்திர கேசரி.

சிங்கே றெனத்திரிந்துஞ் சிங்கங் களைவதைத்தும்
எதிர்ப்பட்ட பட்சியின மெல்லாமுஞ் சூறைகொண்டு

**உங்கள் தந்தையர் அழைத்துவரச் சொன்னார்கள்**

எதிர்ப்பட்டார் தூதாள் இறைஞ்சியிந்திர கோமானை,
‘‘எந்தையே, யுங்க ளிருவர் தமையழைக்க
யுந்தை யருளிப்பா டு[1]த்தமனே வாருமெ’’ன்ன,

**‘‘தந்தையர் கூறியவாறு செப்புவீர்!’’**

‘‘தந்தையும் மந்திரியும் தானழைத்த வாறுதன்னை
சிந்தைதெளி வாகுதற்குச் செப்பிடுவீர் தூதர்களே!’’
யென்றுயிந்திர கோவோ டிளையவிந்திர கேசரியும்

**எங்களுக்குத் தெரியாது, வரச் சொன்னார்கள்!**

நின்றுதடுத் துக்கேட்க, ‘‘நீதியென்று யாமறியோம்
செங்கோல் அரசு செலுத்துமன்ன ருங்கள்தமை
இங்கே யழையுமென் றியம்பினா ரெ’’ன்றவுடன்,

**விரைந்து சென்று சுசிலனைக் காணல்**

ஓட்ட நடையாக ஓடியிரு பாலகருங்
கூட்டமுடன் வீற்றிருக்குங் கொற்றவர்தன் முன்புவந்து

**வள்ளல் மகனுக்கு முடிதாங்குமாறு உரைத்தல்**

தாளிற் பணிந்தெழுந்து தாங்கிச் சுசீலமன்னன்
தோளிலிரு கப்புல்கித் தோன்றல்தனைப் பார்த்துரைப்பார்
‘‘என்னரசைத் தாங்கிடுவாய், ஏந்தலே! யாமுமினி
உன்னரிய நற்றவஞ்செய் துமையோ டிறைகழலிற்
சேர்ந்திடுவேன் வாழ்ந்திரெ’’ன்று செப்புதந்தை இன்முகத்தைக்

**‘‘வேந்துபலரை வென்றபின்பு முடிபுனைதலே முறை!’’**

கூர்ந்துமைந் தனும்பார்த்துக் கூறுவா னோர்வசனம்,
‘‘பட்டமதை யான்தரித்துப் பாருலகை யாண்டிருந்தால்

1. அருளிப்பாடு – அருளப்பட்ட உத்தரவு.

வட்டவுல காளுமன்னர் வல்லபங்கள் தான்தெரியத்,
தேசதேசங் கள்சென்று தேர்வேந் தரை[1]யடக்கி,
வாசவெற்றி மாலையினை மார்பணிந்து இங்குவந்து,
உன்னரசை யான்பெறுதல் உத்தமமா மெ''ன்றுசொல்ல

### "குழந்தையர் இப்படிப் பகர்கின்றனரே!"

மன்னவனும் மந்திரியும் மைந்தர்சொன்ன வாறுதன்னை
ஆலோ சனைசெய்து அடங்காக்[2] கவலைகொண்டு
பூலோகம் ஆளுமென்றோம் போய்வென்று வாரமென்றார்[3]
வல்லவர்க்கு வல்லவர்கள் வையகத்தில் உண்டுகண்டாய்!
அல்லவென்று சொன்னால், அடங்குவரோ பாலகர்கள்?
மீறி நடப்பாரோ? மேலென்ன வந்திடுமோ?
தேறிஅதிற் கூறுமென்று தியங்கினான்[4] மன்னவனும்;

### வீரர் சென்றுவரட்டும் என அமைச்சர் கூறுதல்

அப்போ விவேகனெனும் அன்புள்ள மந்திரியும்
''தப்பேதும் வாராது சண்முகனார் தந்தசுதர்[5]
வல்லபத்தை யாரும் வழுத்தவுமே[6] கூடாதே!
செல்ல விடைகொடுத்தால் செங்கோல் பிடித்தவரை
அடக்கிவருஞ் சேவகர்தா மாரிவ ரோடெதிர்ப்பார்?
படைக்கும்[7] யமன்கூடப் பயப்படுவான் பாலருக்கே!
யேமன் தலையெடுக்கான் இந்திரனும் வாளெடுக்கான்
காமன் கணையெடுக்கான் கார்வண்ணன் எஃக[8]மெடான்
எந்தவுல குஞ்செலுவா ரெந்தவுரு வுமெடுப்பார்
சிந்தைமகிழ்ந் தேயனுப்புஞ் செங்கோல் செலுத்துமன்னே''

1. தேர்வேந்தர் - போர் மன்னர்.
2. அடங்காத - மிகுந்த.
3. வாரம் - வருகிறோம்.
4. தியங்குதல் - துன்புறல்.
5. சுதர் - மகனார்.
6. வழுத்துதல் - கூறுதல்.
7. படைக்கும் - கொல்லும்.
8. எஃகம் - ஈட்டியனைய ஆயுதம்.

### வள்ளல், மனைவியிடம் கூறிப் புலம்பல்

என்றுமந்திரி கூறுதலை யெண்ணியெண்ணி யேக்கமுற்று
துன்றுபிணி[1] யாளரைப்போற் றுன்பக் கடலாழ்ந்தான்;
வாடினான் சொந்த மனையாளை வரவழைத்தான்
"நாடினேன் செய்ததவம் நன்றாய்ப் பலித்ததென்பார்
பெண்கள் சிகாமணிநீ பெற்றருளு நற்பாலன்
கண்கறுத்தான்[2] நானுமது கண்டுஅர சாளுமென்றேன்
மாற்றார் தமையடக்கி மண்டலத்தை யாள்வதின்றி
ஆற்றாதெ[3]ன் னாலென் றவனுரைத்தா னாயிழையே!"

### ஏந்திழை என்ன செய்வேன்?

என்றுமன்னர் கூற இயம்பிடுவாள் போகவதி,
"கன்றிழந்த ஆ[4]ப்போற் கதறி முகத்தறைந்தே
பாலகனைப் பெற்று, பலவான்கள் கைகொடுத்து
ஞாலமதில் வாழ்குவனோ ? ஞாயமோ, சங்கரனே !
குன்றை மலைசென்று குமரேசன் றாள்வணங்க
கன்றை[5]யழித்தகந்தர் கண்காட்சி காண்பையென்றே,
சொன்னதுவு மீதாமோ சொற்றவறா மன்னவரே!
யின்னமது வுண்டாமே? யேந்திழைநா னென்னசெய்வேன்?"

### பின்னும் மன்னன் வினவுதல்

"மந்திரியும் போய்வருதல் மாண்பெ[6]"ன் றுரைத்தாண்டி,
சுந்தரியே, போகவதி சொல்லிவிடு நீயுமென்றார்.

### மக்கள் விடைவேண்டல்

"ஒன்னுயிரு மென்னுயிரு மொன்றா மிரண்டல்லவே!

---

1. துன்றுபிணி-நெருங்கிய பிணி. துன்றிய-நெருங்கிய; "துன்றுகரு நறுங்குஞ்சி" (கம்ப. குகப். 28).
2. கண் கறுத்தான் - பருவமெய்தினான்.
3. ஆற்றாது - இயலாது.
"அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர்"
(குறள். 555) (கி. பி. 2)
4. ஆ-பசு.
5. சூரபத்மன் மாமர வடிவில் நின்றபோது. முருகன் அழித்த வரலாறு.
6. மாண்பு - பெருமை.

மன்னுயிரை யுங்காற்கும் மன்னவரே நீருரைத்தால்,
அதுவே சரி''யென் றமர்ந்திருந்தா ளாயிழையாள்.
கதுவெனவே[1] வந்துவன்னை காலிற் பணிந்துமைந்தன்
சாற்றுவார், ''பூலோகஞ் சார்ந்திருக்கு மன்னவரைப்
போற்றுவாய் எம்மையென்று, புத்திசொல்லித்
தாமழைப்போம்;
நல்லதென்று வந்தவரை நங்கிளைய தாய்க்[2]காற்போம்;
அல்லவென்று தானெதிர்த்தால், அழிப்போம் அவர்தேசம்!
எந்தஉபா யத்தாலும் எங்கடமை[3] வெல்லுவரோ?
தந்தையுடன் மந்திரியும் தாயும்விடை தாருமென்றார்!

### "ஓராண்டிற்குள் வராவிடில் இறந்திடுவேன்" என விடைதரல்

மன்னவரும் பாலர் மதிமுகத்தைத் தான்பார்த்துச்,
''சொன்னமொழி மாறோஞ், சுருக்காக[4] நீங்கசென்று
வேந்தர் களையடக்கி, விரைவாக வாங்களெ''ன்றே
சாந்தன் சுசீலமன்னன் சண்முகரை நெஞ்சில்வைத்து,
ஆனைபரி காலாள் அளவில்லா மற்கொடுத்து,
வானையளா வுந்தேரில் மைந்தர்களை யேற்றுவித்து,
''யோராண்டுக் குள்ளாய்நீ ஓடிவா ராதிருந்தாற்,
பாராண்டு வாழ்வனென்றே பாலகரே யெண்ணாதீர் !
செத்து அழிந்து சிவலோகஞ் சேர்ந்திடுவேன்![5]
பத்துமா தஞ்சுமந்தே பெற்றஉங் கள்அன்னை,
கூட மடிந்திடுவார் கோனகரி பாழாமே !
வாடவிடா மல்நீரும் வந்துவிடு சீக்கிரமே.''

### மக்களிருவரும் வடதேசம் செல்லல்.

என்றுமன்னர் கூற,மந்திரி, ''யிதுவே சரி''யெனவே,
''நன்றுநன்று போய்வாரோ(ம்); நாடாளும் நீதிமன்னே,
விடையிதா மெ''ன்று விரைந்தார் வடதேசம்

1. கதுவென - வேகமாக.
2. கிளையதாய்க் காப்போம் - உடன் பிறந்தோர் போலக் காப்போம்.
3. எங்கள்தமை.
4. சுருக்காக - விரைவாக.
5. ''கோமுறை புரிகிலை என்னின் கூரெரி
சாமிது சரதம்!'' என்று பரதன் இராமனிடம் காட்டில்
கூறியதை (கம்ப. திருவடி. 133) இங்கு இயைத்து நோக்கலாம்.

### பல நாடுகளை வென்றுவருதல்

படையுடனே செல்லயெதிர்ப் பட்டமன்ன ரும்பணிந்தார்
பணிந்தவரை யென்சொற் படிகே ளெனவிடுத்து
துணிந்துயெதிர்த் தார்தமையே துண்டுதுண்டாய்ச் சூறையிட்டு
அதக ரை[1]ப்பிடித்து அன்றே முடிசூட்டி
அதர்முறை[2] தப்பாமல் என்றுமர சாள்(க)யென்பார்
அன்பத்தார் தேச மடங்கலுமே சென்றுசென்று,
இன்பத்தாற் கண்டவரை யென்றுமர சாளவைத்து,
வாராத மன்னவரை மடிபிடித்து வாதாடி,
தீரா விலங்கிட்டுத் தேசங்க ளைப்பறித்து,

### வென்ற நாடுகளில் ஏழையர்க்கு முடிபுனைதல்

ஏழை எளியோரை யிருத்தி முடிசூட்டி
வாளையவன் கைக்கொடுத்து வாழ்ந்திடுவாய் என்றுரைத்து

### ''இனியார் உளர் பொருத?''

எண்ணப் படிமுடித்தே இந்திர கோமானும்,
வண்ண முடிதரிப்போம் மந்திரிஇந்திர கேசரிகேள்,
"பூலோகஞ் சுற்றிவந்தோம் போரில்எதிர்ப் பார்களில்லை
கோவேந்தும் வேந்தைக் குறிப்பாய் எடுத்துரைப்பாய்''

### சவ்வீரம் எனும்நகர் உளது என இந்திரகேசரி கூறல்

யென்னஇந்திர கேசரியு மென்ஞான திஷ்டியினால்,
"இன்னமொரு ராசன் இயல்புடையா னாகுமவன்
நம்போற் சமத்துடையோன் நாட்டரசை யேசெயிப்போன்
கும்பாய்[3] அனேகபடைக் கூட்டம் உடையவன்காண்!
சவ்வீர மென்னுநகர் தன்னையர சேபுரிவோன்
யெவ்வீர ரானாலு மெட்டியதைப் பார்ப்பரிதே!

1. அதகர் - வலிமை உள்ளவர்.
2. அதர்முறை - நெறிமுறை.
3. கும்பு - கூட்டம்.

கோட்டைகளோ ஏழாகும் கொத்தளங்கள்[1] கோடிகளாம்!
நாட்டையெல்லாம் ஆளும் நரபதிபேர் குச்சரனாம்;
மனையாள் அமுர்தவல்லி, மந்திரியு நீலகண்டன்;

### சவ்வீர மன்னன் குச்சரனுக்கு மகனில்லாமை

தனையனில் லையென்று தவஞ்சிவனை வேண்டிநின்றார்;
அன்னாட் சரம்[2]சிவன் அன்னையுமை யோடுவந்து,
''யென்னாற் பெறும்பே றியம்புவாய் குச்சரனே!
சொல்''லென்ன மன்னன், தொழுது''சுதன் வேண்டுமெ''ன்றான்

### மகள் பிறக்க வரம் ஈதல்

நில்லென்று யீச னிகழ்த்துவா னோர்வார்த்தை
ஒனக்குவான் சந்ததிக ளோர்போது மில்லையில்லை!
எனக்குநீ யன்பானா யீய்ந்தோமோர் புத்திரிதான்

### அப்பெண்ணின் அழகு!

மின்னலொளி யாயிருப்பாள் மேகம்போற் கூந்தலுண்டாம்
வண்ணமதி யேமுகமாம் வடுவுண்டே யம்மதியில்
இம்மதியி லோர்களங்க மில்லா தெழிலுடையாள்
கொம்மை யிள[3]முலைகள் கூர்மா துளங்கனியாம்
வேலைப் பழித்த விழியழகு மெட்பூவை
யேலப் பொருந்தா திருக்குமிள நாசியினாள்
கண்ணாடி சாணைகபோ லங்கங் கதுப்பெனவும்
உண்ணா டியபொருளை ஓதுவார் அல்லஅல்ல,
இந்தக்கன் னத்துக் கிணையாகா தவ்வளவும்!
முந்தவள் காதண்டை மொழிந்தார் குழையாகக்
கல்லமுத்தி யோர்தோடு காட்டலால் மேன்மையிது!
பல்லதனை முத்தாய்[4]ப் பகருவார் பாவமந்தோ!
துளைபட்டி ருக்குமது சொல்லுதலுந் தொந்தரவாம்

---

1. கொத்தளம் - அரண்.
2. சரம் - நீர் கங்கையை முடியிலே கொண்ட சிவன்.
3. கொம்மையிள முலை – பெருமை பொருந்திய இளமையான முலை.
''கொம்மை வரி முலை'' (குறு: 159-4.) குவிவாகிய முலையுமாம்.
''கொம்மை முலை பகர்வார்'' (நல்வழி 20)
4. பல்லுக்கு முத்தை உவமை கூறுதல் :
''கொற்கையம் பெருந்துறை முத்தின் அன்ன
நாகைப்பொலிந் திலங்கும் எயிறு'' (அகம். களிற். 27-10)

களையென்பார் தோளதனை கற்கண்டோ சொல்லையென்[1]பார்
அமையாது வெண்முல்லை யானதொரு வெண்மையல்ல
கமையாக ஊதுசங்கைக் கட்டுரைப்பா ரேகழுத்தாய்!
வெண்மை நிறமென்று வெறுத்ததனைக் கூறுகிலோந்
தண்மையுள்ள நீரில்வளர் தாமரையென் பார்கரத்தை!
ஆகாது கூம்புதலால் அல்லவென்று தள்ளிவிட்டோம்
வாகான ரோம வரையைச்ச லாகை[2]யென்பார்!
உந்திச் சுழியதனை யோதுவார் கொப்புளென
சந்திப்பு வளைவது சார்நூ விடையுமல்ல
அரவின் படமாய் அரசிலையாய் மான்குளம்பாய்
விரசா யுரைத்திடுவார் வேண்டோங்கா மக்கடலே!
துடையைக் கதலியெனத் தோன்றாம லேயுரைத்தார்!
படையைச் செயித்திருக்கும் பார்மதன[3] னதம்ப[4]மன்றேன்!
முழந்தாளை நண்டாய் மொழிவார்; கணைக்காலை
வனந்தான் மிகுத்த வராலென்பார், வாய்க்காதே!
குதிகாலை(ப்) பந்தெனவுங் கூறுவார்; ஐவிரலை[5]
மிதிபாதந் தானதுவை மேலான ஆமையென்பார்;
ஐந்து தலையரவை அவள்விரலுக் கொப்பிடுவார்!
வெந்து எரித்திடுமே விள்ளுதலும்[6] பொய்யாமே!

### நாகேந்திரன் என்பான் இப்பெண்ணைத் தூக்கிச்செல்வான் எனல்

கண்டவர்க ளாசைகொள்ளுங் காமக் களஞ்சியத்தை
உண்டாக் கிவளர்த்தே யுன்னரசை யாண்டிடுநாள்
புட்பவதி யாகிடுவாள் போவாள் வனந்தனுக்கே

1. சொல்லை - உடைந்து பட்டது.
2. ரோமவரிசை ஒரு குத்துவாள் போல உளதாம்! முடத்தாமக் கண்ணியார்
''ஐதுமயி ரொழுகிய தோற்றம் போல
பொல்லம் பொத்திய பொதியுறு போர்வை.''
என்றார் (பொருந. 7).
3. மதனன் - மன்மதன்.
''மதனனென்றார் தம்மை'' (திவ். பெரியதி. 6, 4, 8).
4. அதம்பம் - உறுக்குதல். தொடை, மன்மதனையே உருக்கி அமைக்கப் பட்டது!
5. ஐ விரலை - ஐந்து விரல்களை.
6. விள்ளுதல் - கூறுதல்.

நுட்ப யிடைக்குயிலை நோக்குவானா கேந்திரனே
கொண்டுசிறை வைத்திடுவான் கோமானீ[1] தேடிடுவாய்
தண்டுடனே வந்து சமர்செய்து தோக்கடிப்பான்
ஆற்றாமல் நீயும் அவதியுடன் வாழ்ந்திடுநாள்

### சுசீலன் மகனால் அவளை மீண்டும் பெறுவாய்

மாற்றானோர் மன்னன்மகன் மார்பாணி[2] யாய்வருவான்
அவனோ டெதிராடி ஆற்றாத வேளைதன்னில்
இவனே கெதியென் றியம்புவா யுள்ளதெல்லாம்
அப்போ தவனாலே ஆயிழையை[3] நீபெறுவாய்
ஒப்பே துனக்கு யொருபோதுந் தாட்சியில்லை
மருமக னவனாவான் மண்டலத்தார் போற்றிடுவார்
இருவாரே மென்று யியம்பியர னேகினரே!

### ஞானதிருஷ்டியால் இவற்றைக் கண்டு இந்திரகேசரி கூற இந்திரகோமான் மயங்கி வீழ்தல்

இப்படியே ஞானதிட்டி யெந்தனுக்குத் தோணு''தென்ன
'மைப்படிந்த கண்ணி'யென்ன மன்னன் மயக்கமுற்றான்!
செய்யா வுபசாரஞ் செய்துதெளி வித்தாலும்,
கையால் முகத்தறைந்து காளைமண்ணில் வீழ்ந்திடுவான்!

### இருவரும் சவ்வீரம் அடைதல்

''எவ்விதமும் நான்றருவேன் ஏந்தலே அஞ்சாதே
செவ்விதமாய்க் கேட்டதனாற் செப்பினேன் இவ்வார்த்தை
இப்படியாய் நேருமென யெண்ணுகிலேன் முன்னாலே
யெப்படியாய் நான்கொணர்வே னெ''ன்றுஇந்திர கேசரியும்
தன்னாலோ சித்துமன்னைத் தாங்கியேதே ரில்வைத்து
முன்னா லிருந்துகொண்டு மொய்த்தபடை[4] சேனையுடன்
சவ்விர மென்னுநகர்ச் சார்பதனில் வந்தமர்ந்து,

---

1 கோமான் நீ.

2. மார்பாணி-தண்டனையாக மார்பில் அடிக்கும் ஆணி. நகேந்திரனுக்குத் தண்டனை தரத்தக்க வீரமகன் வருவான் என்பது கருத்து.

3. ஆயிழை - பெண்.

4. மொய்த்த படை - சூழ்ந்த படை.

### தூதனையனுப்புதல்

அவ்விரன் தன்மை யறியவொரு தூதுவிட்டான்;
ஓடினான் தூதன் உயர்ந்தமதிட் கோட்டைதனை
நாடினான் அஞ்சிநின்று நாதமுரு கேசவன்றான்
தன்னருளால் வந்தசுதன் றன்தூத னென்றறிந்து

### முருகன் வணிகர்போலவந்து நாகேந்திரன் பற்றித் தூதனுக்குரைத்தல்

வண்ண[1]மயி லேறுகந்தர் வந்தார் வணிகரைப்போல்
''யேதடா யிங்குநின்றா யென்னவகைக் காகவந்தாய்
ஓதடா[2]'' வென்று உரைத்தான் வணிகனுந்தான்
இந்தநக ரத்துளவு யெல்லாந் தெரியவந்தேன்
சந்தேகம் கொள்ளாதே சத்தியமா யானுரைத்தேன்
என்ற வுரைகேட்(டு) இசைத்தி[3]டுவா ரேவணிகர்

### அழகு மங்கையை அரன்தந்தான்

சென்றபணி ரெண்டாண்டில் செங்கோல் செலுத்துமன்னன்
புத்திரனை வேண்டிப் புரிந்தா னொருவந்தான்
சத்தியுடன் வந்துஅரன்[4] தந்தார் சவுரிமின்னை!
பெற்றுயிந்த மன்னன் பிரியமு டன்வளர்த்தான்;
முற்றவள் ரூப மொழியவென்னாற் கூடாது!

### நாகேந்திரன் தூக்கிச்சென்றான்!

பக்குவ மான பதினைந்தா நாளையிலே,
செக்குகள் போலவெகு சேடியர்கள் கூட்டமுடன்,
பூங்கா வனமுறைந்து புட்பமெடுக் கும்போது,
பாங்காக நாகேந்திரன் பார்த்துச் சவுரிமின்னை

1. வண்ணம் - அழகு.
2. ஓதுதல் - கூறுதல். ''ஓதரிய சுகர்போல'' (தாயு. ஆகார. 32)
3. இசைத்தல் - கூறுதல்.
''மார்பணிற்றென விசைத்த லோடும்'' (சீவக. 203) (கி.பி. 10).
4. அரன் - சிவன்.

### பாதாளத்தே சிறை

எடுத்துப்போய்(ப்) பாதாளத் தேயிருக்குங் கோட்டையினில்
விடுத்துஅங்கு நாககன்னி வேண்பெண்ணைக்[1] காவல்வைத்து
வீர... தன்மையிந்த மேதினியை யாளுமன்னன்
சாற்றிடுவோர் தானறிந்து சார்ந்தான் படையோடும்;

### நாகேந்திரன் தோல்வி

அப்படையைக் கண்டவுடன் அங்குவந்து நாகேந்திரன்
வெப்பமத னால்தோற்று விட்டான்காண் அம்மானே!

### ஆகவே நீ ஓடிவிடு!

யிதுதான் புதுமையப்பா இந்தநக ரந்தனிலே
கதுமெனநீ[2] யோடிவிடு கண்டாக்காற் கொன்றிடுவார்
நில்லாதே'' என்று நிகழ்த்தி வணிகனுந்தான்
நல்லாராய்க் குன்றைமலை நாடினார் எம்பெருமான்!

### தூதன், வணிகன் கூறியதை இந்திரகேசரிக்குச் சொல்லுதல்

தூத னுளவறிந்து சொல்லவென்று மந்திரிபால்
மீதாசை யாகவந்து விள்ளுவான் அம்மானை!
செட்டிசொன்ன வாறு திறம்பாமற் செப்பிடவும்

### வேலவரை வணங்கி, இந்திரகோமானும் இந்திரகேசரியும் சவ்வீர நகருள் புகுதல்

''கெட்டிகெட்டி'' யென்றுஇந்திர கேசரியு மேமகிழ்ந்து
தங்களிந்திர கோமான் தன்சேனை சூழவைத்து
மங்களமாஞ் செங்கைவடி வேல ரைமதித்து
அணுவி னுருவெடுத்து அந்தநக ரம்புகுந்து,
முணுமுணென்று ஓதுமவர் முன்புசென்று தாமறிந்து,
சங்கதியெல் லாஞ்சரிதான் சற்றுநே ரத்தினுக்குள்,

### காவலர்கள் அச்சுறுத்துதல்

சிங்கமென வுள்நுழைந்து சென்றான் கொலுமுகத்தில்.
அங்குநின்ற காவலர்கள், ''யாரடா?'' வென்றுசொல்லி,

---

1. வேண் பெண்ணை - ஆசை கொண்ட பெண்ணை.
2. கதுமென - விரைவாக.

கங்குகரை[1] காணாக் கடல்போல வளைந்துநின்று,
"வந்தவகை சொல்லிவிடு, வாங்கிடுவோ மாவி"யென்ன,
இந்தப், பிசகாய் இயம்புவதோ யென்றிகழ்ந்து
ஆதியனு மான்போலே அங்கே வடிவெடுத்து
சோதியொன்று காட்டியங்கு சூழ்படையைச் சூறையிட்டு
மன்னவன்தாள் முன்னவந்து மண்டியிட்டு மேயிருந்து

### சோதி ஒன்று தோன்றிப் படைகளை விரட்டுதல்

"என்ன அதிசயமோ" இனிஅறிய வேண்டு?மென்ன

### சவ்வீரமன்னன் இனாவுதல்

எந்தநாடு? எந்தஊர்? என்னபெயர்? எங்குவந்தாய்?
சிந்தைமகிழ்ந் தேயுரைத்தாற் சேராது தீங்குகண்டாய்!
அல்லவென்று நீமமதை யாகஇருந் தாயானால்
கொல்லவும்நான் சொல்லிடுவேன் கொப்பென்றே[2] ஓடிவிடு

### இந்திரகோமான் பதில்.-போருக்கழைத்தல்

"ஒன்னா[3] லியன்றவலு வுள்ளமதெல்லாம் வஞ்சமின்றி
இன்னா ளெதிர்வந்து எதிர்த்திடுவா யாமாகில்
ஊர்பேர் அறிந்துகொள்வாய் உன்திறமை யுங்காண்பேன்
பார்பார்பின் வாங்காதே பார்த்திபனே" யென்றுரைக்க

### சவ்வீர மன்னன் போரிடல்

கண்கள் சிவந்துநின்று, கற்றைகற்றை யாயுகுத்து,
மண்கள்யடங் காச்சேனை[4] யிட்டுமித மில்லாமல்,
வந்துநின் றார்கொலுமுன் வாவெனவு மார்ப்பரித்து,
சிந்துகணை யின்னதெனச் செப்புவதா ரிப்புவியில்?

1. கங்குகரை - அளவு.

2. கொப்பென்று - வேகமாக.

3. உன்னால்.

4. மண்கள் அடங்காச்சேனை - பூமி கொள்ளாத சேனைகள்.
"பார்சிறுத்தலிற் படைபெருத்ததோ? படைபெருத்தலிற் பார்சிறுத்ததோ?" (கலிங்கத்துப் பரணி: காளிக்குக் கூளி கூறியது. 37) எனப்பாடிய செயங்கொண்டாரின் (கி. பி. 12) கற்பனை ஈண்டு நினையத் தக்கது.

### இந்திரகோமான் ஒரு தேவனோ?

சோணை[1] மலைபோலச் சொலித்தகணை யத்தனையும்
தானைகளின் மேல்மாறித் தாக்குமென்றான் மந்திரத்தால்;
வந்தபடை யாவும் மடிந்தவகை கண்டரசன்,
சிந்தைதனில் எண்ணிஅவன் தேவனே யாகுமென்று,
''ஆனாலா கட்டுமினி யான்அரசன் என்பதுவும்,
வானாடு மெய்க்க மதிக்கஅர சாண்டதுவும்
இன்றறிவேன்!'' யென்று யெழுந்தா னிரதமிசை!

### சவ்வீர மன்னனும் இந்திரகோமான் முதலானோரும் பொருதல்

அன்றுவந்த வீராள்[2] அளவிடவும் போகாதே
சுற்றி வளைந்துகொண்டார் சூரியனுந் தோன்றாமல்
வெற்றி முரசடித்து வேகக் கணைபொழிந்தார்
ஒன்றுபத்து நூறு ஒருகோடி யாய்க்கணைகள்
நின்றவர்கள் ஏவ நிலைகுலையச் செய்திடுமே!
இந்திர கேசரியாம் என்னுமிள மந்திரியும்
தந்திரமாய் வந்தகணை தன்னையத[3] மாக்கிவிட்டு
பந்துபோ லேகிளம்பி பார்த்தவிட மெல்லாமும்
வந்துவந்து குத்தி வதைத்தாரே யோர்கணத்தில்;

### சவ்வீரமன்னன் குச்சரன் சக்கரத்தை ஏவுதல்

ஆனையள வில்லாதா யார்ப்பரித்து ஆண்சிம்மம்
மானு முரு[4]வெடுத்து மாட்டிவதைத் தேகொலுமே
காலா லுழப்பிடுவார் கையாற் பிசைந்திடுவார்
வாலா லடித்துநின்ற வல்லவரைக் கொன்றதுவே
பக்கநின்ற குச்சரனும் பார்த்திப னும்பார்த்து
தக்க கணைதெறித்தே தாக்கினான் சங்கமதாய்
அந்த உருவொழித்து ஆங்காரப் பூதமதாய்க்
கந்தவே ளைத்துதித்துக் காவலன்முன் னர்வந்து

1. சோணைமலை—சோணாசலம் - அருணாசலம் - திருவண்ணாமலை.
2. வீரர்கள்.
3. அதம் - அழிவு.
4. மானும்+உரு. ஏற்ற உருவம்.

தொட்டகணை[1] யத்தனையுந் துண்டாய் ஒடித்தெறிந்து
''வட்டவரி[2] வில்லுடையாய் வாங்கிவிடு பாணமெல்லாம்!''
யென்றவுடன் சக்கரத்தை ஏவினான் குச்சரனும்,
வென்றருள்வாய் குன்றைமலை வேலவரே யென்றுநின்றார்.

### சக்கரம் இந்திரகேசரிமுன் பணிதல்

அப்போது சக்கரந்தான் ஆங்கார முந்தணிந்து
ஒப்பேது மில்லா துயர்ந்தவிந்திர கேசரியை
முக்கால்[3] வலம்புரிந்து, ''முருகன் அருளால்,
எக்காலும் நின்னரசே யிந்தநகர்!'' என்றுசொல்லி
செவ்வேலின் கைமலரிற் சேர்ந்ததே சக்கரமும்!

### குச்சரன் தன்மனைவியை அழைத்து வரச்சொலல்

அவ்வேளை யிற்பாய்ந்து ஆண்மையிந்திர கேசரியும்
குச்சரனை யேபிடித்து, ''கொல்லுவேன்'' என்றவுடன்
அச்சமிக உண்டாகி ஆண்மைத் திறங்குலைந்து
''மந்திரி நீலகண்டா மனையாளை நீயழைத்து
வந்திடுவா யெ''ன்று வழுத்துமன்னன் தன்வருத்தஞ்
சிந்தி(யன லாய்க்)கொளுத்தச் சென்றமுர்த வல்லிதனை
முந்தித் தொழுது முறையாகக் கூறலுற்றான்:

### குச்சரன்மனைவி அமுதவல்லியிடம், நீலகண்டர் கூறல்

''நம்முடைய பட்டணத்தில் நமனை[4](ப்)போல் வந்தொருவன்
வம்மி[5]னெனத் தானழைத்து வலியவந்து போராடி
பட்டணத்தி லுற்றவரைப் பாகாகக் கொன்றுழக்கி
யெட்டநின்ற மன்னவரை யெட்டிஅவன் தான்பிடித்துத்

1. தொட்ட கணை - செலுத்திய அம்பு. தொடுதல் - செலுத்துதல்.
''கடுங்கணைக டம்மைத் தொட்டனன்'' (கந்தபு. சூரபன்மன்வ. 191).
2. வட்டம் - திருத்தம். வரி - நீளம்.
3. முக்கால் - மூன்று முறை.
4. நமன் – எமன்.
''நாமார்க்குங் குடியல்லோ நமனை யஞ்சோம்!'' (தேவா. 1236. 1)
5. வம்மின் + என வம்மின் வாருங்கள்.

தேர்தனிற் கட்டலுற்றாள் தேகம் படபடக்க
வீரன்என் னைஅழைத்து வேல்போன்ற கண்ணாளைக்
கூட்டித்தரு வீரென்று கூறினா னெங்கோமான்

### குச்சரன் மனைவி ஓடிவந்து காணல்

ஏட்டிலடங் காத்துயரை என்னவென்று நானுரைப்பேன்?''
யென்னவுமவ் வேந்திழையாள் எரியி விடும்மெழுகாய்
வண்ணநிறங் குன்றி வடிவுகளும் வேறுபட்டு
தன்னைமறந் தோடிவந்து தார்வேந்தன் தாள்பணிந்து,

### குச்சரன்மனைவி புலம்பல்

'' என்னை மணந்தபலன் ஈதோ யிறையவனே ?
முந்தித் தவமிருந்து[1] மொய்குழலைப் பெற்றதுவும்
பிந்திய தில்விளைந்த பேரா துன்புகளும்[2]
ஆற்றவுங் கூடாமல் அழுதுகொண்டே யானிருக்க,
மாற்றா[3] னூரைவந்து மடக்கிவலுக் கொண்டானோ?
அடிமே லடியடித்தா லினியார் பயப்படுவார்?
கொடியா னிரேனெ''ன்று கூறியிறக் கத்துணிய,
மந்திரியும், ''கூட மடிவே னெ''னவெழுந்தான் !

### இந்திரகேசரி ஆறுதல் கூறுதல்

இந்தவகை கண்டு இளம்இந்திர கேசரியும்
பைந்தொடியைக் கையமர்த்திப்[4] பார்வேந்தரைக் கட்டவிழ்த்து
சந்தடியைப் போகவென்று சாற்றுவா னோர்வசனம்
''என்னை மதியாமல் இறைவன் மொழிந்ததனால்,
மின்னே[5] இவ்வாதை மிகுந்ததே மன்னனுக்கு!
விட்டிடு யென்றுயானும் விளம்பும் படிநடந்தால்
அட்டியில்லை நீங்கள் அரசாட்சி செய்திடலாம்!

---

1. ''முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்தே'' என்ற பட்டினத்தார் (கி. பி. 10) வாக்கு நினையலாம்.

2. குச்சரன் மகளை நாகேந்திரன் தூக்கிச் சென்றதால், மகளைப் பிரிந்து வருந்துகிறேன் எனக் குச்சரன் மனைவி இங்கு புலம்புகிறாள்.

3. மாற்றான் - பகைவன். ''தன்வலியு மாற்றான் வலியும்'' (குறள்471).

4. கையமர்த்தி - தேற்றி.

5. குச்சரன் மனைவிக்கு விளி.

### இளம்பெண்ணால் ஏற்பட்ட துன்பமென்ன?

யேதோ போன்ற இளங்கொடியால் துன்பமென்று
மாதே மொழிந்தாயே மற்றுமதி நுட்பமெல்லாங்
கூறு''மென நின்றுஇந்திர கோளரி[1]யுங் கேட்டவுடன்,
மீறு மிளமுலையாள் மேலோய்கே ளென்றுரைப்பாள்,

### குச்சரன் மனைவி தன்மகளை இழந்த கதை கூறுதல்:

பாருலகை யாண்டிடுனாட் பாலனொன்று வேண்டுமென்று
யாருமெதி ரில்லா[2] தானைத் தொழுதுநின்றோம்
சத்தியுடன் வந்தஅய்யன் தந்தார்பெண் சந்ததியைப்

### பொற்கொடி பூங்காவனம் சென்றாள்

பக்தி யுடன்வளர்த்துப் பருவங்கள் ஆனவுடன்
பூங்கா வனமதில் பூவெடுக்கப் பொற்கொடியாள்
பாங்காய் அனேகயிளம் பாவையர்க ளோடுசெல்ல

### நாகேந்திரன் கவர்ந்து சென்றான்?

அங்கேநா கேந்திரன்வந் தாங்காரங் கொண்டதட்டிக்
கொங்கைசுமந் தேதிரிந்த கொம்[3]பனையார் ளைப்பிரித்து
பாவிபா வீன்றயிளம் பைந்தொடியைக் கொண்டு சென்றான்

### அவன் எங்கொளித்தனனோ

நாவினாற் சொல்லரிதென் நாதனெதி ராடிடவும்
வந்து சமர்[4]தொடுத்தார் வல்லபத்தை(க்) கொள்ளையிட்டு
இந்து[5]நுதற் பைந்தொடியை யெங்கொளித்துக் கொண்டானோ
அன்றுமுத லின்று ... ... ...
பொன்றியும் ... ... ...

---

1. கோளரி - வலிமை உள்ள ஆண் சிங்கம்.
2. எதிரில்லா - நிகரில்லா.
3. கொம்பு - பூங்கொத்து.
4. சமர் - போர்.
5. இந்து - சந்திரன். ''அருக்க னெச்சன் இந்துவனல்'' (திருவாச, 13, 4) (இ. பி. 9.)

அதனிலிந்தக் ... ... ...
வதனமினி ... ... ...
இந்திரகேசி ... ... ...

**உம்பெண்ணை இந்திரகோமானுக்குத்
தருவீராகில், உங்களைக் காப்போம்
என்று இந்திரகேசரி கூறுதல்**

இந்திரனொளி போலாகச் சார்ந்தஇளங் கன்னிதனை(க்)
கொண்டுவந்து சேர்த்திடுவேன் குற்றமொன்றும் வாராமல்
கண்டு மகிழ்ந்துயெந்தன் காவலனுக் கேகொடுப்ப
துண்டாகில் உங்க ளுயிருடன்வாழ் வுந்தருவேன்

**நாங்கள் வருமளவும் நாட்டைப்
பாதுகாக்க வேண்டும்!**

வண்டார் குழலாளே, வார்த்தைவதிற்[1] சொல்லுமென்ன,
அமுதவல்லி ... ... ...
குமுதவாயா ... ... ...
இவ்வாசையுந் ... ... ...
செவ்வையுடன் ... ... ...
தன்னோடும் வந்தது ... ...
இன்னாடுதான் ... ... ...
குச்சரனைக் கட்டவிழ்த்து கோவேசவ் வீரநகர்
அச்சமின்றி யாண்டிடுவீர் அன்பான சேனைதனை
தாய்போலக் காத்திடுவாய் தான்போய் வருமளவும்
நீ(ப)ாது காராவிடில்[2] நெஞ்சைப் பிளந்திடுவேன்!

**உங்கள் மகளை என் தலைவனுக்கே
தரல்வேண்டும் என மீண்டும்
இந்திரகேசரி மொழிதல்**

யென்னரச னும்யானும் இந்தச் சணம்போறோம்
பொன்னகரஞ் சென்றாலும் பூலோகஞ் சென்றாலுங்

1. பதில் வார்த்தை.
2. பாதுகாவாவிடில்.

கொண்டுவந்து உந்தன் குமாரத்தி யைத்தருவேன்
கண்டுமகிழ் வாகியெந்தன் காவலனுக் கேகொடுப்பாய்!

**சொன்னமொழி காக்கும் சூரியகுலம்**

மன்னவன் முன்னாலே மனமகிட்சி[1] யாய்ப்பேசிச்
சொன்னமொழி யைமாறோஞ் சூர்யகுல வங்கிசம்யாம்[2]!
யென்று திடஞ்சொல்லி யெழுந்தா ரிருவருமாய்;

**குச்சரன் மகளைத் தேடுதல்**

குன்றுகான் யாறு கொடிய வனங்களெல்லாம்
ஓடினார் அங்கு ஒருவழியும் காணாமல்
வாடினார் "குன்றை மலைக்குமரா!" வென்றவுடன்,

**குன்றைக்குமரன் தோன்றி வினாதல்**

வேட வடிவுடனே வில்லம்புங் கைப்பிடித்து,
"காடதனில் நீங்கள்வரக் காரணம்யா துங்களுக்கு?
ஓழிவாக வேட்டைசெய்ய ஓடிவந்த கள்ளர்களோ?
வழிதவறி வந்தவரோ? வார்த்தைவதிற் கூறுமெ"ன்ன,

**நாங்கள் தடுமாறும்போது வந்த அண்ணலே!**

"அண்ணரே, யாம்வேட்டை யாடுதற்கு வந்ததல்ல
வண்ணவொரு பெண்மான் மயக்கத்தால் இங்குவந்தோம்.
பாதையுங் காணோம் பசியும் மிகுதிகண்டாம்
வாதை[3]யடை யும்போது வந்தாயே நீதுணையாய்க்
குன்றைமலைக் கந்தையன் கூட்டிவந்து விட்டதெ"ன்ன
கன்றை விளவெறிந்த[4] கண்ணன்மரு கனுரைப்பான்,

**நாகேந்திரன் கவர்ந்துசென்ற பெண்ணை மீட்க வழிகேட்டல்**

"தம்பியரே நீங்களுண்மை தானுரைத்தீ ராமாகில்,
தும்பங்[5] களைவேன் துணைக்காயுங் களுக்காவேன்!

1. மனமகிழ்ச்சி.
2. வங்சிசம் - வம்சம் - பரம்பரை.
3. வாதை - துன்பம். "வாதைப்படுகின்ற வானோர்" (தேவா. 570, 2),
4. விளாமரம் வடிவிலும் கன்று வடிவிலும் அரக்கர்கள் தோன்றி, கண்ணனைக் கொல்ல முயலுகையில், கண்ணன் அக்கன்றைப் பிடித்து மரத்துமீது வீசி, இருவரையும் அழித்தான் என்ப.
5. துன்பம்.

சொல்லு''மென மந்திரியுஞ் சொல்லுவான் சூட்சமதாய்,
''வெல்லுந் திறமிகுத்த வேந்துக்குச் சரனீன்ற
சந்திர னொளிதோற்குஞ் சவுரியென்னுங் கன்னிகையை(த்)
தந்திரமுடன் நாகேந்திரன் தானெடுத்துச் சென்றானும்
அவளை யழைத்தேக யாங்களிரு பேரும்வந்தோம்
இவ்வளவு தான்பாதை யினியுரைப்பீ ரென்றனரே!

### புவியாசை இல்லாரே போகலாம் எனல்

வேடரைப்போல் வந்தஅய்யன் விள்ளுவான் தெள்ளிமையாய்
தூக்கிப்போம் போதுகண்டேன் தோள்வலியு முள்ளவன்காண்
தாக்கியெதி ராடவென்றால் தகிப்பான[1] விசாக்கினியால்[2]
நாகலோ கம்போக நானுமறி வேன்பாதை
போகலாம் இந்தப் புவியாசை யைவெறுத்தார்;

### நாகலோகத்துக்கு வழிகூறல்

பாதை யுரைப்பேன் பசியுந் தணிந்திடுவேன்
வாதைபெற்றால் என்னைநினை வந்துஅதை யுந்தீர்ப்பேன்
இந்தவனம் விட்டு யெழுநூறு யோசனையில்
கந்த வனமிருக்கும் காட்டானை கோடியுண்டாம்!
சிங்கம் புலிகள் சிலுக்கும் மயிர்க்கரடி
பங்கப்[3] படுத்துமது பாதைநிறைந் தேயிருக்கும்

### பாம்பு நிறைந்தவழி

அதுவுங் கடந்தேகில், அன்பது[4] யோசனையில்,
மொதுமொதெனப் பாம்பு முழங்கிமுன் னாகவரும்!
அப்பால் அதுநீங்கில், அங்குமொரு யோசனையில்

### காளி தாக்கும்

தப்பாம லேதண்டு தாக்கி உயிர்மடிக்கும்!
மற்றுமரை யோசனையில் மாவீர காளியொன்று,
பற்றுமுயி ரைக்கவரும் பாதாளஞ் செல்லரிதாம்!

---

1. தகிப்பான - கொதிக்கின்ற.
2. விஷ நெருப்பால்.
3. பங்கம் - அச்சம்.
4. ஐம்பது.

### நாகேந்திரனை வெல்ல யாரால்முடியும்?

எல்லாமுந் தான்கடந்து யேகினால் நாகேந்திரன்
பொல்லாதவன் கோட்டைவழி போகஎவ ரால்முடியும்?
தெய்வவலு வால்நீங்கள் தெள்ளிமையாய்[1] சென்றாலும்
தையல்தனைக் காண்பரிது தானைவலு வுள்ளவன்காண்!"

### இளைஞர் வீரம்

"அவனைச் செயிப்பதற்கு ஆகா தெவராலும்?
(சி)வனையுங் கூடச் செயிப்போம் வழிதெரிந்தால்!"

### குன்றைக்குமரன் செல்லவும், இருவரும் கந்தவனம் ஏகுதல்

யென்னவழி காட்டிவிட்டு[2] யேகினா ரெம்பெருமான்
மன்னனிந்திர கோமானும் மந்திரியிந்திர கேசரியும்
கெருட வடிவாகி கிறுகிறென வேபறந்து,
தருகா[3] தெழுநூறு தான்யோச னைகடந்து
கந்தவனம் வந்தமரக் காட்டானை சூழ்ந்ததுவே!

### காட்டானையுடன் போர்

அந்தமுள்ள வீரர்களால் ஆயுதங்க ளோடுசென்று
கோடிதொகை யானைகளை(க்) குத்திக் குடல்சரித்து
நாடிவந்த ஷடசெந்தை[4] நாசப் படுத்திவிட்டு,

### நாகங்களுடன் போர்

பின்னும் விசையாகப் பெருக்கஅன்ப தோசினையும்
உன்னு[5]மள விற்செல்ல ஓடினதே நாகமெல்லாம்!
அனந்தன்முதற் கார்க்கோட னானயெட்டு நாகமட்டுஞ்[6]

---

1. தெள்ளிமையாய் - அறிவுடன்.
2. "சிவனையும் செயிப்போம்" என இளைஞர்கள் கூறவும், வழிகாட்டி விட்டு, என இயைக்க.
3. தருகாது - தங்காது.
4. ஷடசெந்தை - ஜட ஜந்தை.
5. உன்னும் - நினைக்கும்.
6. அனந்தன், ஆதிசேடன், கார்க்கோடகன் முதலாய எட்டுப் பயங்கர நாகங்கள் பாதாளத்தே இருப்பதாகக் கூறுவர். பாரதத்தில் இவ்விளக்கத்தைக் காணலாம் (உதங்கன் கதை).

சினந்தவாயி லிலெதிர்த்துச் சீராடி நின்றவுடன்
இந்திர கோமா னிதுவோ யெதிரியென்று
தந்திரத்தால் மந்திரித்துத் தானுண்டை யாயுருட்டி
தூக்கிக் கடல்தனில் தொப்பென்று விட்டெறிந்து,

### இந்திரகேசரியும் கிழட்டுப் பாம்பும்!

பாக்கியொரு கிழட்டுப் பாம்புதடு மாறிநிற்க,
இந்திர கேசரியாம் என்னும் இளங்கருடன்
சுந்தரரு ளால்பிடித்துக் கட்டியுன்னைக் கொல்லவென்ன,
அஞ்சிப் பயந்ததுவும், "அப்பனே, கொல்லாதே!
நெஞ்சிருக்கும் (வெண்ணமிதை) நீஎனக்குக் கூறினக்கால்,
பஞ்சை[1]யென்னால் ஆனமட்டும் பாரவுதவி[2] செய்திடுவேன்!
தஞ்சமென்னைக் காரு"மென்று தாளிற் பணிந்ததுவே!

### இந்திரகேசரி நிபந்தனை!

"நாகலோ கத்தின் நடவடிக்கை யையுரைத்தால்
சாகாமல் உன்னுயுரைத் தப்புவித்துச் சார்பாவேன்[3]"

### அப் பாம்பு வழியுரைத்தல்

சொல்லென வும்பயந்து சுந்தரரே கேளுமென்று
வல்லொன்றுங் கும்பதன வல்லியிள மின்னாளை
களவெடுத்து வந்து காவல நாகேந்திரன்
அழகான வீடொன்று அமைத்து அதிலிருத்தி
... ... வர்களையும் காவல்வைத்து
காயிற[4] சூரியனுங் காணாது[5] காந்தியுள்ளாள்

### பாம்பின் கண்ணீர்

அய்யோ சிறைவைத்தான்! ஆர்பெற்ற கண்மணியோ
துய்யாரே யென்பின் துடர்ந்துவரு வீராகில்
கொண்டுபோய் விட்டிடுவேன் கோபமென்மேல் வையாதீர்!

1. பஞ்சை - எளியோன்.
2. மிகுந்த உதவி.
3. சார்பாவேன் - உன்பக்கமாவேன்.
4. காய்கின்ற.
5. காணாது - சுடாது.

### பாம்பு வடிவெடுத்து மங்கையைத் தேடிச்செலல்

யுண்டு ... ... வந்துபாருமென்ன,
(ஆத்திர நாகரிட) ... பாதமதி லேபணிந்து[1]
வெத்தி கொடுமென்ன, விளம்பினாள், "போங்களெ"ன்றே
அந்தவுரு மாற்றி அமைந்தா ரிருஅரவாய்
சிந்தைமிக வேமகிழ்ந்து சென்றார்கள் மூவருமாய்
அதலவோ[2] கம்முதலாய் ஆனபா தாளம்வரை,
குதலை[3] மொழியுடைய கோளரிகள்[4] தான்கடந்து,

### எங்கு ஒளிந்தான் நாகேந்திரன்?

மங்கை பருவ வயதுடைய மாதரசைக்
கொங்கை சுமந்த கொடிபோ லிடையாளை
பெண்கள் சிகாமணியைப் பேரறஞ் சவுரிமின்னை
கண்கள்கா ணாதொளித்தான் அந்தநா கேந்திரன்றான்
யென்றுமயங் கு(ம்)போ திளையவிந்திர கேசரிதான்

### இந்திரகேசரி ஞானக்கண்ணால் காணுதல்

நின்றுஞா னக்கண்ணால் நேரிழையை ஆராய்ந்தான்
காவலர்கள் சூழவைத்த கன்னியர் மாடமொன்று
ஆவல் பெறக்கட்டி அதில்வைத் திருப்பதுவும்
சுற்றிநிறைந் தேயிருக்கும் சூராள்தன்[5] வல்லபமும்
வெற்றியுட னாகவட மேற்கிலிருக் கின்றதென்று
இந்திர கோமானுக் கேயுரைத்தான் மந்திரியும்

### சென்றுவரும் வழியைக் கூறுக எனல்

தந்திரமாய்ச் சென்றுவருந் தன்மையினைச் சாற்றுகென்ன
இந்திர கேசரியும் எடுத்துரைப்பான் மன்னனுக்கு

---

1. இந்திரகோமானும், இந்திரகேசரியும். 3. குதலை - மழலை.

2. அதல லோகம் - கீழ் உலகங்களில் ஒன்று எனக் கூறப்படுவது.

3. குதலை-மழலை

4. இந்திரகேசரி, இந்திரகோமான் முதலானோர் நாகதெய்வத்தை வணங்கி விடைபெறுகின்றனர். ஓலை அரிப்பினால், இப்பகுதியிலுள்ள சில சொற்களை அறியக்கூடவில்லை.

5. சூராள் - வீரர்கள்.

### வீணாய்க் கலகம் செய்யக்கூடாது என இந்திரகேசரி எச்சரித்தல்

பந்திபந்தி யாயிருக்கும் படைகளுக்குந் தோன்றாமல்
நாங்குறித்த கன்னியின்பால் நாடியவ ளுண்மைபெற்று
தீங்குசெய்ய வந்தவரைத் தெண்டிப்ப தல்லாது
வீணாய்க் கலகம் விளைவித்துக் கொண்டாக்கால்
தோணாது போலவருந் துன்பமனே கங்கண்டீர்!

### "நீ கிளி உருவெடுத்துச் செல்க"

இப்போது கொண்டவுரு விங்கே அகற்றிவிட்டு
ஒப்போது கில்லா உயர்கிள்ளை ரூபமுடன்
நாமளிரு பேருமிந்த நாளிகையி லேபறந்து
காமக் களஞ்சியநீ காணவென்ற கன்னிதனை(ப்)
பார்த்தவுட னேநீரும் பஞ்சவண்ண ரூபமோடும்

### "நான் பூனையாய் வருவேன்"

ஆர்த்துச் சினமுடனே யான்பூனை யாய்வருவேன்
அப்போது கன்னிகடைக் காலமென் றோலமிட்டு
தப்பேதும் வாராது தான்செல்லுவீர் சன்னல்வழி

### "கிளியாகிய உன்னோடு விளையாடுவாள்"

யென்னையவள் கண்டு யிகழ்ந்துவுமை யாதரிப்பாள்
மின்னை[1] நெருங்கி விளையாடி மேவிடுவீர்
பின்னால் விளைவதனைப் பேசுதற்கு நேரமில்லை
மன்னா"வென் றந்தவிள டந்திரியுங் கூறினனே!

### இந்திரகோமான் கிளி வடிவில் போதல்

ஆமென்று மன்னவனும் ஆறுமுக னைப்பணிந்து,
ஓமொன்ற மந்திரத்தா லோர்நொடியி லேபறந்து,
கன்னியிருக் கும்மாடம் கண்டுசன்ன லின்வழியே
முன்ன மொழிந்த மொழியுரைத்து முன்குதிப்ப,

1. சவுரியை. உருவகம்,

### கன்னி, கிளியை அணைத்துப் பூனையை விரட்டுதல்

கண்டாள் சவுரிமின்னாள் கண்கள் களிப்படைய
கொண்டாள் அணைத்தாள் குயத்தோ[1] டழுந்தவுந்தான்
விரட்டிவந்த காட்டு வெருகை[2]யடித் தோட்டுமென்று
முரட்டுத் தனமுடைய மூப்பிய[3]ருக் கேயுரைத்தாள்

### கிளியின் உபசார வார்த்தை

தொரட்டுவித மென்றுமந்திரி தோற்றாம லேஒளித்தான்
கறட்டுத் தரைசொலிக்குங்[4] கண்டற்கோ டாலியைப்போல்
இந்திர கோமானும் இன்பக் கடல்மூழ்கி
புந்திமகிழ்[5] வாகிஅந்த(ப்) பொற்கொடியா டன்மடியில்
வீற்றிருந்து கொண்டு விளம்புமனேகவார்த்தை
"தேற்றியென்னை ஆதரித்த தெய்வம்நீ யாகுமதோ!
யுனக்குக்கை மாறாக யோருதவி செய்யறியேன்
தனக்குளதின் மேல்விருப்போ தானறியக் கூடலையே!"

### கிளியே அஞ்சாது இரு

யென்று உபசாரம் இயம்புகிள்ளை யைப்பார்த்து
யொன்றுக்கு மஞ்சாதே யுன்னையென்று மாதரிப்பேன்
என்னிடத்தி லேயிருந்து இன்பமொழி யேயுரைத்தால்
ஒன்னிடத்தில் ஆசை யொழியாதென் றேயுரைக்க

### நீ தனியா இருந்தால் சொல்வேன் எனக் கிளி கூறல்

"தாதியரை[6] நீங்கித் தனித்தோ ரிடத்திருந்தாற்
சேதிஅனே கங்களுண்டு செப்புவேன்" என்றதுவே

---

1. குயம் – மார்பு.
2. வெருகு - காட்டுப்பூனை.
3. மூப்பியர் - முதிய பணிப் பெண்டிர்.
4. சொலிப்பது – பெயர்ப்பது, வெட்டுவது.
5. புத்தி என்பது மேலெதுகை நோக்க, மெலிந்தது.
6. தாதியரை - தோழிப்பெண்களை.

### அவள் தனியாக இருத்தல்

அதுவை[1] யறியவென்று யாயிழையா லின்னேரம்
கதுமெனவே தான்படுக்குங் கட்டிலிலே தான்விடுத்து(த்)
தாதியரை, தற்சூழும் தையலரை(த்) தானகன்று
ஆதிமனைக் குள்ளாகி அந்துமனை[2] தாட்பூட்டி,
யேகசிங் கார மிலங்குகட்டில் மேற்படுத்து,
மோகப் பசுங்கிளியை முத்தமிட்டுச் ''சொல்லு''வென்ன,

### கிளி, அவளின் வரலாற்றைக் கேட்டல்

''எந்தன் வரலா(று) இயம்பிடுவேன் பின்னாலே,
யுந்தன்வர லாறுதன்னை ஓதுவாய்!'' என்றதுவே

### சவுரி தன் வரலாறு கூறல்

அப்போது சவுரிமின்னா ளன்னைதந்தை யைநினைத்து
எப்போது காண்பே னெளியாலென் றேக்கமுற்று,
''கேளாய், வனம்வாழுங் கிள்ளையே, யான்பிறந்து
வாளாற் செயம்படைத்த வள்ளலெந்தை குச்சரனும்,
அன்னை யமுர்தவல்லி, அமைந்தமந்திரி நீலகண்டன்;
பொன்னை நிகர்க்கும் புகழ்பெற்ற சவ்வீரம்!
ஆண்டுவரும் நாளில் அரனைவேண் டித்தவங்கள்

### ''தவத்தால் பிறந்தேன்; மதிபோல் வளர்ந்தேன்''

வேண்டுமெனக் கேட்க விருப்பா யெனையழித்தார்
மாண்டுவிடா தன்றே வளரும்மதி போல்வளர்ந்தேன்;
மீண்டும்அதி பக்குவமும் மேலாக மெல்லியரும்,

### பூவெடுக்கப்போனபோது பூவையை எடுத்துச்சென்றான்

நானுமாய்ப் பூவெடுக்க நாடினோங் கானகத்தில்
தானுமங்கு நாகேந்திரன் தன்[3]றளத்தி னோடுவந்து
பாங்கி யரைவிரட்டிப் பாவி யெனையெடுத்து,

---

1. கிளி கூறவேண்டியவற்றை.
2. அந்துமனை - அழகியமனை.
3. தளம் - படை.

### எதிர்த்த என்தந்தையை வென்றான்

நீங்கிவரும் போதுஎந்தை நேர்ந்துமே[1] சண்டைசெய்ய
தந்தைதன்னை வென்றுயிந்தத் தாரணியை யாளுமன்னன்
பந்தனஞ்செய்[2] தென்னைவைத்தான் பாவிபல
னொன்றறியேன் !

### சவுரிக்கு நேர்ந்த இன்னல்கள்

என்னைமணஞ் சூட்டமுன்ன மெண்ணிவந்த மன்னர்களைச்
சொன்னால் அடங்காதே சோடியில்லை[3] யென்றிகழ்ந்தேன்;
ஆனதனால் இந்தவிதிக் காளாக்கி னார்கடவுள் !
கானகத்தே மாளவென்றால், காவல்வைத்தான் தாதியரை
நேற்றுமுதல் இங்குவந்து நேர்பணிந்து கூடுமென்று,
பாற்றுளிதான் வெந்தநெய்யிற் பட்டதுபோ லேயிரைந்தான்
''போடா,நீ யிங்குநின்றால், போக்கிடுவே னென்னாவி !
கேடா? வுனக்குமதி கெட்டதா?'' வென்றிகழ்ந்தேன்;
பாங்கியரைப் பார்த்துயிந்தப் பாவையரைத் தேற்றுமென்று
நீங்கினான் அப்போது நீரும்வந்து சேர்ந்தையென்றாள்.

### இந்திரகேசரி தன் வரலாறு கூறுதல்:

''நல்லதுஎன் கண்மணியே நானுரைக்க நீகேளாய்!
வெல்லவகை யுந்தெரிவேன் வேண[4] வுருவெடுப்பேன்!
எந்தன்தந் தைநாமம் இசைப்பேன் சுசீலமன்னன்!
துன்றுமதி மேன்மை சொலிக்கும் அமுர்தபுரம்
தன்னையர சேபுரிந்து தாவில்லா[5] மல்வாழ்ந்து

### ''யாகத்தால் வந்தவர்கள் நாங்கள்''[3]

யென்னைப் பெறவேண்டி ஈசன்மக னாரிடம்போய்
புத்திரகா மேட்டி புரிகின்ற யாகமதில்
சித்திரமாய் ஓர்பூதஞ் செம்பொன் தளுகை[6]வைத்து
யோடி மறைந்துவிட வுண்டாளென் றாய்பாதி

1. நேர்ந்து-எதிர்ப்பட்டு
2. பந்தனம் செய்து - சிறை செய்து.
3. பொருத்தமில்லை.
4. வேணவுரு - வேண்டிய உருவம்.
5. தாவில்லாமல் - குறை இல்லாமல்.
6. தளிகை.

தேடியதி லுள்ளமிச்சம் தின்றாளென் மந்திரியன்னை
யுன்னை யளித்தாருக் குபதேசம் செய்தகந்தர்
யென்னையும் மந்திரியு மியல்பாய்ப் படைத்திடவே,

### அவர்களின் கல்விபற்றிக் கூறுதல்

மீறிவளர்ந் தோமதனை மேலான தந்தைகண்டு
தேறித் தெளிவதற்குத் தெள்ளிமையாய்க் கற்கவைத்தார்
மந்திரியும் யானும் மகாதெளிவாய்க் கற்றிடவே

### "அரசு இப்போது வேண்டாம்; பல அரசுகளை வென்ற பின்னேதான் வேண்டும்"

தந்திரமாய்ப் ''பூமி தனையரசு செய்யுமெ''ன்றார்
திக்விஜயங் கள்செய்து திவ்யஅர சாள்வதன்றி
யிக்குவலை[1] அஞ்சுமக வேண்டுமென்றோ மெம்மையீன்றார்!
ஆணவத் தோடெழுந்து அரசாட்சி செய்வோரை
எங்களுக்குக் கீழ்ப்படுத்தி யேகினோ முந்தைநகர்
பங்கப் படுத்திமந்திரி பார்த்திப னை(ப்)பிணித்தான்!

### "உன் தாயின் துயரத்தை அறிந்தோம்"

அப்போ துனையீன்றாள் அலறியங்கு தானும்வந்து
''எப்போதுந் துன்பமென்றே யிறையோ யெழுதினனோ
ஆணில்லை யென்றுமுன்னாள் அரியதவங் கள்செய்ய
பூண்உலக்கைப் பைங்கொடியைப் பூதனா தன்அளித்தான்
வளர்ந்தகோ நாகேந்திரன் வந்துயெடுத் தேகவன்னாள்(த்)
தளத்தோடும் போயெதிர்த்துத் தாட்சியடைந் தேயிருந்தீர்
வேதன் விதித்தானோ? வேறரசன் ஆட்கொளவே
நாதனே சங்கரனே நாங்கள்என்ன செய்வமெ''ன்றாள்!

### "எனது அமைச்சன் உன் தாயிடம் உறுதிமொழி வாங்கியுள்ளான்"

அன்னேரம் எந்தன்மந்திரி யானஇந்திர கேசரியும்,
''மின்னே மயங்காதே! மெல்லியளை யான்தருவேன்
எந்தனர சுக்கவளை யீய்வதென்று வாக்களித்தால்,

1. குவலை—குவலயம் - உலகம்.
''குவலயமிசைக் குப்புற்று'' (கந்தபு. தாரக. 51).

யுந்தன் மகளை ஒருநிமிடம் யான்கொணர்வேன்!''
யென்று உறுதிசொல்லி யிங்குவந்தோம் யேந்திழையே!
அன்றுமாற் சாலம் அதுவந்தான் என்மந்திரி!
ஆதிமுத வீறாக யான்மொழிந்தே னாயிழையே![1]''

### உண்மை உருவைக் காட்டுக எனச் சவுரி கூறல்

சேதியெல் லாஞ்சரிதான் சிறந்தவுருக் காட்டுமென்றாள்
சுயரூபத் தோடுநின்றான் சுந்தரப் பூமுடியான்![2]

### சவுரியின் அதிசயம்

செயம்வருங்கா லங்களென்றே செந்தா மரைமுகத்தாள்
மன்மதனோ? யிந்திரனோ? மாலோ மறையவனோ?
பொன்மான்பின் னாற்றுடர்ந்த பூமா[3] னிராகவனோ?
அனலிற் பிறந்தாள்[4]தன் னாளன் அருச்சுனரோ?
கனமாய்க் குடைமிகுத்த கண்ண ரிவராமோ?
அல்லவல்ல நான்சாத்தி ரத்தாலே யளந்திடுவேன்
வல்லவராங் குன்றைமலை வாழுசுப்பிர மணியமென்றால்
ஆறுமுக மில்லையே? ஆனதொ ரேமுகமாய்
மீறும் பழனி மலைமேல்நின் றார்இவரே!

### சவுரியின் புலம்பல்

யென்னொளிவு தன்னால்அவ் வேந்திழையா ளும்மயங்கி
குன்றுதன விம்மவுடல் கூச்செரிந்து மேதுணிவாய்
பெற்றாளென் றேயளித்தாள் பெற்றேனென் கண்களிக்க,
''மற்றா ரினிவேண்டும் மாதுனக் காணனென்றாள்[5]
ஆசைக் கடலில் அழுந்தினே னாதரிப்பீர்!
வேசை யிவளென்றே வெறுக்காதீர் மன்னவரே!
பிறந்தேன் வளர்ந்தேன் பெறும்பயன்க ளுந்தெரியேன்;
துறந்தேகி னாலிறப்பேன் தோசமுமக் குண்டாமே!''
யென்று புலம்பி யிளங்கொடியும் வீழ்ந்துவிட்டாள்!

---

1. ஆயிழை - பெண். ''அம்பல மடைந்தன ளாயிழை'' (மணி. பதி. 67).
2. இந்திரகோமான்.
3. பூமான் - அரசன்.
4. திரௌபதி அனலிற் பிறந்தவளாகப் பேசப்படுவது இங்கு நினையத் தகும்.
5. ஆனேனென்றாள்.

### இந்திரகோமான் ஆறுதல்

நின்றுகண்ட மன்னவனும் நேரிழையா ளைத்தாங்கித்
தூக்கிமடி மேல்வைத்துத் துன்னும்[1] பசுங்கிளியை
வாக்கினயத்[2] தால்தேற்றி வாள்விழியா ளைப்பார்த்து,
"நானுமுன்போல் ஆசைகொண்டு நாடிவந்தேன் நாயகியே!
பானுமதி யுள்ளமட்டும் பட்சமற வேண்மயிலே!"

### இந்திரகோமானின் கிடக்கை

வாருமென்று கைபிடித்து வண்ணமுள்ள பஞ்சணையில்
சேருவோ மின்னாளே சிந்தைதடு மாறுதென்றான்;
காமன் கணைகள்வந்து கனலாய்த் தகிக்குதடி !
பூமன் மகளே பொருந்தயெனை யாதரிப்பாய்![3]

### கொடி கொம்புமீது படர்ந்தது

நல்லதென்றே கைகலந்தார்[4] நாகப் புணர்ச்சியைப்போல்
சல்லென்று மெய்வேர்க்கச் சரசசல் லாபமதாய்
ஏகார ஐகார ஓகாரமென்னும் இகரமுகரம்
விகாரமதை யேகொடுக்கும் வின்மதன னம்புஐந்து
யேகார மென்ற எழுத்தைநெஞ்சி லேயெழுதி
சோகமிகும் ஐகாரஞ் சொல்தனத்தில் தான்வரைந்து
கண்ணிலை காரத்தைக் கனமாக வேபொறித்துச்
சென்னி யிவிகரமதைச் சிறப்பாக வேதீட்டி
அரசிலை யாஞ்சின்ன மதில்உக ரம்எழுதி
விரசாய் முகநோக்கு வேற்கண்ணாள் வெட்கவிட்டாள்!
சேலை தனைக்களைந்து செங்கைரெண்டை யும்பிடித்து
காலையிடுப் பிற்பூட்டிக் காரியத்தைப் பாருமென்றாள்

1. துன்னும் - நெருங்கும்.

2. வாக்கின் + நயத்தால்.

3. ஆதரித்தல் - அன்பு வைத்தல்.
"அடியே னாதரித் தழைத்தால்" (திருவாச. 29.4)

4. கைகலந்தார் - ஒன்றாய்க் கூடினார். "மெய் புகுலன்ன கைகவர் முயக்கம்" எனப் பாடினார் ஔவையார் (அகநா. களிற். 11-10).

5. தாமரை, அசோகம், மா, மல்லிகை, குமுதம் ஆகிய பூக்கள் மன்மதனின் ஐங்கணைகள் எனப்படும்.

தானத்[1]திர ளானமாது தான்சேர வும்இருக்கிக்
கானப் புட்பம்போற் கன்னத்திற் கன்னவைத்து
கொங்கைஅக லம்பதியக் கொண்டேயிரு கால்புணைய
அங்கைமா றிப்பிடரி ஆகமிரு கப்பிடிக்க
வேகமடங் காமலந்த வேல்பொருஅங் கண்ணாளும்
''மோக மிகுத்தமன்னா முடிந்தமட்டும் போகுமெ''ன்றாள்
கொங்கையிறு கப்பிடித்துக் கொண்டான், நகம்பதித்தான்,
மங்கையித ழைச்சுவைத்தான் மாறிப்பு றம்படுத்தான்
குயவன் ரிகிறியது கொண்டுசுற்றும் பாவனையாய்
சயனமதி லேகிடத்திச் சாரையுஞ் சர்ப்பமெனக்
கொக்கோக மார்க்கமுறை குன்றாம லேபுணர்ந்து,

### இந்திரகோமானுக்கு இந்திரகேசரி நினைவு வரல்

தக்கோர் புகழ்ந்தேற்றும் தன்மனிந்திர[2] கோமானும்,
மாதுமுகம் பார்த்து''யெந்தன் மந்திரியும் நீங்கிவிட்டான்
ஏது விளைவாச்சோ? எனக்கொன்றுந் தோணவில்லை!''
யென்றுசொல்லி மன்னன் இறந்தவனைப் போலாக,

### சவுரி தேற்றுதல்

''யொன்றுதஞ்ச மில்லாமல் உன்னைநம்பு தற்கோநீ
பொன்றினது போற்கிடந்தீர், பூமானே?''[3] யென்றவளுங்
''கன்றி[4] மயங்குவதிற் காரணமுண் டோவரசே?
மந்திரி யெனக்கதிக மானபுத்தி சாலியென்று
இந்திர கோவே யிசைத்தீ ரெழுந்திருப்பீர்!

### மீண்டும் இன்பம்!

நானுஞ் சிவனருளால் ஞானங் களுமுணர்வேன்
கோனுமயங் காதெழுந்து கூடுமெ''ன்றாள் கொம்பனையாள்!
ஆமென்(று) எழுந்துமன்னன் அங்கவளை யேகூடிக்
காம விகாரத்தால் காளைதனை யேமறந்தான்!

1. தனத்திரள்.
2. தன்மன் = தன்மையன்.
3. பூமானே = அரசனே.
4. கன்றி - மனம் நொந்து.

### பகலில் கிளி, இரவில் மன்னன்!

பகலிற் கிளியாய்ராப் பட்டவுடன் மன்னனுமாய்
சுகம்அனுப வித்திருந்தான் சூராதி சூரனுந்தான்!

### மந்திரி இந்திரகேசரி நிலை

இவர்கள் இந்தவாறாய் இருப்பமந்திரி யேகினவன்
விபரம் இனிநன்றாய் விளம்புகின்றேன் அம்மானே!
கேசவனைத் தாங்கும் கெருட வடிவுடனே
தேச வளமுந் தெளிவாகத் தேர்ந்துமந்திரி

### மந்திரி நாகங்களைக் கொன்றான்

''நாகேந் திரனுடனே நானெதிர்த்துப் போராடி
வாகை புனைய வடிவேலர் அருளிருக்கச்
சும்மா விருப்பதுவுஞ் சூராள் தரமுமல்ல
செம்மான் மகளைத் திருடிவந்த சேவகனே!''
யென்றுசிந்தை வைத்து எழுந்து யிடியேறாய்
ஒன்றும்நிக ரில்லாமல் உள்நுழைந்து பட்டணத்தில்
கொன்றுகொன்று சர்ப்பமெல்லாங் குன்றாய்க் குவித்திடவே

### இந்திரகேசரி கருட உருவெடுத்தல்

நின்றுஅர சேபுரியும் நீதிமன்னன் நாகேந்திரன்
தன்தளத்தோ டேஎழுந்து தாக்கியிடு வாரதுவை
யென்பலத்தைக் காணா தெழுந்தான்நா கேந்திரனென
முன்பலத்தை வெல்ல முன்உதித்த ராமரைப்போல்
கோலங் கெருடனுருக் கொண்டான் அளவிலதாய்
ஒன்றா யிரமரவை[1] யோர்நொடியிற் காவிடுக்கி
யின்றா யிரக்க யெழுதினா ரென்றுசொல்லி
துய்யகடல்[2] மத்தியிலே தூக்கியழுந் தப்போட்டு
பையவந்து நாகேந்திரன் பால்நின்றா னேகெருடன்,

### நாகேந்திரன் சினம்

அப்போச் சினந்தே யடங்கா விசாக்கினியால்
''இப்போ தெரிந்திடுமுன் இங்குவந்த் வாறுசொல்வாய்!''
யென்றேநா கேந்திரன் இறுமாப் புடன்கேட்க,

---

1. அரவை - பாம்பை.
2. துய்ய கடல் - தூய்மையான கடல்.

### சாத்திரங்கற்ற நீ இப்படிச் செய்யலாமா?

குன்றே நிகர்த்தபுயன்[1] கூறுவா னோர்வசனம்,
''ஆதி சிவன்தனக்கும் ஆபரண நீயானாய்
மேதினியெல் லாஞ்சுமந்தாய் மேலாம் அமுர்தமுண்டாய்
சீதரனார் பள்ளிகொள்ளச் சேர்ந்தாய் அரவணையாய்
மீதான சாஸ்திரம் மேன்மேலாய்க் கற்றறிந்தும்,

### பெண்ணால் மடிந்தோர் கோடி கோடி

பெண்ணால் மடிந்தவர்கள் பேருலகில் மெத்தவுண்டு!
கண்ணான சானகியால் கயிலைஎடுத் தான்[2]மாண்டான்,
அனலிற் பிறந்தாள்மே லாசைவைத்து நின்கொடியான்
மனவிகிளை[3] தம்பியோடு மாண்ட தறிந்திலையாய்!
அகலிகை தான்சுகித்து ஆயிரங்கண் யோனிபெற்றான்
மகிதலத்து(க்)[4] கன்னிகையால் மாள்வதுநீ நிச்சயமே!

### இந்திரகேசரி நாகேந்திரனைக் கொத்துதல்

என்குலத்துக் கன்னிதனை யேயெடுத்து வந்தாய்நீ
யுன்குலத்தை யும்அழித்தே உன்முடியு மேதுணிப்பேன்[5]
பாருமென்று சொல்லிப் படபடெனப் பரகடித்து[6]
ஆருமெதி ரில்லாத ஆயிரம்நா வுள்ளவன்மேல்
கொத்தினா னேமிகுந்த கூர்மையுள்ள மூக்கதனால்!

### நாகேந்திரன் விஷத்தைக் கொட்டுதல்

வெத்திகொள்ள[7] வேணுமென்று விள்ளுவா னாகேந்திரன்
அருகுநின்ற தூதர்களை அந்தச்சண மேஏவி
பெருகும் விசக்குடங்கள்[8] பெருக்கமுட னேகொணர்ந்து
மேன்மூடி யைத்திறந்து மேலோன் மனங்கொதித்து
தான்முடிவின தாக்குமென்று தாக்குதலும் மந்திரியும்,

---

1. புயம் - தோள்.
2. கயிலை எடுத்தான் - இராவணன்.
3. மனைவி.
4. மகிதலத்து – உலகத்து.
5. துணிப்பேன் - அறுப்பேன்; வெட்டுவேன்.
''கவளங்கொள் யானையின் கை துணிக்கப்பட்டு'' (களவழி. 14) (கி.பி. 8)
6. பரகடித்து - சிறகடித்து.
7. வெற்றி கொள்ள.
8. விஷம் நிரம்பிய குடங்கள்.

**விஷம் வீணானது**

ஞான சிரமறுத்த சுப்பிரமண்ய மெய்ப்பொருளை
வீரன்நினைத் தேதுதிக்க, வீணான தேவிசமும்!

**நாகேந்திரன் கணைகள் வீசல்!**

கண்டு யிவன்தேவக் கடாச்சமுள் ளவனாகு
முண்டு விசித்திரங்க ளுள்ளதெல்லாங் காணவென்றே
''நாகலோ கத்தரசன் தான்கொணர்ந்த கன்னிதனை
வேகமுடன் நீவிடுக்க வேணுமென்றே வந்தாலும்
என்னைவணங் கிக்கேட்டா விட்டு(ப்)போ வென்றுரைப்பேன்;
முன்னையதை விட்டு முடிதுணிப்பே னென்றுசொன்னாய்
ஆனமட்டும் நீபாரென் னாலாகா விட்டாக்கால்
தானவளை விரட்டிடுவேன் தயிரியங்கள் உள்ளமட்டும்
பாருமெ''ன்று சொல்லிப் பராக்கிரமத் தோடுமவன்
சீறு மதிவிசையாய்ச் சிந்தினா னேகணைகள்!

**வடிவேலர் அருளால் கணைகள் சருகாதல்**

வந்தகணை யாவும் வடிவேலர் தன்செயலால்
சிந்த நொறுக்கிச் செயஞ்செயமென் றார்ப்பரித்து
சூழ்ந்தநா கங்களெல்லாம் சூறா வளிக்காற்றில்
வீழ்ந்த சருகொப்ப விறுவிறென வேசுழற்றி
சத்த சமுத்திரத்தில் தான்அழுத்திச் சாகவுமே,

**எம்பெருமான் முனிவர் வேடத்தில் தோன்றுதல்**

மெத்தவருத் தப்படுத்த மேலான நாகேந்திரன்,
''நங்குலத்தை வேரறுக்க நமனாய் இவன்உதித்து
இங்குவந்தா னோஅல்லது யின்னா னெனத்தெரியோம்
மாயவரே!'' யென்று மதிமயங்கும் வேளையிலே,
தூயமுனி யாகியங்கு தோன்றினார் எம்பெருமான்!

**முனிவர் அமைதிப்படுத்தி, இந்திரகேசரியை வினவல்**

இருவருக்கும் மத்தியிலே ஏகாந்த மாக[1]நின்று
ஒருவருங்கை மிஞ்சாதீர் உற்றவராய் இருங்களென்றே
நாகேந்திரா நீயுந்தர னிவனென்[2] றெண்ணினையோ

1. ஏகாந்தமாக-தனிமையாக.
2. உன் தரத்தைப் போல அவனையும் எண்ணிக் கொண்டாயா?

வேகமயி லேறுகந்த வேள்அளித்த பாலனிவன்
ஒன்னார்[1] செயிப்பரிது உயர்ந்தஇந்திர கேசரிகேள்
இன்னானுட னேஎதிர்த்தாய் யென்னவகைக் காகவென்றார்

### இந்திரகேசரி தான் பொருத வகை கூறுதல்

"எங்குலத்து மாதை யெடுத்தான் சிறையிவனும்
பங்கமதா மென்றுஇந்தப் பார்த்தீப னோடெதிர்த்தேன்
நீர்பெரியோ ராகையினால் நின்வார்த்தை தட்டுகிலேன்
ஆர்சொன்னா லுங்கேளான் அவனை முடிதுணிப்பேன்[2]
கன்னியைஎன் பாற்கொடுத்தாற் காவலனை விட்டிடுவேன்
நன்னீதி யோடுமந்த ராச்சியமு நான்கொடுப்பேன்
அல்லவென்றால் நிர்த்தூளி யாக்குவேன் நீரறிய!
வல்லவனுக் கோதி வடிவாளை வரவழைப்பீர்
போமெ"ன்று மந்திரி புகன்ற படிதானே,
ஆமென்று சம்மதித்து அண்ணலிடங் கூறிடவுங்
"தவசிற் பெரியோயுன் நன்மொழியை(த்) தட்டுகிலேன்
அவசியமாய் ராசிக் கவனை யழையுமெ"ன்றார்
"யென்சொல் மறுக்கா னிஷ்டங்கள் செய்துவைப்பேன்
பொன்செய் மணிப்பூணாய்(ப்) பொருந்திரு"வென் றேயுரைத்து,

### முனிவர் நாகேந்திரனுக்கு உபதேசம் !

"நாகேந்திரா கேளின் னரனோடும் வாஞ்சைகொண்டு
மோகமதை யேவிடுத்து மொய்குழலா ளைக்கொடுத்து
வாழ்ந்திரெ"ன்று சொல்லிவிட்டு, வந்தமுனி யும்போக,

### பகைவர் நண்பராயினர் !

ஆழ்ந்த கருத்துடையோன் என்றே சம்மதித்து
பைந்தொடியைத் தானழைத்துப் பார்த்திபன் கைக்கொடுத்து
சந்தடியைத் தான்விலக்கிச் சாற்றுவா னோர்வசனம்

1. ஒன்னார் - பகைவர்.
2. துணிப்பேன் - அறுப்பேன்.
"கவளங்கொள் யானையின் கைதுணிக்கப்பட்டு" (களவழி.)

"இன்றுமுதல் நாமள்[1] இருபேரும் ஓர்பிறப்பு
யென்றுநினை சரதமெ[2]"ன் றிசைத்தா னாகேந்திரன்!

### இந்திரகேசரி சவுரியைப் பெறுதல்

வேணநிதி[3] யுங்கொடுத்து, "வேந்தேபோ" வென்றுரைக்க,
ஆணவமாய்க் கைப்பிடித்து அங்கோ ரிடத்தமர்ந்து,
"தாயேஎன் மன்னருந்தான் தன்னிடத்தில் வந்தாரே
வாயே துணியுதில்லை வார்த்தைவதிற் கூறுகென்ன,

### சவுரி வரலாறு கேட்டல்

யுன்வர லாறுதன்னை யுள்ளபடி யாயுரைத்தால்,
பின்னறிந்து உண்மைமொழி பேசலா மெ"ன்றவுடன்,

### இந்திரகேசரி வரலாறு கூறல்

"அன்றுகிளி யாகவந்த ஆண்டகை[4]யென் மன்னவர்காண்!
சென்றுகுத்து யென்றுசொல்லச் சென்றவன்யான் மந்திரியே!
தங்கள்தந்தை யும்பிணித்தேன் தாயுன்வர லாறுசொன்னார்;
யெங்கள்அர சும்யானும் இங்குவந்தோம்; நாகேந்திரன்
தன்சேனை யும்அழித்தேன் தாக்கினேன் நானவனை
முன்கால முந்தேர்ந்த மூதறிவோர் அங்குவந்து
சமாதானம் செய்யவும்உம் மைத்தந்தான் சகாயமதாய்
எமதான சங்கதி யீதெ"ன்றான் மந்திரியும்!

### மந்திரிக்குச் சவுரி பாராட்டு

அப்போச் சவுரிமின்னாள் ஆழ்ந்தகருத் தால்அறிந்து,
ஒப்போது கில்லா[5] துயர்ந்தமந்திரி யாகுமென்று,
"தானுரைப்பேன் மந்திரியே, தர்மணிந்திர கோமானார்
நானுரைத்த சொற்படியன் னாள்வந்த ரூபமுடன்
அடியாள் சிறையிருந்த அம்மாளி கையிருக்கக்
கொடியாளை நாகேந்திரன் கூட்டிவந்துன் கைக்கொடுத்தான்

1. நாம் என்பது கொச்சையாய் வந்தது.
2. சரதம் - சத்தியம்.
"வேத முடிவிது சரத மென்றான்" (கம்ப. இரணி. 122).
3. வேணநிதி - வேண்டிய நிதி.
4. ஆண்டகை - வீரன்.
5. 'ஒப்பு ஓதுகில்லா'-உவமையில்லாத.

### சவுரி இந்திரகோமானைக் காணாது புலம்பல்

அங்குயென்னைக் காணாமல் அண்ணல் மயங்குவரோ?
எங்குமென்னைப் போல்பெண்கள் ஈரே(ழு) உலகிலில்லை!
பாவியிலும் பாவியந்தோ! பாழாவா ளேன்பிறந்தேன்?
ஆவிதரி யாதுமந்திரி, அன்பர்தனைத் தந்திடெ''ன்றாள்!

### இந்திரகோமான், இந்திரகேசரி, சவுரி மூவரும் சந்தித்தல்!

வாரும்அம் மேயென்று வடிவாளைத் தானெடுத்துச்
சீறும்அதி வேகமுடன் சென்றுகண்டான் மன்னவரைக்
கிளியுருவத் தோடுயிந்திர கேசரியை வந்தணைத்து
மொழிகள்தடு மாறாதாய், ''மொய்ம்பு[1]வலி யுள்ளவனே,
ஒன்னைப் பிறிந்தறியே னோர்போதும் நான்தனியாய்
மின்னைக் கண்டாசை மிகுத்ததனால் மெய்மறந்தேன்!
வஞ்சகங்க ளில்லையென்றே மன்னனிந்திர கோமானுஞ்
சஞ்சலத்தைப் போக்கிமந்திரி சார்ந்தா னெனமகிழ்ந்து,
யென்னையுமே நீபிரிந்து இவ்வரச னோடெதிர்த்து
மின்னையுங்கைப் பற்றினதாய் மெல்லியர்க ளால்அறிந்தேன்
நீயென்ப தாய்மதித்தே நெஞ்சந் துணிந்திருந்தேன்
தாய்போல் அவளாகும் தையலா ளென்''றுரைத்து,
மூவர்களு மொன்றாய் மொழியாடிக் கொண்டிருக்க(த்)

### "இவளை எடுத்தேக என்னவழி?"

தேவர்களில் மேலாந் திறமைபெற்ற மன்னவனும்,
மந்திரியைப் பார்த்துஇந்த மாதையழைத் தேகவொரு
தந்திரஞ்சொல் வாயெனவுந் தானுரைப்பான் மன்னரிடம்,
''அரைநா ழிகையிருங்கள் யான்வாரே னெ''ன்றெழுந்து,
விரைவாக வாரதுவை .வேந்தனெனும் நாகேந்திரன்
கண்டு பயந்துவந்த காளை முகநோக்கி,
''விண்டிடுவா யென்ன'' விளம்பிடுவான் அம்மானே!

### பொற்றேர்வேண்டும் என இந்திரகேசரி கேட்டல்

''பூலோகம் யாங்கள்செல்லப் பொற்றேருந் தான்வேண்டும்;

1. மொய்ம்பு - வீரம் வலிமை. ''கூற்றத்தன்ன மாற்றரு மொய்ம்பின்'' என்ற நக்கீரர் ஆட்சி (முருகாற்றுப்படை, 81) நினையத்தகும்.

நாலா கலைதேர்ந்த நாகேந்திரா!'' வென்னலுமே,
தன்தேரைக் கொண்டுவரத் தானுரைத்தான் சாரதிக்கு.

### நாகேந்திரன் மணித்தேர் கொடுத்தல்

அன்றே நவமணிக ளாலே அலங்கரித்து
இந்திர கேசரிபால்,''இந்தாரும்'' என்றளித்தார்!

### தேரோட்டியையும் கொடுத்தான்

மந்திரியும் வாங்கி, "வழிகாட்ட மன்னவனே,
தந்திடுவாய் தேர்செலுத்தும் தக்கோனை'' வென்றவுடன்,
வந்தி டெனஅழைத்து வள்ளலிவன் கைக்கொடுத்தான்!

### இந்திரகேசரி, இந்திரகோமான், சவுரி– மூவரும்விடைபெற்றுச் செல்லல்

நான்போறேன்[1] என்னூர்க்கு நன்றாக நீயிரென்று
தேன்றுளிக்கும் மாலையினான் தேர்மீதி லேயேறி
மன்னவனைக் கண்டுஅந்த மாதினுட னேயேற்றி
இன்னவிசை யாகவந்த தென்றியம்பக் கூடாமல்

### இந்திரகேசரி, நாகேந்திரன் மகளைக் கவர்ந்துவரல்

மாதலி[2]யுங் கண்டு மயங்கும் படிவிசையாய்ச்
சாதகமாய் அஸ்வநிலைச் சாத்திர மந்திரியும்
தேர்போம் விசையினிலே திட்டென்று தான்குதித்துப்
பார்மாதைப் போலநின்ற பச்சைப் பசுங்கிளியை
நாகேந்திரன் பெற்றெடுத்த ரத்தினாங்கி நாயகியைத்
தாகமுட னேயெடுத்துத் தன்ரதத்தில் யேற்றிடவும்,

### இதன் தன்மை யாது என இந்திரகோமான் கேட்டல்

"மந்திரியே, யிங்கிருந்த வாறாக யிம்மானதைத்
தந்திரமாய்க் கொண்டுவந்த தன்மையினைக் கூறு''கென

### இந்திரகேசரி பதில்

"மன்னவரே, நங்குலத்து மாதையெடுத் தானதற்கு
அன்னவன்றன் புத்திரியை யானெடுத்து வந்த''தென்றான்;

1. போகிறேன்.
2. மாதவி – தேர்ப்பாகன்,

### அனைவரும் இளைப்பாறுதல்

நல்லதென்று வார்த்தைபல நன்மைகளா கப்பேசி
''வல்லவனே நல்லமட மாதுனக்கு வாய்த்த''தென்றார்;
ஆமென்ற மந்திரியும், ''அனேகதுலை[1] வந்துவிட்டோம்
தாமிருந்து மேகளைகள்[2] தாமாற்றிச் செல்வமெ''ன்ன
தாவும் பரிநிறுத்தித், தக்கமதி மந்திரியும்,
கோவும்இரங் கிக்காண குளிர்ச்சியினால் அங்கிருக்க(த்)

### முன்பு நாகேந்திரன், இப்போது தேவேந்திரன்!

தையல்இரு பேருரதந் தன்னைவிட்டுக் கீழிறங்கி
பையநடந் தொல்கி[3]யிரு பாதம் பதைபதைக்க
மன்னனோடும் மந்திரி மதிமுகத்திற் தோன்றாமல்
அன்னவனத் தோர்சார்[4] அணுகினார் அம்மாதர்
தேவலோ கத்தரசைத் தெள்ளிமையாய் ஆண்டிருக்குங்
காவல னேஅந்தக் கானகத்தில் வந்திறங்கி
அந்த[5]முள்ள கன்னியர்க ளங்கிருப்பக் கண்டவனும்
தந்தார் கடவுளென்று தானெடுத்துத் தேரில்வைத்து
தன்பதிக்குப் போய்(ச்)சேர்ந்து தாங்கா விரகமுடன்

### விரதம் மீதியிருக்கிறது எனக் கூறிப் பெண்கள் தப்பித்தல்

மன்பதைத்து நாடிடவும் மாதர்முகம் பார்த்துரைப்பார்
''தேவலோ கங்காக்கும்[6] தேவர் சிகாமணியே!
நாவலந்தீ வுள்ளநரர் நாடரிய நாயகமே!
நீரெங்க ளைவிரும்ப நெடுநாள் தவமிருந்தோம்;
தாயெங்கள் ஈசுவரியாள் தன்விரத மொன்றுண்டு;
முக்கால் தரமாய் முடிந்ததுகால் வாசியின்னம்
இக்காலத் திங்கிருந்து யேழுநா ளும்புரிந்தால்,
அந்த விரதத்து அனுஷ்டானம் நீங்கிவிடும்,
சந்தேக மில்லாமற் சார்ந்திருப்போ மெ''ன்னவென்றார்!

---

1. அனேக துலை - வெகுதூரம்.
2. களைகள் - களைப்பு.
3. ஒல்கி - தளர்ந்து. ''ஒல்கலுள்ளமொடு'' (புறநா. 135.8).
4. சார் - பக்கம்.
5. அந்தம் - அழகு.
6. கார்க்கும் எனப்பாடம்.

### பெண்டிரைக் காவல் வைத்தல்

ஆமென்று சொல்லி யடுத்த அரிமனையில்[1]
போமென்று யுள்விடுத்துப் பூட்டினான் பொற்கதவை!
அங்குசென்ற கன்னியர்கள் அம்மார்க்க மாய்இருக்க,

### இந்திரகோமானும் இந்திரகேசரியும் மங்கையரைத் தேடுதல்

இங்குஇந்திர கோமானும் இளையஇந்திர கேசரியும்,
தனித்தேகுங் கன்னியர்கள் வரவுங் காணமென்று[2]
யினிப்பார் போமென்று யெழுந்தார் இருபேரும்;
அந்தவனம் முற்றும் அணுவணுவாய்த் தான்தேடிப்
பைந்தொடியைக் காணாதாற்[3] பார்மன்னன் வீழ்ந்திடவும்,

### இந்திரகேசரி, இந்திரன் கொண்டுசென்று சிறைவைத்துளான் எனக் கூறுதல்

மந்திரியிந்திர கேசரிதான் மன்னர்முகம் பார்த்துரைப்பான்,
"தந்திரமாய்(த்) தான்கொணர்ந்த தன்மைபோ லாகயிந்திரன்
தூக்கிரதத் தேற்றியொன்றும் தோன்றாமல் கொண்டுசென்று
நோக்கினான் அம்மாதர் நோன்புஏழு நாள்விரதம்
போக்கினா லெம்மைப் பொருந்தலா மென்றதுவும்
ஆக்கினை செய்தாற்போ லவரைச்சிறை யில்வைத்தார்!

### "ஏழுநாளைக்குள் மீட்காவிடில் அவர்கள் இறப்பர்"

ஏழுநாட் குள்ளாய்ப்போ யிங்கழைத்து வாராட்டால்[4]
மாளுவார் நிச்சயங்காண், மன்னவரே!" யென்னலுமே,

### இந்திரகோமான் வழிகேட்டல்

"தேவரசைக் கூடச் செயிப்போம் வழிதெரிந்து
போவதற்கு மார்க்கம் புகலுவாய்மந் திரி"யென்றே
இப்படியாய்ப் பேசி யிருவர் மதிமயங்க,

### நாரதர்வருகை

மைப்படிந்த காவனத்தில்[5] மாதவத்தி லேசிறந்த

1. அரிமனை - பொன்வீடு.
2. காணோமென்று.
3. காணாததால்.
4. வாராவிடில். கொச்சையாய் வந்தது.
5. மைப்படிந்த காவனத்தில் - இருள்படிந்த காட்டில். மை - இருள். "மைபடு மருங்குல்" (புறநா. 50).

*நாரதரும் வார்த்தைசொல்ல நாடிவரும் போதிவரை*
*"ஆரெந்த வூர்பேர் அறியவுரை யுங்களெ"ன்றார்;*

**இந்திரன், கன்னியரைக் காவலில் வைத்தமையை நாரதர் கூறுதல்**

*சிந்தைமகிழ்ந் தேநடந்த செய்கைதவ றாதுரைக்க*
*"நாமும்அறிந் தோம்தேவ ராசனிரு கன்னிகையைக்*
*காமவெறி யால்எடுத்துக் காவலிலே வைத்துவிட்டான்!*
*யிதனை யெவர்க்குரைப்ப தென்றே வரும்வழியிற்*
*சுதனே யுமைக்கண்டோஞ், சொல்லிவிட்டோம்;*
*நாம்போறோம்;"*

**"நாரதரே, வழி யாது?"**

*யென்ன முனிவ ரியம்பயிந்திர கேசரியும்*
*மன்னவனு மாகஅந்த மாமுனிவர் தாள்வணங்கி,*
*"எங்கள் மனைவியரை யிந்திரன்எடுத் தேபோனால்,*
*தங்கள்அரு ளாலடைய அதற்குவழி கூறுமெ"ன்றார்;*

**அங்கு செல்வது இயலாது எனக் கூறி நாரதர் போதல்**

*"பூவுலகத் துள்ளவர்கள் பொன்னுலகஞ் செல்லவென்றால்*
*மேவுதலு மேயரிது! மெல்லியருஞ் சிக்குவரோ?*
*போம்போ மெ"னவுரைத்துப் போகும்முனி யையடுத்து,*

**இருவரும் நாரதரைத் துதித்தல்**

*மீம்போ யடியர்கள், "மேல்வேதக் களஞ்சியமே!*
*வீணைதனில் வல்லவரே! வேலற்கு முன்னொருநாள்*
*தோணமட வீய்ந்துவள்ளித் தோகையரைக் கூட்டுதெய்வம்;*[1]
*யும்மையன்றி மண்ணும்விண்ணும் ஓர்காரியம் நடவாது!*
*எம்மையும்விண் சேருவண்ண மேற்றுவிப்ப துன்பாரந்,*
*தவத்திற் சிறந்தருளுந் தக்கோ"னென் றேதுதிக்கச்,*

**நாரதர் ஒரு மந்திரம் சொல்லித் தருதல்**

*சிவத்தியானஞ் செய்துமந்திரம் செப்பினார் மைந்தருக்கு*
*"இந்தமந்திரம் உச்சரித்தால் எந்தவுல குஞ்செலலாம்!*

---

1. வள்ளியைப் பற்றி முருகனிடம் கூறி, மணக்கச் காரணமாக இருந்தவர் நாரதரே (கந்தபு. தக்ஷ. வள். திரு) (கி.பி. 11).

விந்தையிது, மாக்ஷிமையை[1] விள்ள[2]ரிது மைந்தர்களே!

**"தேவலோகஞ்சென்று கன்னியரைக் கேளுங்கள்"**

அங்குசென்று தேவர்க் கரசன் தலைவணங்கி,
இங்குயெந்தன் கன்னியரை யிட்டுவர நீதியுண்டா?
பூவுலகத் தார்க்குப் பொருந்திடும்நற் றந்தையல்லோ?
மேவுதரு[3] நீழலுரை[4] மேலோ யெ''னவுரைத்தால்
தந்திடுவார் மின்னாரைத் தானடைவீ ரென்றுரைத்துப்
புந்திமகிழ் வாகமுனி போனார்கா ணம்மானே!

**இந்திரகோமானும் இந்திரகேசரியும்**
**வானமார்க்கத்திற் செல்லுதல்**

இந்திர கோமானும் இணைபிரியா மந்திரியும்
சிந்துநதி யிற்படிந்து சிவதபங்க ளும்முடித்து,
மந்திர சடாச்சரனை, மாமயிலே றுங்குகனை
வந்தனமே செய்து, வணங்கி யுளத்திருத்தித்,
''தேவலோ கம்போறோந் தேவர்கோ மானீரே
காவலாக வாருமெ''ன்று கைதொழுது மந்திரித்து,
கெவுன[5] மார்க்கத்திற் கிறுகிறெனக் கொண்டுசெல்ல,
மவுனமாய்ப் போமிருவர் மண்டலத்தின் தன்மைகளை(க்)
கண்டுகண்டு உள்மகிழ்ந்து காதலியை நீங்கினனால்
விண்டுஒன் றுஞ் சொல்லாமல் விண்ணுலகஞ் சென்றனரே!

**விண்ணுலகோ பொன்னுலகோ!**

''பொன்னுலகம் போலவென்று பூவுலகோர் சொல்லுவரே
மின்னுமொளி வைப்போல்யாம் மேதினியிற் கண்டதில்லை!
முன்செய்த தவப்பலனோ? மூதாக்கள் செய்தவமோ?
மண்செய்த யாகமதில் வந்து[6]செனி மாட்சிமையோ?
அல்லஅல்லக் குன்றைமலை ஆறுமுக னார்செயலே!
நல்லதிந்தச் சென்மமந்திரி நாமெடுத்த தெ''ன்றுரைத்து,

---

1. மாட்சிமையை.
2. விள்ளுதல் - கூறுதல்.
3. தரு - கற்பகத்தரு.
4. நீழல் - நிழல். 'நீளம்' என ஓலையிற் காணப்படுகிறது.
5. கெவுனமார்க்கம் - கவனமார்க்கம்.
''கவன சித்தர் வந்து வந்து'' (குற். குறவஞ்சி. 52 - 2) எனும் திரிகூடராசப்பர் (கி. பி. 18) அடி காணலாம்.
6. வந்து செனி - வந்து பிறந்த.

### இந்திரகோமானும் இந்திரகேசரியும் இந்திரனைக் கண்டு வணங்குதல்

யாவருக்கும் தோற்றாமல் அந்த உலகமுற்றுந்
தேவ உருவெடுத்துச் சென்றுதெளி வாயறிய,
பட்டணத்தி லேவசிப்போர் பார்த்திபன் செங்கையினை
யிட்டமுடன்[1] பேச இருவர் இடம்தெரிந்து,
வச்சிரா யுதம்பிடித்த வள்ளல்[2] திருக்கொலுமுன்
உச்சியின்மேல் கைகூப்பி, 'யுன்னடியே தஞ்சமெ'ன்ன.

### இந்திரன், அவர்களெ யாரென வினவுதல்

யிந்திரனுங் கண்டுயிவ ராவரென் றய்யமுற்று,
"சந்திரனொளி வாயிருக்குஞ் சவுரியர்கள்[3] யாவரெ"ன்ன

### இந்திரனைப் புகழ்ந்து விளித்தல்

அண்ணலுங்கண் ணாயிரத்தால் அவரமுடைகப் பார்த்திருக்கக்
கண்ணகன்ற பொன்னுலகை(க்) காவல்புரி யும்வேந்தே!
யுனக்குஅரி தாவதென்ன? யுன்னிடத்திற் பஞ்சதரு,
நினைக்கும் பொருளையெல்லாம் நின்கையிலே தந்திடுமே!
யெத்தனை கோடிமனு[4] யிங்குவந்து கூடிடினும்,
அத்தனைக்கு மோரிமைப்பி லன்னமிடுங் காமதேனும்
நின்வசம தாயிருக்க நேர்மையுள்ள இந்திராணி
மின்வடி வாய்த்துலங்க மேலான யிந்திரரே,
தேவஅமு தம்பொசித்துத்[5] தெய்வீக மாய்விளங்கும்
காவ[6]கத்தே வீற்றிருக்குங் கர்த்தனேயாங் கள்வந்த
சேதி யுமக்குத் திறம்பாமற் செப்பிடுவோம்!

### துயரங்களைச் சொன்னதும்...

ஆதிமுத லீறாக யாதொன்றுந் தப்பாமல்
சோதிவச்சிரக் கையன்முன்னே சொல்லத் துயரமெல்லாம்,

---

1. இட்டமுடன் - விருப்பமுடன்.
2. வச்சிராயுதம் பிடித்த வள்ளல் - இந்திரன்.
3. வீரர்கள்.
4. கோடி மனிதர்.
5. புசித்து.
6. கா - காவலுள்ள இடம்.

### ...பைங்தொடிக்கு விடுதலை

நீதிபர[1] னாகையினால் நேர்மையிது வென்றறிந்து,
ஆயிரங்கண் ணுள்ளயிந்திரன் ஆச்சரிய மாய்க்கேட்டு
வாயிரங்கிப் பேசுகின்ற வாஞ்சையுஞ் சற்குணமுங்
கண்டுயிவர் நம்மருகர் கருணா கடாட்சமுள்ளோர்
கொண்டுவந்த மாதர்களைக் கூட்டி யனுப்பவென்றே
பக்கநின்ற தூதர்முகம் பார்த்"தழைத்து வந்திடெ"ன்ன
அக்கணமே கூட்டிவந்து அரசன்சமு கம்விட்டார்!

### நாங்கள் பொய்யுரைத்தோம்!

இந்திரனும் பைந்தொடியீ ரிவரா ரெனக்கேட்பச்,
சந்திர முகமுடையார் சாற்றுவார் மன்னவர்முன்,
"யெங்க ளிருவர்க் கியைந்த தலைவரிவர்;
தங்களையும் நீங்கித் தனித்துநிற்கும் வேளையிலே
மன்னவரே நீரெடுத்து வந்தீர் மதிமயங்கி;
யின்னம் விரதம் யிருக்குதென்று பொய்யுரைத்தோம்!
இவர்கள் வருவாரென் றிசைத்ததே[2] யல்லாமல்
தவறெனவுங் கொள்ளாதீர் தாயுநீர்! தந்தையுநீர்!"

### இந்திரன் பெண்களுக்குச் சீதனம் கொடுத்தல்

யென்று வணங்கிநின்ற யேந்திழையா ரைப்பார்த்து,
"யொன்றுக்கும் அஞ்சாதீ ருங்கள் மனப்படியே
இவ்விருவ ரோடேகி யிஷ்டப் படிதானே
செவ்விதமாய் வாழ்ந்திரெ"ன்று சீதனங்க ளும்கொடுத்து,

### வீரரை யாரே வெல்வர்!

இங்குவந்த தால்வல்லவ ரென்ப தறிந்துகொண்டோம்;
யொங்குமர சாண்டிடுவார் எந்தவுல கும்வணங்கும்;
இவரோ டமர்[3]செய்வார் யீரே முலகிலில்லைச்

1. நீதிபரன் - நீதிமான்.
2. இசைத்ததே - கூறியதே.
3. அமர் - போர். "அமர்இடை உறுதர" (நற். 48-8).

### அனைவரும் இந்திரனிடம் விடைபெற்றுப் பூலோகம் திரும்புதல்

சிவமன்றன் கண்ணிற் செனித்தசெவ்வே ளருளுடையோர்
ஆமென் றுரதமொன்றை யவ்விருவர்க் குங்கொடுத்து
போமெனத்தே வேந்துசொல்லைப் பொன்முடிமே லேசூட்டி
இவர்கள் ரதத்தேறி யிங்குவரு முன்னாகக்

### பூலோகத்தில் தேர்ப்பாகன் தேடுதல்

கவனப் பரி[1]யிரதங் காவணத்தே[2] வைத்திருந்த
தேர்ப்பாகன் மன்னர்களைத் தேடியே காணாமல்,
பார்ப்பானா மேகினக்காற் "பாலர்வந்தாற் கொல்லுவரே!"
யென்ன மயங்கி யிருக்குந் தறுவாயில்,

### வானவரோ? தானவரோ? எனத் தேர்ப்பாகன் அதிசயித்தல்

மன்னவனும் மந்திரியும் மாதினுட னாகவுமே
விண்ணிவிருந் தேயிரங்கும் வேகமுள்ள பொன்ரதத்தைப்
தண்ணளியாற்[3] கண்டு"யிவர் தானவரோ? வானவரோ?
ஆரோ அறிவ"மென்று அண்ணாந்து பார்ப்பளவில்,

### எங்கே சென்றீர்கள்?

பாரோர்க ளும்புகழும் பார்த்தீப ரங்குவர,
மன்னனுடன் மந்திரியும் மங்கையரை யும்பார்த்து,
"இன்னவிடஞ் சென்றீர்க ளென்றறியக் கூடலையே?
வெகுதூரம் போய்த்தேடி வேந்தே உமக்கஞ்சி
மிகுநேரங் காந்திருந்தேன் மேலோ யெ"னப்பணிய,

### அனைவரையும் தேரிலேற்றித் தேரைச் செலுத்துதல்

நல்லதென்று மந்திரியும் நாகேந்தி ரன்மகளும்
வல்லமைசே ரும்தேரில் வந்திரு வருமேறத்
தூண்டினா ரேரதங்கள் தொல்லுக மும்அசையத்
தாண்டினார் காடுமலை தையல்நக ரங்குகண்டார்

---

1. கவனப்பரி - வேகமுள்ள குதிரை.
2. காவணத்தில் - சோலையில்.
3. தண்ணளியால் - அன்புடன்.

### இந்திரகோமான் குச்சரன் நாட்டைச் சவுரிக்குக் காட்டுதல்

''ஆசைக் கிசைந்தகண்ணே! யன்பாஞ் சவுரிமின்னே!
ஓசைமிகு சவ்வீர முந்தன்நக ரங்கண்டாய்!
யுன்தந்தை குச்சரனை, உண்மையுள்ள என்மந்திரி
பின்பந் தன[1]மாய்ப் பிடித்தவிட மிதுகண்டாய்![2]
நானும்என் சேனையுடன் னாயகியுன் னாசையினால்
தானுங்கா மன்கணையால் தான்மயங்கி வீழ்ந்தவிடம்
பாராய் பசுங்கிளியே பாவையே! பைந்தொடியே!
தீராத என்னாசை தீர்க்கவந்த தெள்ளமுர்தே!''
யென்னக் கனிவோ டிசைத்துஅங்கு தானிறங்கி,

### குச்சரனுக்கு வரவைச் சொல்லுதல்

மன்னனெனுங் குச்சரற்கு மங்கைவர வோதுதற்கே
அங்குவந்த மாட்டிடையன் அவன்முகத்தை யேபார்த்து,
''இங்குவந்தார் நாகேந்திர னிட்டுபோம் மங்கையென்று
உங்களுடைய வேந்தர்க்கு உரைத்திடுவாய்'' என்னலுமே,

### மாட்டிடையன் ஊர்பேர் வினாதல்

திங்கட் குடைக்கவித்த தேர்வேந்தற் கோ[3]திடிலே,
கூடவந்தார் யாவரென்று குறிப்பாகக் கேட்பாரே!
''ஆடவரே, யூர்பேர் அதனையுரை யுங்களெ''ன்றான்

### இந்திரகேசரி தாம் இன்னார் எனக் கூறுதல்

''முன்னவந்து உங்கமன்னை[4] மொய்ம்பிறுகக் கட்டினவர்
மன்னனிந்திர கோமானும் மந்திரியும் மங்கையரும்
சிங்காரப் பூங்காவிற் சேரவிருக் கின்றதுவாய்
மங்காத கீர்த்திபெற்ற மன்னருக்குக் கூறு''கென்ன,

---

1. பந்தனம் - கட்டல்.

2. இராமன் சீதைக்குக் காட்டிவருவது போலவே, இங்கும் இந்திரகோமான் சவுரிக்குப் பல இடங்களையும் காட்டுகிறான்.

3. 'திங்கட் குடைக்கவித்த தேர்வேந்தன்'—குச்சரன்.

4. குச்சரனை. மொய்ம்பிறுக - தோள் இறுக.

### இடையன் குச்சரனுக்குச் செய்தி கூறவும்...

ஓட்ட நடையாக ஓடியே மாட்டிடையன்
தேட்ட[1] முடனிருந்த தேர்வேந்தற் கோதிடவும்

### ...குச்சரன் மந்திரியை அனுப்பி அழைத்துவரச் செய்தல்

மந்திரி குச்சரனை மன்னவனுந் தானோக்கி
அந்தமுள்ள சேனைபடை யத்தனையு மேகூட்டிச்
சிங்காரத் தோப்பதனிற் செல்வி[2]வந்து சேர்ந்தனளாம்!
மங்காத சீர்த்திபெற்ற மந்திரியே நீயேகிக்
கூட்டிவா வென்னலுமே கொற்றவன்றன் சொற்படிக்கித்
தாட்டிகன்[3] சென்றதரஞ் சொல்வே னம்மானே!

### மந்திரி நீலகண்டன் ஆரவாரத்துடன் செல்லல்

ஆனைபரி சேனையுடன் ஆடபாடல் வாத்தியந்
தானை[4] முழங்கிவரத் தாரை[5]சின்ன மூதிவரச்
சென்றுவனத் தேயிருந்த சேயிழையை மன்னர்களை
நின்று வணங்கிவந்த நீலகண் டன்சொல்வான்,

### நகரழகைக் காட்டியபடியே அழைத்துவரல்

"இந்திர கோவே,யென் யேந்தலழைத் தாரெனவே
மந்திரியும் மன்னவரும் மங்கையர்க ளோடெழுந்து
பட்டணச்சிங் காரமதைப் பாவையர்க்குக் காட்டிமன்னன்
"வட்ட வுலகிலிந்த வன்மையைப்போற் கண்டதுண்டோ?
வண்டார்ந்த கூந்தல்பெற்ற வல்லியே[6] பாருமெ"ன்று
கொண்டாட்ட மாகவரக் கோடிபெண்கள் கூடிவந்து,
முத்தாற் பவளத்தால் முழுவயிரத் தால்நிறைத்தே
வைத்தார் ஆலாத்தி வரிசைகளை யென்னசொல்வேன்!

---

1. தேட்டம் - விருப்பம்.
2. சவுரி.
3. தாட்டிகன் - பலம் பொருந்தியவன். 'தாட்டீகன்' எனப்பாடம்.
4. தானை - படை.
5. தாரை - நீண்ட ஊதுகுழல்.
6. வல்லியே - கொடியே.

குச்சரன் மகளை வரவேற்றல்

கண்டு உளம்மகிழ்ந்து காவலன் வாழ்மனையிற்
கொண்டுசெல்லும் போதுஎதிர் கொண்டுகண்டான் குச்சரனே

குச்சரன் புலம்பல்

தந்தைதனைக் கண்டுவந்த தையல்புள காங்கிதமாய்
வந்தடியி னிற்பணிய வாரியெடுத் தே''யிறைவன்
அரியதவங் கள்செய்து யானீன்ற அன்னமதைப்
பிரிய விதித்தானோ பிஞ்ஞகனார்[1] தன்செயலோ?
இவரால் கிடைக்குமென்று யீசர்முன் சொன்னதுபோல்,
தவறாமல் ஆச்சுதுயென் தன்மையினா லேதாகும்?

சவுரிக்கும் இந்திரகோமானுக்கும்
உடனே மணமுடிக்க நிச்சயித்தல்

கண்ணே யுனைக்கொணர்ந்த காவலவற் கேயளித்தேன்;
இன்னே மணம்புரிவேன் யென்றவத்தால் வந்தமின்னே!''
யென்று பலமொழிகள் இன்புமுட னேபேசித்
துன்றுமன்னை பாற்செலவுந் தோகையரைத் தானனுப்பி
மன்னருக்கும் மந்திரிக்கும் மாளிகை அலங்கரித்து
அன்னவரை அங்கனுப்பி, ''அன்புடைய மந்திரியே;
பட்டணத்தைச் சிங்காரம் பண்ணச்சொல்! பைங்கிளிக்கித்
திட்டமுடன் கல்யாணஞ் செய்யவென்றே தேர்ச்சியுற்றேன்;

முகூர்த்தம்குறித்து, அழைப்பு
அனுப்பச் செய்தல்

தேசதே சத்தரசர் தேர்வேந்தர் தங்களுக்கும்
வாச மணவோலை வரைந்தனுப்பு மந்திரியே!
இன்றைக் கேழாநா ளின்னகரத் தேசிறப்பாய்
மன்றல்[2] நடக்குதெந்தன் மாதினுக்கென் றேயெழுதுஞ்
சோதிடரைத் தானழைத்துச் சுபசோ பனமுகூர்த்தம்
மாதிடமாய்ப் பார்க்க மதிப்பாகக் கூறு''கென்ன,

---

1. பிஞ்ஞகன் - கடவுள், சிவன்.
''பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள்'' (திருவாசகம் 1.7)

2. மன்றல் - திருமணம்.

### மன்னன் கூறியதை மந்திரி நிறைவேற்றல்

ஏவற் படியாக யிச்சணமே செய்திடுவேன்
காவல னே!என்று கால்பணிந்து மந்திரியும்
யேவலர்க ளையழைத்து, ''யிந்தமண வோலைதன்னைக்
காவலர்க்கெல் லாங்காட்டிக் கடுகவே[1] வாரு''மென்றான்!
தண்டோராப் போடுவித்துத் தமது கிரகமெல்லாம்[2]
வெண்டா மரைவசிப்பாள் வீற்றிருக்கச் செய்யுமென்றான்;
சோதிடரைக் கூட்டிவந்து, ''சொல்லுமு கூர்த்த''மென்ன,
''மாதினுக்கின் றேழாநாள் மணம்புரிய நல்லதெ''ன்றார்;
ஓவியரைத் தான்அழைத்து, ''உங்கள்மன தின்படியாய்
மேவிமண மண்டபத்தை மேன்மைபெறச் செய்க''வென,
அப்படியே செய்து அறிக்கையிட்டான்[3] மந்திரிக்கிக்
கைப்பிடித்த ஓலைகொண்டார் கடுகவே வந்துகண்டு
அன்பத்தார் தேசம் அடங்கலுமே தாம்சென்று
இன்பமண வோலைதனை யீய்ந்தனமென் றேபணிந்தார்
மன்னன் சமுக மதில்வந்து மந்திரியும்
நன்னயமாம் வார்த்தை நவிலலுற்றா னம்மானே!

### இந்திரகோமானுக்கு மணக்கோலஞ் சூட்டச் செய்தல்

''யென்னால் நடத்துபணி யெல்லாம் முடிந்ததினி
இன்னாட் கலியாணம் இசைந்து நடத்துதற்கே
நல்லதென்று சோதிடர்கள் நாளிட்டு மேகொடுத்தார்
வில்லவரே யின்று விரைவில் நடத்த''வென்ன
''மந்திரிகேள், அங்கிருந்த மன்னரிந்திர கோவினுக்கு
விந்தை மணக்கோலம் விரைந்தே நடத்துமெ''ன்று;
பைந்தொடியா ரைப்பார்த்துப், ''பாவையிளங் கன்னிகைக்குச்
சுந்தரஞ் செய்து சுருக்கி லழைத்திடென்றார்!

1. கடுகவே - விரைந்தே.
''கால்விசை கடுகக் கடல்கலக் குறுதலின்'' (மணிமேகலை. 14.80)
2. கிரகமெல்லாம் - வீடுகளிலெல்லாம்.
3. அறிக்கையிட்டான் - தெரிவித்தான்.

### இந்திரகோமானும், இந்திரகேசரியும் தாலிகட்டுதல்

அவரவர்க்கு இட்டபணி யன்னேர மேமுடித்து
விபரமுடன் கூட்டிவந்து விட்டார் மணவறையில்;
நவரத்தி னம்இழைத்த நல்லாச னங்களிலுஞ்
தவறாம லேஇருத்தித் தானம் பலவியற்றி
முப்பத்தி ரண்டுவகை மேளதா ளம்முழங்க,
வீரபத்தி யிற்சிறந்தோர் விந்தைவிந்தை[1] யாய்ப்பாடப்
பூரணகும் பம்வைத்துப் புண்ணியா சனமியற்றித்
தோரணங்க ளும்அமைத்துத் தோன்றாகு திகொடுத்துச்
சத்திரியாள்[2] செய்யுஞ் சடங்கொன்றுந் தப்பாமல்
வெத்திபெறச்[3] செய்துஇரு வேற்கண்ணார் தங்களுக்கு
மங்கிலியஞ்[4] சூட்டுமென்று மன்னருக்கு மந்திரிக்கும்
தங்கமத னாலமைத்த தாலிதனைக் கைக்கொடுத்து,
''நல்லவேளை தப்புமுன்னே நாண்பூட்டு'' என்றுரைக்க
வில்வீரர் கள்வாங்கி மெல்லியற்குச் சூட்டினரே!

### அறுசுவை விருந்தும் அன்பளிப்பும்

மணங்கான வந்திருந்த மன்ன ரனைவருக்கும்
இணங்க வரிசை[5]பல வீய்ந்து யறுசுவையோ
டாக வமுது மளித்தவர் தம்பதிக்கி
யேக விடைகொடுத்து யின்புற் றிருப்பளவில்,

### மன்னவனும் மந்திரியும் இன்புற்றிருந்து...

மன்னவனும் மந்திரியு மாதிருவ ரோடெழுந்து
மின்ன அலங்கரித்த மெல்லிய பஞ்சணையிற்
கூடிச் சிலகாலங் கொற்றவரும் அங்கிருந்து,

1. விந்தை - அழகு. (நாமதீப நிகண்டு. பாடல். 791) (கி.பி. 18).
2. சத்திரியர்கள்.
3. வெற்றிபெற.
4. மாங்கல்யம்.
5. வரிசை-பரிசு. ''அரிசியோ நானிடுவே னாத்தா டனக்கு, வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல்—'' (பட்டினத்தார் பாடல்).

### ...வஞ்சியை விடைபெற்று வரச் சொல்லுதல்

வாடிக்கை யானயிள வஞ்சிக் கொடியேகேள்,
"என்னுடைய தந்தைக் கிசைத்தகெடு[1]க் கிட்டினது
ஒன்னுடை தந்தையிட மோதுலூர் போவதற்கு
விடைவாங்கி வாருமெ"ன்று வேந்தன் உரைத்திடவுந்,

### தந்தையிடம் சவுரி விடைபெறல்

தடையேது மன்னவரே தான்செலலா மென்றெழுந்து,
அன்னைதந்தை பாற்போ யறிக்கையது செய்திடுவாள்:
"யென்னைச் சிறைவிடுத்த யென்னாய கர்தாமுந்,
தங்கள்பதி செல்லவிடை தான்வாங்கி வாருமென்றார்;
உங்கள் கருத்தினை ஓதுமெ"ன்று தாள்பணிந்தாள்;

### வல்லவர்கள் கதையென்ன, மகளே?

"நல்லதுயென் கண்மணியே, நானீன்ற ரத்தினமே!
வல்லவர்கள் அங்குவந்த வாறுதன்னைக் கூறுகெ"ன்ன,

### சவுரி தந்தைக்கு நடந்தவைகளைக் கூறல்: நாகேந்திரனையழித்து அவன் மகளைக் கொண்டனர்

தந்தையே கேளுமென்னத் தானுரைப்பாள் சவுரியவள்,
"விந்தையைநா னென்னசொல்வேன்? வேலனையா ரங்குவந்து,
நாகேந்திரன் பட்டணத்தை நாசப் படவழித்து,
வாகா[2] யெனையெடுத்து வரும்போது, நாகேந்திரன்
பெற்றயிளங் கன்னிதனைப் பிரிய முடனெடுத்து
மற்றவர்(க்)குந் தோற்றாமல்[3] வந்தாரிம் மந்திரியும்

### இடையில் இந்திரன் எங்களைத் தூக்கிச் சென்றான்

மார்க்கமதில் காவனத்தில் மகிழ்வாயு மேயிரங்கித்
தீர்க்கமுள்ள[4] நாகேந்திரன் செல்வியுநா னும்தனித்தோம்;

---

1. கெடு - தவணை.
2. வாகாய் - சாமர்த்தியமாய். "வாகுபெறு தேர்வலனை" (கந்தபு. மூன்றாம். யுத் 70)
3. தோற்றாமல் - தெரியாமல்.
4. தீர்க்கம் - தெளிவு.

தேவலோகத் தரசன் தேட்டமுடன்[1] அங்குவந்து,
காவலரை யும்பிரித்துக் கன்னியெங்க ளையெடுத்து
அங்கோர் அறையி லடைத்துஎம்மைத் தாள்பூட்ட,

### மன்னனும் மந்திரியும் மீட்டனர்!

மங்காத கீர்த்தியுள்ள மன்னவரும் மந்திரியும்
யெவ்விதமோ அங்குவந்து இந்திரனுட னேபேசச்
செவ்வியோன் எங்களையுஞ் சீக்கிரத்தி லேயழைத்து,
இவரா ரெனக்கேட்டார்; "எங்கள்கண வர்"என்றோம்;
அவரோடு செல்ல அனுப்பி யவர்களிலே
மன்னவர்க்கு வேண வரிசை மணித்தேரும்
நன்னயம தாய்க்கொடுத்து நல்லமொழி யும்உரைத்துப்
போங்கள் எனவிடுத்தார் பொன்னுலகாள் மன்னவரும்
தாங்களது போலனுப்ப தந்தையே வேண்டு"மென்றாள்!

### நீங்கள் அரசாண்டு இங்கேயே இருங்கள் எனக் குச்சரன் கூறல்

நல்லதுயென் கண்மணியே நாடுநக ருள்ளதெல்லாம்
வல்லவராம் உந்தன்மண வாளருக் கேகொடுத்தேன்
கைக்கொண்டு யென்னரசைக் காவல்புரிந் தேயிருங்கள்

### பிறவா நெறியைக் கைப்பிடிக்கக் குச்சரன் ஆசை

மெய்க்கொண்ட சத்தியுடன் மேவுஞ் சிவன்பதத்தைக்
கண்டு தொழுது பிறவாநெறி கைப்பிடித்துக்
கொண்டுசா யுச்சிய[2]வழி கூடவேண் டுங்குயிலே!

### "வந்து நாளாயிற்று! விடை தாருங்கள் அப்பா!"

யிங்கே யிருவென் றிசைத்ததந்தை யின்முகத்தைப்
பங்கே ருகவதனி[3] பார்த்துரைப்பா ளோர்வசனம்:

1. தேட்டமுடன் - பேரவாவுடன்.
"தேட்டந்தான் வாளெயிற்றிற் றின்னவோ" (கம்பர். சூர்ப். 121)
2. சாயுச்சியம் - இறைவனோடு கலத்தல்.
3. பங்கேருக வதனி - தாமரைப்பூ உடலாள்.

"வந்துநெடு நாளாச்சாம் மன்ன ரிருவர்களுஞ்
சந்துஷ்ட்டி யாய்ப்போய்(ப்) பின்தான்வந் தரசாள்வார்
தடையொன்றும் சொல்லாமல் தான்அனுப்புந்
தந்தை"யென்றாள்

### குச்சரன்விடைதந்து தேர் முதலியவற்றைக் கொண்டுவரச் செய்தல்

அடையலரை[1] வெல்வீரன் அப்படியே யாகுதென்று
மந்திரியைப் பார்த்துஇரு மன்னர்களும் மங்கையரும்
புந்திமகிழ்ந் தேயேகப் பொருந்திய சாக்கிருதி
செய்யென்ன அப்பொழுதே செம்பொன் சிவிகைகொண்டு
தையற்கு மேயமைத்துத் தாதிகளு மாயிரவர்
காலாளுஞ் சேவகருங் கைகாட்டும் உள்ளியரும்[2]
மேலான வாத்திய முடன்மிக்க சிறப்புடனே
திட்டப் படுத்தியிரு தேரை யலங்கரித்துக்
கட்டழகர் முன்கொணர்ந்து காலிற் பணிந்துநின்றான்!

### இந்திரகோமான், இந்திர கேசரி, சவுரி முதலியோர் விடை பெற்றுத் தேரிற் செல்லுதல்

இந்திர கோமானும் இணைபிரியா மந்திரியும்
"மந்திரியே நீலகண்டா, மன்னவனார் குச்சரற்கு
யெங்களுட பட்டணம்போ யிருந்துசில நாட்கழித்து
உங்கள் அரசை உடனாக ஆள்வமென்று
சொல்லிடுவா யெ"ன்றெழுந்து சூரா ளிருபேரும்
மெல்லியரும் மற்றுமுள்ள மித்திரர்க ளுஞ்சூழ
பல்லியமும்[3] ஆர்ப்பரிக்கப் பாரும் நடுநடுங்க
யேறினார் தேரில் எடுத்தார் நெடுங்குடைகள்!

### அவர்கள் சவ்வீரத்தெல்லையைத் தாண்டிச் செல்லுதல்

மீறியே வாரிபொங்கி மேதினியில் வந்ததொப்பாய்
சவ்வீரத் தெல்லையினைத் தாண்டிச சவுரியர்கள்
எவ்வீர ரும்வந்து இணையடியி லேபணிய,

1. அடையலரை - பகைவரை.
2. உள்ளியர் - அறிவுடையோர்.
3. பல்லியம் - ஒருவகை வாத்தியம்,

முன்வென்ற அரசன்வந் தானென்று முறையாகப்
பின்சென்று கண்டு பெருந்தனத் தோடும்வர
மன்செங்கோல் நீதிமுறை மாறாத சத்தியவான்
என்கந்த வேளை யிருதயத்தி லேநினைத்தே
வாழும்எந் தைகுச்சர மாவள்ளல் அமுர்தபுரங்
கேளும்பெண் நாயகமே[1] கிஞ்சுகமே றென்றரசன்
மங்கையர்க்குக் காட்டியெந்தன் மந்திரியே, நீகேளாய்!

**சுசீலவள்ளலுக்குச் செய்திசொல்லத்**
**தூதனை அனுப்புதல்**

"இங்குநாம் வந்தசெய்தி யேந்தலுக்குத் தானுரைக்கத்
தூதன் அனுப்பு"மென்று துரைமகனு மேபகரப்,
போதொரு வனைப்பார்த்து போய்உரைத்து வாருமென்றார்.

**தூதன் சென்று வணங்குதல்**

அச்சொற் கடவாமல்[2] அச்சணத்தி லேயோடி
முச்செகங்கள் போற்றும் முடிவேந்தி னைவணங்கிக்
கைகட்டி வாய்புதைத்துக் கர்த்தன் சமூகமதிற்
பையக் குனிந்தே பகரலுற்றான் அம்மானே!

**தூதன் சுசீலவள்ளலிடம் செய்தி கூறுதல்**

"ராசர்களை வெல்லஅந்த நாட்போன பாலகர்கள்
வாசமனை யாட்டியுடன் வந்தார்பூங் காவனத்தில்!"

**சுசீலன் மகிழ்ந்து, அழைத்துவர மந்திரிக்குச்**
**சொல்லுதல்**

என்றவுடன் மன்னன் இருதோளும் பூரிப்பச்
சென்றழைக்க மந்திரிக்குச் செப்பினா ரொப்புடனே

**ஏவலர்களுக்கு அமைச்சர் ஆணை:**
**"பட்டணத்தை அலங்கரியுங்கள்!"**

மன்மகனும்[3] மென்மகனும் வந்தா ரெனமகிழ்ந்து,
பொன்மனைக ளைப்புதுக்கிப்[4] பூவால் அலங்கரித்துப்,

1. பெண் நாயகமே – பெண் தலைவியே.
2. கடவாமல் – மீறாமல்.
3. மன்மகன் - மன்னன் மகன்.
4. புதுக்கி - புதுப்பித்து.

பட்டணத்தைச் சிங்காரம் பண்ணும் எனப்பகர்ந்து
கிட்டநின்ற ஏவலரைக் கீர்த்தியுட னேபார்த்துச்,

### "ஆண் பெண் அனைவரும் திரளுக!"

சொல்லுவான், "அம்மள்[1] துரைமகனுஞ் சுந்தரராம்
வில்லுமம்பும் கைப்பிடித்த வேந்தர் களையடக்கி[2]
வந்தனராம் பூங்கா வனத்திலிருக் கின்றனராஞ்
சந்துஷ்டி[3] யாய்ப்போய்த் தழுவிச் சவுரியரைக்[4]
கூட்டிவர நம்முடைய கொற்றவருங் கூறினதால்
ஏட்டிலடங் காமகிழ்ச்சி யெய்தினோ மேவலரே!
ஆண்பெண் அடங்கலுமே அணியும் பணி[5]யணிந்து
காண்பதற்கு அங்குவரக் கட்டாய மாய்உரைத்துத்

### "கலையறிந்தோர் வரவேண்டும்"

தேரை அலங்கரியும் தேசி களை[6]அழையும்
பாரைநிரை யக்[7]குடையும் பட்டத்து யானைகளுங்,
காலாளுஞ் சேவகருங் கடல்போன்ற வாத்தியமும்,
நாலா கலையறிந்த நாவலர்[8],நாட்டியர்கள்
யெல்லாம் வெளிப்படுத்தி யெந்தனுக்கு வந்துசெல்லும்;"
உல்லாச மாக உடன்வருவோம் என்றனரே.

### மந்திரிசொல்லிய அனைத்தையும் நிறைவேற்றல்

அந்தப் படியாக அப்பொழுதே செப்பனிட்டு
சிந்தைகளிப் பாகவந்து செப்பவே மந்திரியும்

### மந்திரி சென்று பூங்காவில் இந்திரகோமான் முதலியோரைக் காணுதல்

வானமளா வுந்தேரில் அவனுமே தானேறி
தானைபடை வாத்தியம் தாந்தா மெனமுழங்கப்

1. அம்மள் - நம்.
2. 'யடைக்கி' எனப்பாடம்.
3. சந்துஷ்டி - மகிழ்ச்சி.
4. சவுரியரை - வீரரை.
5. பணி - ஆபரணம்.
6. தேசிகளை - குதிரைகளை.
7. உலகை மூட; அவ்வளவு பெரிய குடை என்பது பொருள்
8. நாவணர் என்பது ஒலை.

பூங்கா வனத்தருகே பொங்கமுடன்[1] போய்இறங்க
பாங்காயங் கேயிருந்த பாலனிந்திர கேசரிதான்
தந்தைகழ லிற்பணியத் தானெடுத்து மார்பணைத்தான்

### விபேகன் சவுரியை யாரென வினவல்

பைந்தொடி யும்வந்து பணிந்து நிற்பளவில்
விபேகனென்ற மந்திரியும் வேந்தன்மக வைவணங்கிச்
சபையோர்க ளுங்கேட்பத் தாயா ரெனவினவ
இந்திர கோமானும், ''எந்தன்மனை யாட்டி''யென்றான்;

### சுசீலன் மகளைக்காண ஆர்வமுடன் இருப்பதை விபேகன் கூறுதல்

சந்திர வதனத்தாள் தாள்பணிந்து சாற்றலுற்றான்
''இன்னாள் வரையாக யெங்கிருந்தீ ரென்கோவே
மன்னான வுங்கதந்தை மைந்தர்தமைத் தந்திடெ''ன்றார்
விரைவாய் எழுக''வென்று விண்ணப்பஞ் செய்தளவில்,

### அனைவரும் தேரிற் செல்லுதல்

துரைமா மதலை[2]வந்த சொர்ணமணித் தேரில்வர
மாதரிரு பேருமுன்னம் வந்தசிவி கையேறக்
கோதுபடா[3] யிந்திர கேசரியுந் தேரேறத்
தந்தையுந்தான் தேரேறித் தான்கூட வும்போக,
வந்துற்ற துரைகள் வாம்பரி[4]யின் மேலேறிப்,

### அவர்கள் சென்ற அழகு வர்ணித்துச் சொல்லரிது!

பவனி விலாசமதாய்ப் பாங்காய் அணியணியாய்
அவனி[5]யிலுள் ளோர்கண்டு ஆனந்தங் கொள்ளுவதாய்ச்
சத்தகட லேழுமொன்றாய்ச் சார்ந்துவரும் பாவனைபோல்
மெத்த விருதெடுப்ப மேலாய்க் குடைகவிய
யின்னின்ன வாத்தியமென் றெண்ணமுடி யாதாக
வண்ணவண்ண ஆலாத்தி வர்ணித்துச் சொல்லரிது!

---

1 பொங்கமுடன் - மகிழ்ச்சியுடன்.
2. மதலை – பிள்ளை.
3. கோதுபடா - குறைவுபடா.
4. வான்பரி - பெருமைமிகு குதிரை. தாவுங் குதிரையுமாம்.
5. அவனி - உலகம். ''அவனி நாரணன்'' (நந்திக் கலம்பகம். 72)

### வேலவனோ மாலவனோ?

மத்தாப்பு வாணவகை மட்டும் இதங்களில்லைக்
கொத்தார் குழலியர்கள் கோமான் அழகுகண்டு,
மெத்தமெத்தக் காமனம்பு மேன்மேலுந் தைப்பதனாற்
சித்தங் கலக்கிச், சிவனார் மகவான
வேலவனோ? மாலவனோ? விண்ணுலகை யாள்பவனோ?
நூலவனோ? ஆலமுண்டார் நோக்கமத னாலெறிந்த[1]
மாரனோ? ஆதிபரன் மாமுடியி லேபுடைத்த
வீரனெனும் அர்ச்சுனனோ? விகர்ணனோ? விற்றிறமை
யாரரங்கர் கோமானோ? ஆதியளை கைக்கோனோ?[2]

### இளவலைக் கண்ட இளமங்கையர் நிலை

வாள்பீமன் றானுமோ? வாள்விழியீர் சொல்லுமென்று
தங்கள் கரத்துவளை தானே நழுவிவிழக்[3]
கொங்கைபொரு தும்ரவுக்கை கொள்ளாம லேகிழியச்
சிற்றிடையிற் கட்டுகின்ற சேலை நழுவிடவே
சுற்றுமணி மேகலையும் துண்டாகிச் சூழவிழத்
தன்னைமறந் தேகாமம் தாங்காமல்[த்] தையலர்கள்
என்னையணை என்னையணை என்றுபின்னா லேதுடர்ந்தால்,
மன்ன னழகுமந்த மந்திரியின் தன்னழகும்
யென்ன விதமாக இசைத்திடுவேன் அம்மானே!

### மங்கையரைக்கண்ட ஆடவர் நிலை!

மன்மதனை யொப்பான வாலிபர்கள் மங்கையரை,
''முன்செனகன் ஈன்றதொரு மொய்குழலோ யிம்மாதர்?
வாணியோ? இந்திராணி மாதோ? வளமிகுந்த
காணியெல்லாம் விட்டு வனங்காத்த[4] துரோபதையோ?
பொய்சொல்ல மாட்டாமல்[ப்] புத்திரனுடன் வித்தமின்னோ?[5]
மெய்யா யுலகாண்டு மேலாஞ் சனிதொடர்பாற்
கானகத்தில் நள்ளிருளிற் காதலனைக் காணாமல்
தானாய் தியங்கியன்னை தன்னிடத்தில் வந்ததையல்

1. சிவன் மன்மதனையெரிந்த புராணக் கதை இங்கு நினையத்தகும்.
2. அளகைக்கோன் - குபேரன்.
3. ''எல்வளை நெகிழச் சாஅய்'' (ஐங்குறு. 27)
4. பாஞ்சாலி பாண்டவருடன் வனவாசம் புரிந்ததை இங்கு சுட்டப் படுகிறது.
5. சந்திரமதியோ?

தானோ?[1] அகலிகையோ? தையலந்தக் கண்ணகியோ?
வானாட் டரம்பையோ? வள்ளிதெய்வா னைக்குயிலோ?
காந்தன் இணைபிரியாக் கன்னி ரதியிவட்குப்
பாந்தமென்று சொல்லப் படாதுஅதி பாதகமே![2]
தானே மதிமயங்கித் தட்டழிந்து யெட்டநின்று
மானிவரு நம்[மள்]மன்னன் மாதவத்தால் வந்தவரோ?''

**இவ்வாறு புலம்பியோர் கூட்டம்
பின்தொடர்ந்தது**

யென்றுபுலம் பிக்காம னேவுசரந் தைத்துருகிக்
குன்றுபுயம் வாடஅந்தக் கொம்பனையார் பின்தொடர,
எதிரில் வருபவரும் இவ்வண்ண மாகவர,
அதிரும் படிசிரங்கள் ஆனதகர்[3] தாக்குதலாய்
மோதி யலைவாரு முழித்தகண்ணு[4] மூடாமற்
சோதிமனை யாட்டியரைத் தோய்ந்துசுர தங்கள்செய்வர்!

**நடந்ததில் இது கால்வாசிதான்!**

பட்டணத்தில் ஆடவர்கள் பட்டதுயர் சொல்லவென்றால்
கட்டாது யென்றுஅதில் கால்வாசி யாயுரைத்தேன்!

**வள்ளல் அரண்மனை முன்பு அனைவரும்
ரதம் விட்டிறங்குதல்**

மன்னர் நெருங்கிவர மந்திரிகள் ஆர்ப்பரிக்க
அன்ன நடை[5]மாதர் அசைந்தே நடித்துவர
அரண்மனைவா சல்வந்து அண்ணல்ரதம் விட்டிறங்க
உறவான மந்திரியும் உடனாக வேஇறங்க
ஏறிவந்த வாகனங்கள் எல்லாரும் விட்டிறங்கி

1. ''கானகத்துக் காதலியைக் காரிருளிற் கைவிட்டுப்
போனதுவும் வேந்தற்குப் போதுமோ?— தானென்று
சாற்றினா னந்தவுரை தார்வேந்தன் றன்செவியா
லேற்றினான் வந்தா னெதிர்'' (நளவெண்பா. பாடல். 351)

இச்செய்யுள் இங்கு நினைத்தின்புறத் தகும்.

2. மன்மதனின் இணையாம் ரதிக்கு இவளை ஒப்பிட்டால் அது தவறாம் என்பது கருத்து.

3. தகர் - ஆடு.

4. விழித்தகண்.

5. அன்னநடை - உவமத்தொகை.
''நடையன்னந் தன்பால் நயந்து'' (நளவெண்பா: 41) (கி.பி. 13)

மீறி வளர்ந்ததன மெல்லியருந் தாமிறங்க
வள்ளல்[1] கரம்பிடித்து வந்திடவு நாககன்னி
உள்ளம்மகிழ் வாகவரை யுயர்ந்தவிந்திர கேசரியும்
இடதுகரத் தைப்பிடித்து யேகினான் மன்னவன்பின்!

### சுசீல வள்ளல் அரசுவீற்றிருக்கும் நிலையும் இந்திரகோமான் முதலோர் வணங்குதலும்

மடமடெனப் பின்னுவந்த மன்ன ருமகிழ்ந்தே
கூட யிரைந்துவரும் கூச்சல்தனைக் கேட்டரசன்
தேடக் கிடையாத சேயவர்தா னென்றறிந்து.
சிங்கார மாலிற்[2] சிறந்தரத்தின பீடமதில்
மங்காத கீர்த்திபெற்ற வள்ளல் சுசீலமன்னன்
மந்திரிமா ரோர்வரிசை மன்னவர்க ளோர்வரிசை
சந்திரனொளி வேல்[3]வாள்வில் சக்கரங்க ளும்பிடித்தார்
அணியாய் நிறைந்துநிற்க ஆலவட்டஞ்[4] சாமரைகள்[5]
காரிகைகள் ஆயிரம்பேர் கையிற் பிடித்துநிற்ப,
யேவற் றொழில்புரிவோர் எண்ணமுடி யா(வீ)ரர்
காவல்தலை யாரிகளுங் கைகட்டி(ச்) காத்துநிற்ப,
மங்கையர்கள் வாதுசொல்லி மன்னவர்முன் னேநின்று
கொங்கைக் குடமசையக் கொம்பனையா ரும்நடிக்கக்
கண்டுமகிழ்ந் தேயிருக்குங் காவலவன் றன்கொலுவிற்
தண்டுகொண்டே சென்றமைந்தன் தந்தைகா லிற்பணிய

### இந்திரகோமான், இந்திரகேசரி முதலியோர்க்குச் சுசீலன் ஆசிவழங்குதல்

வாரியே முத்தமிட்டான்; வந்தகன்னி யும்பணிந்தாள்
காரிகையா ரென்னமைந்தன் காதலியாள் என்றவுடன்
செந்தா மரையுறையுஞ் செல்வியே செல்வர்களை
னந்தாமற்[6] பெற்றுயிந்த நாநிலத்தை யாளுமென்று
வாழ்த்தியிருக் கும்போது வல்லமைசேர் மந்திரியுங்

1. இவ்வள்ளல், இந்திரகேசரி.
2. மால் - அரண்மனை. திருமலை நாயக்கர்மால் என வருதல் காணலாம்.
3. சந்திரன் ஒளியால் பளபளக்கும் வேல்.
4. ஆலவட்டம் - விசிறி.
5. சாமரை - கவரி.
6. நந்தாமல் - குறைவுபடாமல்.

காழ்த்தவிடத் தோன[1]ளித்த கன்னியுட னேபணிய
மந்திரியின் பாலனுக்கு மன்னர்மிகு ஆசிசொல்லி
இந்திராணி போல மின்னி[2]வளா ரெனக்கேட்க
"மன்னவரே, யெந்தன் மனையாட்டி" யென்னலுமே,
அன்னவளை வாழ்த்தி யானந்தங் கொண்டிறைவன்,

### சுசீலன், மனைவியை யழைத்தல்

தாதியரால் அங்குறைந்த தன்மனையா ளையழைக்க
மேதினி[3]யெல் லாம்மதிக்கும் மேலான கற்புடையாள்
பாலர்[4]வந்தா ரென்றசொல்லை பண்பாகக் கேள்வியுற்று
வேலர்அரு ளென்றுசொல்லி விரைவில் எழுந்துவந்தாள்!

### மகனைக்கண்ட தாயின் களிப்பு

அன்னைவரு முன்னமெழுந் தானந்த மாகமைந்தன்
மினனைநிகர் மாதினொடு[5] மெல்லடியி லேபணிய
வாரி யெடுத்துமவன் மைந்தனுச்சி யைமுகந்து
காரிகையாள் கொண்ட க(ளிப்)பதனைக் கூறுவர்யார்?

### சவுரியை யாரெனக் கேட்டல்

கண்மணியே யிங்குநின்ற கன்னிகையா ரென்றுசொல்ல
"தண்மையுள்ள என்தாயே, தங்கள் மருமகள்தான்"!

### மருமகளிடம் அன்பு

என்றவுடன் தழுவி யிருவென்று கிட்டவைத்து
நின்றமந்தி ரியுமனையு நேரே பணிந்துநிற்ப,

### இந்திரகேசரி அன்னையை வணங்குதல்

மந்திரிமனை யாட்டிவந்து மன்னர்மக ளைப்பணிய
மந்திரியிந்திர கேசரியும் மாது[6]மன்னை யைப்பணிந்தார்!

1. காழ்த்தவிடம்-அளவு கடந்த விஷம்; காழ்த்தவிடத்தோன்-நாகேந்திரன் "ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க்கு" (குறள்: 760)
2. மின் + இவள்.
3. மேதினி - உலகம். "மேதினியில் இட்டார் பெரியோர்"—(நல்வழி: 2)
4. இந்திரகோமான், இந்திரசேகரி.
5. சவுரியோடு.
6. மாது - நாகேந்திரன் மகள்.

### சுசீலவள்ளல் நடந்தவற்றைக் கூறும்படி இந்திரகேசரியிடம் சொல்லுதல்

அப்போ சுசீலமன்னன், "ஆண்மையிள மந்திரியே!
தப்பேது மில்லாமல் தாம்சென்று வந்ததுவைச்
சொல்லுவாய்" என்று துரையுரைப்பச் சொல்லுகின்றான்:

### இந்திரகேசரி நடந்தவற்றை உரைத்தல்: எதிர்த்தார் மாண்டார் பணிந்தார் ஆண்டார்!

இங்கிருந்து சென்று யெதிர்த்த அரசர்களை
கங்குகரை யில்லாமற் கட்டாய மாய்வதைத்து,
வந்து பணிந்தவர்க்கு வருதிசொல்லி[1] யுள்ளாக்கி
நொந்து யிரப்பாரை நொடிக்கு ளரசர்களாய்ச்
செய்துயன் பத்தாறு தேசர்களை வெற்றிகொண்டு
நொய்திற்[2]சவ் வீரநகர் நோக்கியேசெல் லும்பொழுதில்,
அந்நகரத் தன்மை யறியவொரு தூதுவிட்டேன்!

### குச்சரன் தவம்

பொன்னகரம் தான்புரக்கும் பூபாலன்[3] குச்சரனும்
சங்கரனை வேண்டி(த்) தவசொன்று செய்தானாம்;
மங்கைபங்கா என்தோன்றி மாதொன்றை யீந்தாராம்
பன்னிரெண்டாம் ஆண்டிற் பருவமவள் ஆனாளாம்!

### நாகேந்திரன் களவு

கன்னியொடுங் கூடியொரு காவனத்திற்[4] பூவெடுக்க;
நாகேந்திரன் ஓடிவந்து நாடினா ரைத்துரத்திப்
பாகார் மொழியாளைப்[5] பாய்ந்தெடுத்தே போகினனாம்
தந்தைகண்டு சாடினராந் தாக்கினா னாம்அவரை
இந்தவகை யெல்லாமே ஏகியதூ தன்இயம்பக்,
கேட்டுநா னங்கேகக் கிட்டினார் காவலர்கள்,

---

1. வருதிசொல்லி - வருக என்று சொல்லி.
2. நொய்தில் - விரைவாக.
3. பூபாலன் - அரசன்.
"ஆயிழை நொய்தி னுரைபொரு ளுண்டெனின்"
(சீவகசிந். 1767) (கி.பி. 10).
4. காவனத்தில் - பூந்தோட்டத்தில்.
5. பாகார் மொழியாளை - இனிய மொழியாளாகிய சவுரி.

மாட்டுமாட் டென்று வலியவந்து மற்புரிந்தோர்
இம்மட்டோ வென்று யிறுக்கிவிட்டு[1] உள்நுழைந்து
சம்மட்டி கொண்டிடிக்குஞ் சத்தமென வேதகர்த்தேன்!
ஓடினார் மன்னனுக்கு ஓதவுடன்[2] வந்தெதிர்த்தான்
சாடினேன் அங்கவனை சணத்திலே தான் பிணித்தேன்!

### நாகேந்திரன் மனைவி இரத்தல்

அப்போ தவர்மனைவி யழுதுகொண்டு யங்குவந்து
''யெப்போதுந் துன்பமென்றே யெழுதின னாவேதன்?
பரமன்அரு ளாற்கிடைத்த பைந்தொடியா ளைத்[3]தோற்று
விரதம்எடுத் தேயிருக்கும் வேளையில்அவ் வேதனையுங்
காணலா மோ?யானுங் காணாம லேயிறப்போம்
ஆணவத்தோ டிவ்வுலகை யாண்டிரு''வென் றேயழுதாள்;
வேண்டா மடிமாதே வேற்கண்ணா ளும்யானும்
மீண்டால்யோ சிக்காதம் மெல்லியையென் வேந்தனுக்குத்
தார மெனவுரைத்தால் தடையில்லை யான்தருவேன்;
வாரவரை[1] சேனை வருந்தாமற் காருமென்று,
கட்டை யவிழ்த்துவிட்டுக் காவலனோ டேயுரைத்து,
சட்டைபண்ணா தேயெழுந்து சார்ந்தோமோர் கானகத்தில்!

### நாகேந்திரன் விஷத்தால் தாக்கவருதல்

பாதை தெரியாமல் பசிவருத்தத் தாழுழன்றோம்
வாதை[5]கண்டு ஓர்வேடன் வந்துவழி கூறலுற்றான்,
அவனால் வழியறிந்து யான்கருட னாய்ப்பறந்து,
சிவனார் அருளாலே சென்றோம்நா கேந்திரன்நகர்:
விசத்தாலே யெங்களையும் வெல்லவென்று யெண்ணிவந்தான்
செகத்தாரை[6] காத்தகுன்றைச் செவ்வே ளருளாலே
அவ்விசத்தை யும்விலக்கி அங்குவந்தா ரைவதைத்தோ(ம்)!

---

1. இறுக்கிவிட்டு - நன்கு தாக்கிவிட்டு.
2. ஓதவுடன் - படையுடன்.
3. சவுரியை.
4. வருகின்றவரை.
5. வாதை - துன்பம். ''வாதைப்படுகின்ற வானோர்'' (தேவா. 570,2)
6. செகத்தாரை - உலகத்தாரை. செகம் - உலகம். ''செகத்தை யெல்லாம்'' (தாயு. தந்தையாய். 6) (கி.பி. 18).

### நாகேந்திரன் தோல்வி!

செவ்வியோ னாகேந்திரன் சேனையுடன் வந்தெதிர்த்தான்;
சூரன் முடிதுணித்த சுப்ரமணியர் தன்செயலால்
வீரன் தனையடர்த்து வென்றோ மதுவறிந்து
ஆரோ ஒருமுனிவ ரங்குவந்து மத்தியினில்,
நீரோ செயிப்பரிது நெடுநாள் எதிர்த்தாலும்
கந்த ருடைய கடாட்ச மிவர்படைத்தோர்
அந்தமுள்ள[1] மாதை யவர்க ளிடங்கொடுத்து
வாழ்ந்திடுவாய் என்றுசொல்லி வந்தமுனி யும்போனார்;
ஆழ்ந்த கருத்துடையோ னாம்என்று கைக்கொடுத்தான்;
நவமணித்தே ருங்கொடுத்து நல்வார்த்தை யும்உரைத்தான்;
தவமதனால் வந்தயிந்த தையலுடன் நாகேந்திரன்
பெற்ற மகளைப் பிரியமுட னேயெடுத்துக்

### இந்திரன் குறுக்கீடு!

கொற்றவரும் யானும்இரு கோதையரும் ஓர்வனத்தில்
வீற்றிருக்கும் வேளையிலே விண்ணுலகாள் இந்திரனுந்
தேற்றிடா நேயிருந்த தோகையரைக் கொண்டுசென்றான்;
காற்றின் விசை யாகஅந்தக் கானகம்முற் றுந்தேடி,
ஆற்றா தயர்ந்திருந்தோம் அங்குவந்து நாரதரும்,
''விண்ணுலகாள் இந்திரனும் வேல்போன்ற கண்படைத்த
மண்ணுலக மாதர்களை மன்னவனுங் கொண்டுசென்றான்
கண்டதுவைச் சொல்லிவிட்டேன் காவலரே!''
யென்றுசொல்லத்
தொண்டனடி யார்களுட தோகையர்கள் என்றவுடன்,

### இந்திரனிடமிருந்து பெற்றுத் திரும்புதல்

மந்திர மொன்றுஓதி மறைந்தார்! அதைச்செபிக்க
இந்திரனார் முன்னாக ஏகிப் பணிந்துநின்றோம்''
ஆரென்[2] றெமைக்கேட்ப ஆதிமுத லாயுரைத்தோம்;
''நீரென்றும் வாழி''யென்றே நேரிழையா ரைக்கொடுத்துப்
பொற்றேரு மொன்றையீய்ந்து போமென்று அனுப்பி விட்டார்

1. அந்தமுள்ள - அழகுள்ள; அழகுள்ள சவுரி.
2. யாரென்று; கொச்சையாய் வந்தது.

### குச்சரன் அரசாளக் கேட்டுக்கொண்டது

முற்றே ருடன்கூடி மொய்குழலாள் வாழ்நகரைக்
கண்டுஅங்கு தான்செல்லவே காவலன் குச்சரனுங்
கொண்டுவந்தா ரென்றுமகிழ் கொண்டதைநான் என்ன சொல்வேன்?
"தவத்தாற் கிடைத்தமின்னை(த்) தந்தாரென் மன்னருக்கு
சிவத்தாற் கிடைத்தயிந்தச் சேயிழையை[1] யான்மணந்தேன்
தன்னரசை யுங்கொடுத்துத் தாமிங் கிருங்களென்றார்
மன்னவரும் பின்னாடி வந்துஅர சாள்வமென்றே
சொல்லிவந்தோம் மன்ன"வென்று சொல்லிநின்றான் மந்திரி மகன்

### இந்திரகோமானுக்குச் செங்கோல் தர முடிவு செய்தல்

கல்விக் களஞ்சியத்தைக் கட்டித் தழுவிமன்னன்,
"எவ்வாதை வந்தாலும் மெந்தாய்க்குன் றக்குடியார்
அவ்வாதை யைத்தீர்த்தார் அவர்அருளால் எண்ணாளும்
வாழ்ந்திடுவீர்!" என்றுரைத்து, "வல்லமையென் மந்திரியே.
ஆழ்ந்தகருத் தாழருக்கே அம்பொன் முடிசூட்டிச்
சிம்மா சன[2]த்திருத்திச் செங்கோலைக் கைக்கொடுத்துப்
பெம்மான[3]ரு ளால்பணிந்து பேறடைவோம் மந்திரியே!

### சஞ்சிதரைச் சுசீலன் அழைக்கச் சொல்லுதல்

சஞ்சிதரை யிங்கழையுஞ் சண்முகனார் தன்செயலால்
வஞ்சிக் கொடிபோன்ற வல்லியுட னாய்இருத்தி
அவர்செங் கரத்தாலே அழகா முடிபுனைந்தே
விவரமுடன் நீதிமுறை விள்ளுவார்[4] பாலருக்கு;

---

1. சேயிழை - பெண். இங்கு சவுரி.
"சேயிழை கணவ" (பதிற்றுப் பத்து: 88, 36).
2. சிம்மாசனம். சிங்கஉருவம் தாங்கிக் கொண்டுளது போன்ற இருக்கை.
"சிங்காசனமும் பொங்குபூந் தவிசும்"
(பெருங்கதை. உஞ்சை: 57,60) (கி.பி. 7).
3. பெம்மான் - உயர்ந்தோன், கடவுள்.
"பிரமாபுர மேவிய பெம்மானிவன்றே" (சம். தேவாரம். 1) (கி.பி.7)
4. விள்ளுவார் - சொல்லுவார்.

நமக்கும் பரகதிக்கு நாயங்க ளும்[1]உரைப்பார்;
சுமக்கமுடி யாதரசு சொன்னோங்கா னென்றவுடன்,
"ஓடி அழைக்க"வென்று உரைத்தான் விபேகமந்திரி
தேடியே கொண்டுவந்து சேர்த்தார்கள் சஞ்சிதரை!
மன்னவனும் மந்திரியும் வந்தயிள மைந்தர்களும்
பொன்னடியைப் போற்றிநிற்ப(ப்) புகழ்ந்தாசி கள்கூறி

## முடிசூட்டிமகிழல்!

இந்திர கோமானை இருத்திச் சவுரியுடன்
மந்திரத்தால் அறத்தின்முடி மன்னர்மக னுக்கணிந்து
இந்திர கேசியை இவர்க்குமந் திரியென்று
சந்திரனொளி யுந்தோற்குஞ் சார்ந்தகணை யாழியிட்டு
நீதி தவறாமல் நெறிமுறைகள் குன்றாமல்
ஆதிமன்னன் நீதிக் கதிகமிவ ரென்றுசொல்ல[2]
செங்கோல் செலுத்துமென்று செவ்வையுட னேயுரைத்து
மங்காத கீர்த்திபெற்ற வள்ளல்சு சீலாகேள்!

## சஞ்சிதர் அறிவுரை

அந்து[3] பொறியடக்கி, ஐந்தெழுத்தை உச்சரித்து,
சிந்துஅனற் கண்ணுடைய சிவனைத் தொழுதுநின்றால்,
நாடிவந்து வேணவரம்[4] நன்மையுடன் கேளுமென்பார்.
தேடினதுன் பாதமென்றே தெளிவான மந்திரியுடன்
கூறினா லன்றே கொடுப்பார் நினைத்தபடி
நாரிபா கன்[5]கழலும் நன்றாகக் கிட்டுமென்றார்
இந்தவகை எல்லாம் இவர்களுக்கு உரைத்துவிட்டு
சந்தோச மாயெழுந்து தான்சென்றார் சஞ்சிதரும்!

---

1. நியாயங்களும்.
2. "உன் முன்னோர் எவரினும் அதிகத் திறமையுடன்,
   நீதியுடன் அரசாள்கிறாய் என்று மக்கள் கூற"
என்பது பொருள்.
3. 'ஐந்து' என்பது இவ்வாறு வந்தது.
4. கேட்டவரம்.
5. நாரி பாகன் - பார்வதியைப் பாகமாகக் கொண்ட சிவன்,

### சுசீலமன்னனும் அமைச்சனும் கானகம் செல்லல்

இளவரசர்[1] செங்கோ லியல்வுகண்டு[2] மன்னவனும்
வளமையுடன் வாழுமென்று வாக்களித்து மைந்தருக்கு
பழமறை[3]யெல் லாந்துதிக்கும் பரமபதங் காணவென்றே
தளம்[4]தையும் போங்களென்று தனித்தே யிருவர்களும்
ஏகினார் கானகத்தில் இருந்த தபோதனரைத்
தேகியென வேபணிந்து செப்பவே தேசிகரும்
எங்குவந்தாய் மன்னவனே யியலான மந்திரியுடன்
கங்குகரை காணாக் கடல்போன்ற சேனையெங்கே?
தனித்துவந்த காரணத்தைத் தக்கோ யுரைத்திடென்னச்
"செனித்து[5] வருந்தாமல்[ச்] சிவன்பதத்தைச் சேருதற்கே
மேவிவந்தேன் யுங்களையே, மேன்மைபெறச் செய்திடுவீர்!

### தேசிகர் மந்திரம் உபதேசித்தல்

பாவிகளை யீடேற்றப் பாருமெ"ன்றே பாதமதிற்
சென்னியழுந் தப்பணியச் செவ்வி யனறிந்து
உன்னிஒரு மந்திரத்தை உபதேசம் செய்ததினாற்
பேரான முத்தி பெறுவா யெனப்பணிந்தார்.
வீராதி வீரன் விரைவிற் றெளிவாகி
அங்கோர் மரத்தருகில் அன்னமா காரமன்றிக்
கெங்காத ரா!அரனே! கிருபா சமுத்திரமே[6]!"
மங்கைபங் காள! மறையோது மெய்ப்பொருளே!
எங்களையே ரெட்சியென்று இருதயத்தி லேநினைந்து
சித்தம் கலங்காமல் "சிவசிவா" வென்றுரைத்துக்
கொத்தவனும்[7] மந்திரியும் குவித்தகரத் தோடிரப்ப,

---

1. இந்திரகோமான்.
2. செங்கோல் இயல்பு கண்டு - செங்கோல் செலுத்துவது கண்டு.
3. பழமறை - பழைமை பொருந்திய மறை; 'பல மறை' எனவுங் கொள்ளலாம். ஓலையில், 'பள மறை' எனக் காணப்படுகிறது.
4. தளம் - படை.
5. பிறந்து; கொச்சையாய் வந்தது.
6. கிருபா சமுத்திரம் - கருணைக் கடல்.
7. கொற்றவனும்.

அம்மையப்பர் காட்சி

அன்னை யுடனிடப மதிலேறி யங்குவந்து,
“யென்னை நினைத் தேதுதித்தீர், என்னவரம் வேணு”மென்னப்
“பிறவா நெறிதருவீர், பிஞ்ஞகா யெங்களுக்கு
திறமாக நின்பாதந் தேசிகா சேருமெ”ன்ன,
“அந்தப் படியே அருள்செய்தோம்!” என்றவுடன்,
சந்தோஷ மாகஅவர் தன்றாளில் அடைந்தனரே!

இந்திரகோமானின் நீதிதவறா ஆட்சி

இங்கு[1]அர சாட்சிசெய்த யேந்தலிந்திர கோமானார்,
மங்காமல் நீதிமுறை மாறாது அரசாள,
அட்டலெட்சு மிப்பெண்கள் அகலாது வீற்றிருக்கச்
சட்டப் படியரசு தான்செய் திருத்தலினாற்
பகையான புள்விலங்கும் பகையின்றி யேவாழும்!
வகையாக மாதமும் மாரிவரி சித்துநிற்கும்!
மத்திரி கேசரிதான் மன்ன ருரைப்படியே
தந்திர மாய்ப்பூமி தனையாண் டிடுநாளில்,

இந்திரகோமானுக்கு மகன் பிறத்தல்

வண்ண மயிலேறும் வடிவே லனருளால்,
மன்னன் மனைசவுரி மாதினுக்கு மோர்பாலன்
வந்து செனித்திடவே வள்ளல்கண்டு யுளமகிழ்ந்து,
நந்துரையு[2] மாமனுடன் நாடாள்வான் பாலனென்றான்!

இந்திரசேகரிக்கும் மகன் பிறத்தல்

கந்தர்செய லால்நாக கன்னியிட மோர்புதல்வன்
அந்தமுட னேபிறந்தான் ஆனந்தங் கொண்டனரே!

அருள்பெற்று வாழ்ந்தனர்

ஆறு முகவ ருளாற்செனித் ததினாலே
வேறுபகை யில்லாமல் வெய்யேன்[3]போல் வாழ்ந்தனரே!

---

1. அமிர்தபுரத்தில்.
2. 'நந்துறையு' என்பது ஓலை. நம்+துரை.
3. வெய்யோன் - சூரியன்.

*நூலாசிரியர் வரலாறு*

இந்தக் கதையை யியல்பா யெழுதினவன்
சந்ததிப்ப ரம்பரையைச் சாற்றுவேன் அம்மானே!
தில்லை நடேசன் திருத்தாள் மறவாமல்
மல்லைநக ரம்ஆண்டே வந்தோன் மிதுலைநகர்
யெல்லைமிகு செல்வமுடன் எந்தநா ளும்வாழ்வோன்
சொல்லைப் பகுந்துபொருட் சொல்லுங் கவிவலவன்
வாதிட் டரசனுடன் வண்ணப்பாச் செய்துவென் றான்
மேதினியோர் மெச்ச விருதுமிக வாங்கினவன்!

*ராசசிங்க மங்கலத்தைப் பரிசாகப் பெற்ற*
*சிற்றம்பலக் கவிஞன்!*

எம்பிரான் மேவி இருக்கும் பிரான்மலைக்கிச்[1]
சம்பிர மதா[2]யோர் தலபுராணஞ் சாற்றினவன்
சேதுபதி மன்னர் சிறப்பான தந்தையென்றே
ஓதுதமி ழைப்புனைந்து உள்ளம்மிக வேமகிழ்ந்தே
ராசசிங்கை மங்கல[3]முன் னாளீய்ந்தாய் நம்தமிட்காய்!
ராசனே ரெண்டுமடை நான்தான மீய்ந்ததுகேள்
கன்யா குமரிநிறை கர்த்தருக்கு ஓர்மடையும்[4]
உன்னி மறையாள ருயர்ச்சிபெற வோர்மடையும்
ஈய்ந்துகல்லுந் தானுட்டி யென்பே ரதிற்பொறித்துக்
காய்ந்துவரும் பானுமதி கண்டவரை கைக்கொடுத்தேன்
நாற்பத்தி யாறுமடை நானுள வைத்திருந்தேன்
காற்புள்ள வேந்து கவியென்மேற் சாற்றினதால்
இந்தாரும் என்று யிறைகரத்தில் பட்டயத்தைச்
சந்தோஷ மாய்க்கொடுத்து சணத்திலே நீரளித்தோன்
வணங்கா முடிக்கோன்மேல் வண்தமிழை யேசொரிய
யிணங்கமதாப் பாகனி யியல்பாக வாங்கினவன்

1. பிரான்மலை : திருப்பத்தூர் - சிங்கம் புணரிச் சாலையிலுள்ள மட்டியூர் (சதுர்வேத மங்கலம்) எனும் ஊருக்கு வடக்கே 10 கி.மீ. தொலைவில் இம்மலையும், அடிவாரத்தில் பிரான்மலையெனும் ஊரும் உளது. பாரி வள்ளல் ஆண்ட பகுதியும் இதுவே.

2. சம்பிரமதாய் - சிறப்பாய்.

3. இராஜசிங்க மங்கலம் : திருவாடானை - இராமநாதபுரம் சாலையில், இராமநாதபுரத்துக்கு வடக்கே 20 மைல் தொலைவில் அமைந்த ஊர். இவ்வூர்க் கண்மாய் புகழ் வாய்ந்தது. கண்மாயின் நீளம் 23 கி.மீ. ஆகும். மேலடிகளில் வரும் மடைகள் இக்கண்மாயின் மடைகள் எனல் சாலும்.

4. மடை - மதகு; நீர்போகும் வழி. ஏரியெனினும் பொருந்தும்.

சிற்றம்பலக் கவிஞன் சிறந்தஎங்க ளையனிடங்
கற்றவருஞ் சொல்லரிது, கணக்கிலடங் காததினால்!

சிற்றம்பலக் கவிஞன் கொடையாகப்
பெற்ற பட்டிகள்

வாங்கின பூமி வழுத்துவேன்[1] நான்சிலது
பாங்கான பூசாரி பட்டி,செம் மலவுபட்டி,
அடுத்தபுல வன்குடி,யு மானகவி ராயர்பட்டி,
கொடுத்தகொத்த மங்கலமும், கோனாடு பட்டியுடன்,
மறவணி யேந்த,லென்றும் மண்மேட்டுப் பட்டியென்றும்
திறமான செவ்வூரென்றுந் தேனாட்சி பட்டியுடன்,
காரைச்சரான் பட்டி,யுங் கருகைப்பி லான்பட்டியும்
பாரையெல் லாம்ஆண்டார் பலவாய்ச் சிலவழித்தும்

சிற்றறம்பலக் கவிஞனின் சிறப்புக்கள்

மங்கைபா கன்கோவில் மணிவிளக்கு மேற்படவே
அங்கேசா யுச்சியம் அடைந்திடத்திற் கல்நாட்டிச்
சிற்றம் பலவன் சிறப்பாய்ச் சதாசேர்வை
கற்றவருங் காணவென்றே கல்லிற் பொறித்தனர்காண்!
காசிபர்[2] கோத்திரத்தான் கருதுவள்ளல் சந்தானன்
மாசில்லா சைவதுல்யன்[3] மன்னர்மெச்ச வாழ்ந்திடுவோர்
ஆளப் பிறந்தா னிலாஞ்சனை[4] யாய்வாழும்
வேளொப்ப னையாகும் விள்ளுசைவ ராசகுரு
தாளைவணங் கும்நேயன் தமிழ்கடலின் சந்ததியான்
வாளைவென்ற கண்மடவார் வள்ளிதெய்வ குஞ்சரிக்கே
கோலமண மாலைபுனை குமரவே ளின்தாசன்
ஆலமுண்டா ரோடெதிர்த்தே அம்பலத்தில் ஆடினவள்
சிங்கைப் பதியிற் சிறப்பாய்க் கொலுவிருப்பாள்
மங்கைக் கரசாம் மதித்தசிகை வாகினி(ய)ாள்
அழகிய தேவியெந்தன் அன்னைகுல தெய்வமதை
வளமையாய்ப்[5] பூ(ப்)பேற்றி வருவோந்த வறாமல்

1. வழுத்துவேன் - சொல்லுவேன்.
2. காஷ்யபர் - சப்த ரிஷிகளுள் ஒருவர்.
3. சைவதுல்யன் - பல தருமங்களைச் செய்தவன்.
4. இலாஞ்சனை - மதிப்பு.
5. வளமையாய் - மரபாய்,

பழமறையுந் தேடறிய பாண்டிய ரதித்தாயை
வளம்மகிழ்வ தாயவளுக் காண்டுக் கோர்தினத்தில்
மனையில்வட பாரிசத்தில்[1] மனமகிழ்ச்சி[2] யாய்ப்படைப்போம்
அணைபோலக் காத்திடுவாள் அவளை வணங்கிடுவான்!

"அத்தகு சிற்றம்பலனுக்கு மகன் நான்!"

அழகிய சிற்றம்பலம் மால ரருள்தவத்தால்
வளமை மிகுந்த[3]யிந்த வங்கிசத்தி[4] லேசிறியோன்
நவமாந் தலமுறையில் நானும் அவதரித்தேன்
சி(வ)னார் மகவருளாற் செய்யலுற்றான் அம்மானை
மாரன் குமார சுவாமி மனமுவந்து
சார முளகதையாய்ச் சாற்றினா னிப்பூவில்
கல்விக் கடலருகே கைவாய்க்கா லோடுதலாய்[5]
வல்கெருடன் முன்னாலோர் மசகம்[6] பறப்பதுபோல்
அஞ்சுதலை யரவம் ஆடல்கண்டு பூநாகங்
கொஞ்சி யதனுடனே கூடநின்று ஆடுதலாய்க்
கூறினே னானிதுனுள் குற்ற மிருந்தாலுந்,
தேறினோ ரேசிறியேன் செந்தமிழைக் கொள்வீரே!"
செவ்வேல வன்வாழி! சேவற் கொடிவாழி!
முவ்வோர்க ளும்வாழி! முனிநா தரும்வாழி!
பாடினோர் வாழி! பகுத்தறிவோ ரும்வாழி!
ஆடினார் மனதில் அவர்பாத மேவாழி!
தில்லைமூ வாயிரவர் திருத்தாளுந் தான்வாழி!
மல்லைக் கவிராஜன் மைந்தர்கிளை யும்வாழி!
வெண்டா மரையுறைவாள் வெள்ளைநிற மேனியினாள்
கொண்டாட்ட மாயென் குலம்வசிப்பாள் வாழியவே!

முற்றும்.

---

1. பாரிசம் - பக்கம்.
2. மனமகிழ்ச்சி.
3. வளமை மிகுந்த - மரபுப்பெருமை மிக்க.
4. வம்சத்திலே.
5. கைவாய்க்கால்-சிறுவாய்க்கால். 'கை'யெனும் சொல்லுக்குச் சிறு எனும் அரும்பொருள் ஒன்று உண்டு. இது, 'கைச்செலவு' என்பதினின்றும் தெளிவாகிறது.
6. மசகம் - கொசு.

# உள்தலைப்புக்கள் அகராதி


| | பாடல் வரி எண் |
|---|---|
| அசரீரி பதில் | 257 |
| அம்மையப்பர் காட்சி | 1785 |
| அமுர்தவல்லியிடம் நீலகண்டர் கூறல் | 677 |
| "அரசு இப்போது வேண்டாம்; பலரை வென்ற பின்னே வேண்டும்" | 931 |
| அரண்மனை முன்பு அனைவரும் ரதம் விட்டிறங்குதல் | 1603 |
| அருள்பெற்று வாழ்ந்தனர் | 1805 |
| அவர்கள் சென்ற அழகு சொல்லரிது! | 1557 |
| "அவன் எங்கொளித்தனனோ?" | 686 |
| அழகு மங்கையை அரன் தந்தான் | 588 |
| அறுசுவை விருந்தும் அன்பளிப்பும் | 1432 |
| அனைவரும் இளைப்பாறுதல் | 1179 |
| "ஆகவே, நீ ஓடிவிடு!" | 603 |
| ஆற்றல்மிகு மகன் பிறப்பான் என யோகி கூறல் | 219 |
| இங்கேயே இருங்கள் எனக் குச்சரன் கூறுதல் | 1470 |
| இந்திரகேசரி அன்னையை வணங்குதல் | 1649 |
| இந்திரகேசரி ஆறுதல் கூறுதல் | 696 |
| இந்திரகேசரி, இந்திரகோமான், சவுரி மூவரும் விடைபெற்றுச் செல்லல் | 1165 |
| இந்திரகேசரி, இந்திரன் சிறைவைத்தான் எனக்கூறுதல் | 1211 |
| இந்திரகேசரிக்கும் மகன் பிறத்தல் | 1803 |
| இந்திரகேசரி கருட உருவெடுத்தல் | 1030 |
| இந்திரகேசரி குச்சரன் நாட்டைச் சவுரிக்குக் காட்டுதல் | 1332 |
| இந்திரகேசரி சவுரியைப் பெறுதல் | 1113 |
| இந்திரகேசரி ஞானக்கண்ணால் காணுதல் | 835 |

இந்திரகேசரி தன்வரலாறு கூறுதல் 916
இந்திரகேசரி தாம் இன்னார் எனக்கூறுதல் 1348
இந்திரகேசரி தான் பொருதவகை கூறுதல் 1091
இந்திரகேசரி நடந்தது கூறல் 1654
இந்திரகேசரி, நாகேந்திரன் மகனைக் கவர்ந்துவரல் 1169
இந்திரகேசரி நாகேந்திரனைக் கொத்துதல் 1053
இந்திரகேசரி நியந்தனை 812
இந்திரகேசரியும் கிழட்டுப் பாம்பும் 805
இந்திரகேசரி வரலாறு கூறுதல் 1119
இந்திரகோமான் ஆறுதல் 972
இந்திரகோமான், இந்திரகேசரி, சவுரி மூவரும் சந்தித்தல் 1137
''இந்திரகோமான் ஒரு தேவனோ?'' 637
இந்திரகோமான் கிளிவடிவில் போதல் 860
இந்திரகோமான் போருக் கழைத்தல் 629
இந்திரகோமான் வழிகேட்டல் 1219
இந்திரகோமானின் கிடக்கை 976
இந்திரகோமானின் நீதி தவறா ஆட்சி 1791
இந்திரகோமானுக்கு இந்திரகேசரி நினைவுவரல் 1004
இந்திரகோமானுக்கு செங்கோல்தர முடிவுசெய்தல் 1730
இந்திரகோமானுக்கு மகன் பிறத்தல் 1799
இந்திரகோமானுக்கு மணக்கோலம் 1410
இந்திரகோமானும் இந்திரகேசரியும் இந்திரனைக்கண்டு வணங்குதல் 1268
இந்திரகோமானும் இந்திரகேசரியும் தாலிகட்டுதல் 1418
இந்திரகோமானும் இந்திரகேசரியும் மங்கையரைத் தேடுதல் 1206
இந்திரகோமானும் இந்திரசாலனும் இணைபிரியாமை 363
இந்திரகோமானையும் இந்திரகேசரியையும் அழைத்துவரச் செய்தல் 395
இந்திரகோமான் முதலியோர் விடைபெற்றுச் செல்லல் 1490

இந்திரன் கன்னியரைக் காவலில் வைத்தமையை நாரதர் கூறுதல் 1225
இந்திரன் குறுக்கீடு 1707
இந்திரன் பெண்களுக்குச் சீதனம் கொடுத்தல் 1304
இந்திரனைப் புகழ்ந்து விளித்தல் 1276
இருவரும் சவ்வீரம் அடைதல் 571
"இவளை எடுத்தேக என்னவழி?" 1150
இளவலைக்கண்ட இளமங்கையர் நிலை 1572
"இளம் பெண்ணால் ஏற்பட்ட துன்பமென்ன?" 673
இளைஞர் வீரம்! 788
இன்னும் எத்தனையோ சிறப்பு! 85
"இனியார் உளர் பொருத?" 501
"உங்கள் தந்தையர் அழைத்துவரச் சொன்னார்கள்!" 408
"உங்கள் மகளை என் தலைவனுக்கே தரவேண்டும்" என இந்திரகேசரி கூறல் 739
"உண்மை உருக்காட்டுக" எனச் சவுரி கூறல் 752
"உம்பெண்ணை இந்திரகோமானுக்குத் தருவீராகில், உங்களைக் காப்போம்" என இந்திரகேசரி கூறல் 724
"உன் தாயின் துயரத்தை அறிந்தோம்" 937
"எங்களுக்குத் தெரியாது வரச்சொன்னார்கள்" 414
"எங்கு ஒளித்தான் நாகேந்திரன்?" 830
எதிர்த்தார் மாண்டார்; பணிந்தார் ஆண்டார்! 1654
எம்பெருமான் முனிவர் வேடத்தில் தோன்றுதல் 1080
"எனது அமைச்சன் உன் தாயிடம் உறுதி மொழி வாங்கியுள்ளான்" 945
"ஏந்திழை நான் என்ன செய்வேன்?" 455
"ஏழுநாளைக்குள் மீட்காவிடில் அவர்கள் இறப்பர்" 1217
ஏவலர்களுக்கு அமைச்சர் ஆணை 1519

ஓராண்டிற்குள் வரா்விடில்
இறந்திடுவேன் என விடை தரல் 475
கடவுள் வணக்கம் 1
கந்தவனம் 794
"கலகம் கூடாது" என இந்திரகேசரி
எச்சரித்தல் 843
காட்டானையுடன் போர் 795
காவலர்கள் அச்சுறுத்தல் 616
"காளி தாக்கும்" 781
காளையர்க்குக் கற்றுத்தரல் 379
காளையரிருவரும் வேட்டையாடிய நிலை 403
கிளி உருவிற் செல்க! 848
கிளியாகிய உன்னோடு விளையாடுவாள் 856
கிளியின் உபசார வார்த்தை 868
கிளியே அஞ்சாது இரு 876
கிளியை அணைத்துப் பூனையை விரட்டுதல் 864
கிளி வரலாறு கேட்டல் 888
குச்சரன் அரசாளக் கேட்டுக்கொண்டது 1722
குச்சரன் சக்கரத்தை ஏவுதல் 653
குச்சரன் தவம்! 1661
குச்சரன் தன் மனைவியை
அழைத்துவரச் சொல்லல் 670
குச்சரன் புலம்பல் 1374
குச்சரன் மகளைத் தேடுதல் 746
குச்சரன் மகளை வரவேற்றல் 1372
குச்சரன் மந்திரியை அனுப்பி
அழைத்துவரச் செய்தல் 1354
குச்சரன் மனைவி ஓடிவந்து காணல் 684
குச்சரன் மனைவி தன் மகவை இழந்த
கதை கூறல் 677
குச்சரன் மனைவி புலம்பல் 688
குச்சரன் விடைதருதல் 1481
குச்சரனுக்கு வரவைச் சொல்லுதல் 1341
குழந்தைக்குப் பெயரிடாத குறை 291
குழந்தை பிறப்பு 271

"குழந்தையர் இப்படிப் பகர்கின்றனரே!" 430
குன்றக்குடி வலம்வருதல் 174
குன்றைக்குமரன் தோன்றி வினாதல் 749
கொடி கொம்புமீது படர்ந்தது ! 981
கொடைச் சிறப்பு 82
கொடையாகப் பெற்ற பட்டிகள் 1833
சக்கரம் இந்திரகேசரிமுன் பணிதல் 665
சஞ்சிதர் 312
சஞ்சிதர் அறிவுரை 1755
சஞ்சிதர் இருகுழந்தைகளுக்கும் பெயரிடல் 331
சஞ்சிதரை அழைத்தல் 1737
சஞ்சிதரை அழைத்துவரல் 299
சவ்வீரத்தெல்லை தாண்டுதல் 1498
சவ்வீரம் எனும் நகர் உனது என
இந்திரகேசரி கூறல் 505
சவ்வீர மன்னன் குச்சரனுக்கு மகனில்லாமை 514
சவ்வீரமன்னன் வினாவுதல் 625
சவ்வீர மன்னனும் இந்திரகோமான்
முதலானோரும் பொருதல் 644
சவ்வீரன் போரிடல் 633
சவுரி இந்திரகோமானைக் காணாது புலம்பல் 1133
சவுரிக்கு நேர்ந்த இன்னல்கள் 909
சவுரிக்கும் இந்திரகோமானுக்கும் உடனே
மணமுடிக்க நிச்சயித்தல் 1380
சவுரி தந்தைக்கு நடந்ததைக் கூறல் 1450
சவுரி தன் வரலாறு கூறல் 890
சவுரி தேற்றுதல் 1008
சவுரியின் புலம்பல் 963
சவுரியை யாரெனக் கேட்டல் 1645
சாத்திரங்கற்ற நீ இப்படிச் செய்யலாமா? 1042
சிற்றம்பலக் கவிஞனின் சிறப்புக்கள் 1841
சுசீல மன்னன் அரசிருக்கை 93
சுசீலமன்னனும் அமைச்சனும் கானகம்செல்லல் 1763
சுசீலவள்ளல் குன்றைமலை
போகவேண்டும் எனல் 129

சுசீலவள்ளல் செய்யவேண்டியதை
அமைச்சர் கனவில் கூறல் 113
சுசீலவள்ளல் தனக்குப்பின் அரசாள
மகன் பிறக்கவில்லையே எனல் 106
சுசீலவள்ளல் நடந்தவற்றை வினாதல் 1651
சுசீலவள்ளலை வணங்குதல் 1612
சுசீலன் அழுந்தபுரம் திரும்புதல் 258
சுசீலன் ஆசி 1627
சுசீலன் ஊர்திரும்ப விடைகேட்டல் 255
சுசீலன் குன்றைமலைக்கேகவிருப்பதாகக்
கூறல் 148
சுசீலன் சஞ்சிதரை அழைக்கச் சொல்லல் 296
சுசீலன் தன் மனைவி போகவதியை
அழைத்தல் 151
''சுசீலன் மகனால் அவனை மீண்டும்
பெறுங்கள்'' 560
சுசீலன் மகனுக்குத் தாலாட்டு 344
சுசீலன் மகனை, அலங்கரித்தல் 318
சுசீலன் மகிழ்ச்சியால் ஈதல் 250
சுசீலன், மனைவியை அழைத்தல் 1637
சுசீலன் வாரி வழங்குதல் 277
சுசீலன் வேலவனிடம் சந்ததி
கேட்டிறைஞ்சுதல் 230
சுசீலனுக்குத் தூதனுப்புதல் 1508
சோதி தோன்றிப் படைகளை விரட்டுதல் 620
ஞானதிருஷ்டியால் இந்திரகேசரி கூறல் 567
''தந்தையர் கூறியவாறு செப்புவீர்!'' 411
தந்தையிடம் சவுரி விடைபெறல் 1443
''தந்தையை வென்றான்'' 903
''தவத்தால் பிறந்தேன்; மதிபோல்
வளர்ந்தேன்'' 897
தனியாக இருந்தால் சொல்வேன் எனக்
கிளி கூறல் 880
தூதன் செய்தி கூறல் 1515
தூதன் வணங்குதல் 1511

தூதன் வணிகன் கூறியதை
இந்திரகேசரிக்குச் சொல்லல் 607
தூதனை அனுப்புதல் 578
தேசிகர் மந்திரம் உபதேசித்தல் 1774
தேர்ப்பாகன் அதிசயித்தல் 1320
தேர்ப்பாகன் தேடுதல் 1315
தேரோட்டியையும் கொடுத்தான்! 1162
''தேவலோகஞ் சென்று கன்னியரைக்
கேளுங்கள்'' 1246
நகரச் சிறப்பு 70
நகரழகைக் காட்டியபடி அழைத்துவரல் 1364
நாகங்களுடன் போர் 798
நாகலோகத்துக்கு வழிகூறுதல் 772
நாகேந்திரன் என்பான் இப்பெண்ணைத்
தூக்கிச் செல்வான் எனல் 553
நாகேந்திரன் கணைகள் வீசல் 1065
நாகேந்திரன் களவு 1665
நாகேந்திரன் கவர்ந்துசென்ற பெண்ணை
மீட்க வழி கேட்டல் 759
நாகேந்திரன் கவர்ந்து சென்றான் 683
நாகேந்திரன் சினம் 1039
நாகேந்திரன் தூக்கிச் சென்றான்! 593
நாகேந்திரன் தோல்வி 601
நாகேந்திரன் தோல்வி 1695
நாகேந்திரன் மணித்தேர் கொடுத்தல் 1160
நாகேந்திரன் மனைவி இரத்தல் 1676
நாகேந்திரன் விஷத்தால் தாக்க வருதல் 1688
நாகேந்திரன் விஷத்தைக் கொட்டுதல் 1058
''நாகேந்திரனை வெல்ல யாரால் முடியும்?'' 784
''நாங்கள் பொய்யுரைத்தோம்!'' 1296
''நாங்கள் வருமளவும் நாட்டைக்
காக்க வேண்டும்!'' 698
நாட்டுச் சிறப்பு 43
நாரதர் மந்திரம் சொல்லித்தருதல் 1243
நாரதர்வருகை 1222

"நாரதரே, வழியாது?" 1230
நாரதரைத் துதித்தல் 1237
நீலகண்டன் ஆரவாரத்துடன் செல்லல் 1360
நூலாசிரியர் வரலாறு 1807
பகலிற்கிளி, இரவில் மன்னன் 1017
பகைவர் நண்பராயினர் 2008
படைமக்கள் திரளுதல் 139
பரிவாரமுடன் குன்றக்குடி நோக்கிச் செல்லல் 158
பலநாடுகளை வென்று வருதல் 490
பறையறைதல் 135
பாதாளத்தே சிறை 597
பாம்பின் கண்ணீர் 820
பாம்பு நிறைந்த வழி 778
பாம்பு வடிவெடுத்து மங்கையைத் தேடிச்செல்லல் 823
பாம்பு வழியுரைத்தல் 814
பிறவா நெறிமேல் குச்சரனுக்கு ஆசை 1473
பின்னும் மன்னன் வினாவுதல் 463
புலம்பியோர் கூட்டம் 1595
புவியாசை இல்லாரே போசலாம் எனல் 767
பூசகரிடம் வரம் கேட்டல் 240
பூதம் அமுது தரல் 212
பூலோகம் திரும்புதல் 1311
பூவெடுக்கப் போனபோது, பூவையை
எடுத்துச் சென்றான் 900
"பூனையாய் வருவேன்" 913
பெண்டிரைக் காவல் வைத்தல் 1203
பெண்ணால் மடிந்தோர் கோடிகோடி 1047
பெண்ணின் அழகு 521
பைந்தொடிக்கு விடுதலை 1289
பொற்கொடி பூங்காவனம் சென்றாள் 680
பெற்றோர் வேண்டும் என இந்திரகேசரி
கேட்டல் 1157
போகவதிக்கும் மந்திரி மனைவிக்கும்
அமுதைத்தரல் 214
மக்கள் விடை வேண்டல் 465

மக்களிருவரும் வடதேசம் செல்லல் 487
மகள் பிறக்க வரம் ஈதல் 518
மகனுக்கு முடிசூட்ட விழைதல் 391
மகனைக் கண்ட தாயின் களிப்பு 1641
மங்கையரைக்கண்ட ஆடவர் நிலை! 1581
மந்திரிக்குச் சவுரி பாராட்டு 1127
மந்திரி சொல்லியவற்றை நிறைவேற்றல் 1537
மந்திரி நாகங்களைக் கொன்றான் 1023
மந்திரி பூங்காவில் இந்திரகோமான்
முதலியோரைக் காணுதல் 1539
மந்திரி மனைவிக்குக் குழந்தை 287
மந்திரி யோகியைக் கூட்டி வரல் 190
மருமகளிடம் அன்பு 1647
மன்னன், இருவருக்கும் கற்றுத்தரச் செய்தல் 373
மன்னன் கூறியதை மந்திரி
நிறைவேற்றல் 1394
மன்னன் மனைவி கருவுறுதல் 264
மாட்டிடையன் ஊர்பேர் வினாதல் 1345
மீண்டும் இன்பம் ! 1013
முகூர்த்தம் குறித்து அழைப்பு அனுப்பச்
செய்தல் 1388
முடிசூட்டி மகிழ்தல் 1747
முருகன் வணிகராக வரல் 582
முன்பு நாகேந்திரன், இப்போ தேவேந்திரன் 1184
முனிவர் அமைதிப் படுத்துதல் 1085
முனிவர் நாகேந்திரனுக்கு உபதேசம் 1105
''யாகத்தால் வந்தவர்கள் நாங்கள்'' 921
யாகத்தீயினின்றும் பூதம்! 208
யாகம் செய்துதர யோகியைச் சுசீலன்
வேண்டல் 197
யோகி ஒருவரைக் கொண்டுவர
மந்திரியிடம் சொல்லல் 180
யோகி சொற்படி மந்திரிக்குச்
சுசீலன் ஆணை 201
''யோகியாக வந்தவனும் நானே...'' எனல் 245

| | |
|---|---|
| ராசசிங்கமங்கலத்தைப் பரிசுபெற்ற கவிஞன் | 1815 |
| வஞ்சியை விடைபெற்று வரச்சொல்லுதல் | 1439 |
| வடிவேலர் அருளாற் கணைகள் சருகாதல் | 1075 |
| "வந்து நாளாயிற்று! விடைதாருங்கள் அப்பா!" | 1476 |
| வள்ளல், மகனுக்கு முடிதாங்குமாறு உரைத்தல் | 418 |
| வள்ளல், மனைவியிடம் கூறிப்புலம்பல் | 447 |
| வளைச்சடங்கு | 267 |
| "விண்ணுலகோ? பொன்னுலகோ?" | 1262 |
| விபேகன் சவுரியை யாரென வினவல் | 1544 |
| விரதம் மீதியிருக்கிறது எனக்கூறிப் பெண்கள் தப்பித்தல் | 1204 |
| விரைந்து சென்று சுசீலனைக் காணல் | 417 |
| விஷம் வீணாணது | 1063 |
| வீரர் சென்றுவரட்டும் என அமைச்சன் கூறல் | 437 |
| "வீரரை யாரே வெல்வர்?" | 1308 |
| வென்ற நாடுகளில் ஏழையர்க்கு முடி புனைதல் | 499 |
| "வேந்துபலரை வென்றபின்பு முடிபுனைதலே முறை!" | 424 |
| வேலவரை வணங்குதல் | 610 |
| "வேலவனோ? மாலவனோ?" | 1563 |

# வர்க்கவெண்பா

# முன்னுரை

இவ்வர்க்கவெண்பா நூல் முருகன் மீது பாடப்பெற்ற பக்தி நூலாகும். குமாரசாமிக் கவிராயர் எழுதியதாம். இக்குமாரசாமிக் கவிராயர்[1] அவர்கள் எழுதிய சுசீலவள்ளல் அம்மானை எனும் நூலும் வர்க்கவெண்பா நூலும் ஒரே சுவடிக் கட்டில் இருக்கின்றன.[2] முருகன்மீது பாடப்பெற்றிருப்பினும், 'வர்க்கவெண்பா' என்றே அதன் தலைப்பு எழுதப்பெற்று உள்ளது.

குமாரசாமிக்கவிராயரின் இவ்வெண்பாக்கள் அவரின் புலமைக்குச் சான்று பகரவல்லன. இவரெழுதிய சுசீலவள்ளல் அம்மானை படிப்பாரும் இதனை நன்கு உணர்வர். இவ்வர்க்கவெண்பா நூலுள் ஔவை போன்ற ஆன்றோர் வாக்குகளை இடையிட்டுப் புலவர் யாத்துள்ளதால், குமாரசாமிக்கவிராயரின் நுண்மாண்நுழைபுலம் நன்கு விளங்கும்.

எழுத்துக்களை அகரவரிசையில் அமைத்துப் பாப்புனைவது பிற்கால மரபாம். பாட்டியல் நூற்கள் இவற்றுக்கு இலக்கணம் காண்பிக்கின்றன.

"மொழிக்குமுத லாகிய வெழுத்துக் கெல்லாம்
வருக்க முரைப்பது வருக்க மாலை"

எனப் பன்னிருபாட்டியல்[3] வருக்கமாலை வகைக்கு இலக்கணம் ஓதுகிறது. குமாரசாமிக் கவிராயரின் இவ்வர்க்கவெண்பா நூலும் இவ்வாறே எழுத்துக்களை அகரவரிசைப்படி முதலெழுத்தாகக் கொண்டு பாடப்பெற்றதாம். முருகன் மீது இதே வருக்க முறையில் பாடப்பெற்ற மற்றொரு நூல் கந்தவருக்கச் சந்தவெண்பா[4] வாகும்.

---

1. அழகிய சிற்றம்பலக் கவிராயர் மகனார் குமாரசாமிக் கவிராயரின் காலம் கி. பி. 17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி பார்க்க. சுசீலவள்ளல் அம்மானை முன்னுரை,

2. சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம். R .4981.

3. பன்னிரு பாட்டியல். 281.

4, சரவணப் பெருமாள் கவிராயர் எழுதியது.

முருகன் மீது வெண்பாக்களால் பாடப்பெறும் முறைக்கு முன்னோடி திருமுருகாற்றுப்படை நூலுக்கு முன்பு அமைந் திருக்கும் பத்து வெண்பாக்கள்[1] எனலாம்.

முருகன் வழிபாடு நந்தமிழகத்தில் தொல்காப்பியனார் காலத்திற்கு முன்பே இருந்திருக்கிறது.[2] பழந்தமிழ் நூற்கள் பகுத்த நான்கு நிலங்களில் குறிஞ்சி நிலத்திற்குக் கடவுள் முருகனாம். "சேயோன் மேய மைவரை உலகம்" என்பது தொல்காப்பியம். *(அகத்திணை:5).*

முருகனது சிறப்புக்களைப் பழந்தமிழ் நூற்கள் ஒருவகை யாகவும் பிற்றைக் கால நூற்கள் வேறுவகையாகவும் உரைக் கின்றன. பிற்கால மரபுகளுக்கு மூல நூலாகத் திகழ்வது கந்தபுராணமாகும்.[3] வர்க்கவெண்பா கண்ட குமாரசாமிக் கவிராயரும், இப்பிற்கால மரபுகளையே பெரிதும் தழுவிப் பாக்கள் புனைந்துள்ளார்.

குமாரசாமிக் கவிராயர் குறிப்பாகக் குன்றைமலை முருகனைப்பற்றியே பாடியுள்ளார். இக்குன்றக்குடி இன்றும் சீர்மிகு முருகன் தலமாகவுளது. இவ்வாறான தலங்களை 'ஆறுபடை வீடு' எனப்பிற்கால நூற்கள் குறிப்பிடுகின்றன; குமாரசாமிக் கவிராயரும் குறிக்கின்றார்.[4] நக்கீரரின் திருமுருகாற்றுப்படை 'ஆறுபடைவீடு' பற்றிக்குறிப்பிடவில்லை. பின்னெழுந்த திருப்புகழும் குறிப்பிடவில்லை. அருணகிரியார்,

"ஆறு திருப்பதியில் விளங்கு பெருமாளே"

என்றே பாடுகிறார். குமரகுருபரரும்,

---

1. "குன்ற மெறிந்தாய் குரைகடலிற் சூர்தடிந்தாய்
புன்றலைய பூதப் பொருபடையாய் - என்றும்
இளையா யழகியா யேறூர்ந்தா னேறே
உளையாயென் னுள்ளத் துறை" முதலியன.
2. திரு. வி. க. முருகன் அல்லது அழகு. பக். 29.
3. கச்சியப்ப சிவாச்சாரியார் எழுதியது. (கி. பி. 11)
4. "ஆறுபடை வீட்டில் அமர்ந்தவனே" (வர்க்கவெண்பா. -18-).

"ஆறு திருப்பதிகண் டாறெழுத்தும்"[1] என்றே சாற்றுகின்றார். ஆகலின், திருமுருகாற்றுப் படையிற் சொல்லப்பட்ட 'ஆற்றுப்படை வீடு' என்பதே 'ஆறுபடைவீடு' என மருவிற்று எனக்கொள்ளுதலே பொருத்தம்.[2]

இவ்வெண்பாக்கள் முருகனிடம் தனது குறைகளை, ஏழ்மையைச் சொல்லி இறைஞ்சிப் பாடப்பெற்றவையாம். படிப்பார் மனம் கரையும்படி உள்ளன. வடலூர் வள்ளலார் போன்று மரணமில்லாப் பெருவாழ்வு இவரது பக்தி நெறியாகும். "பிறவி அருகா வகை செய்தே தாள்தா!" எனக் கூறுதலால் இதனையறியலாம். "நன்றாக வாழ்ந்தோர் கெடுகின்றனர்; கேடுகெட்டவர்கள் நன்றாக வாழ்கிறார்கள். இதற்கெல்லாம் என்ன காரணம்?" எனச் சில வெண்பாக்களில் இவர் பாடிவிட்டு, ஒரு வெண்பாவில் அதற்கு விடையும் பகர்கிறார். அஃதாவது, "முருகனடியார் தாழினும், அவர்க்குப் பூவுலகு கிட்டும்! நரகுலகு கிட்டாது. இச்செல்வம் போதாதா?" என்பதே ,அவர் விடை. இதேபோன்று பண்டம் குறைய விற்கும் பாவிகளையும் சுவைபடச் சாடுகிறார் இவர். எனவே, வர்க்கவெண்பா நெக்குருகிப் பாடப்பெறும் பக்தி நூலாகவும், நீதிமொழிகள் நல்கும் நீதிநூலாகவும் திகழ்கின்றது என்பது போதரும்.

இத்தகு சுவைகள் நிரம்பிய இவரின் வெண்பாக்கள் சொற்சுவையும், பல முன்கதைகளை இயம்பும் கதைச்சுவையும், ஓசைநயமும் ஒருங்கே அமையப்பெற்றன.

"காவில் தினைப்புனத்தை(க்) காவல்புரி மின்னாளை
வேவிச் சுகமடைந்த மேலோனே!-நாவிற்
கினியராய்குன் றாக்குடிவா ழென்கோவே யென்னைக்
கனிவாய்ப்பார் நின்றாள் கதி![3]

எனும் வெண்பா மேலைக்கருத்தினுக்குச் சான்றாம்.

---

1. கந்தர் கலிவெண்பா. 109.

2. வ. சு. செல்வக்கேசவராய முதலியார். கலைக்களஞ்சியம். தொகுதி. 8 பக். 439.

3. வர்க்கவெண்பா. 15.

சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்திலுள்ள ஓலைச்சுவடியினின்று[1] பதிப்பிக்கப்பெறும் இந்நூல் இதுவரை பதிப்பிக்கப் பெறாததாம். படிப்பார் எளிமைக்காக உள் தலைப்புக்கள், பதிப்பாசிரியரால் இடப்பெற்றன.

செந்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் முருகனைத் துதிக்கும் இந்நூல் வண்டமிழ் இலக்கியத்தை வளப்படுத்தும் நற்றமிழ் நூல் என்பதில் ஐயமில்லை.

எஸ். செளந்தரபாண்டியன்.

1. சென்னை அரசினர் கீழ்த்திசைச்சுவடிகள், நூலகம். ஓலைச் சுவடி எண். R. 4981.

# வர்க்க வெண்பா

கவி

மாதுதெய்வ குஞ்சரியாள் கேள்வன் றாளை
மறவாத சிந்தையுளோன் வனசமாதைச்[1]
சாதுரிய மாய்த்துதிக்கச் சணநீங் காமற்
சார்ந்திருப்ப ளவனுயர்ச்சிசாற் றப்போமோ ?
ஓதுகலை வாணியைத்தன் நாவிற் கொண்டே
யுரைத்திடுவோன் கவியதனை யோதினாக்கால்,
தீதுபடா தென்னாளும் வாழ்வார் பூவில்
திங்களும் மாரிபெய்யும் தேர்ச்சியாமே ! I

வெண்பா

துன்பங்களைக்களைந்து துணையாயிருக்க இறைஞ்சுதல்

அன்ப னுமையடுத்தே னாள்வாய் முருகேசா
துன்பங் களைவாய் துணையாவாய்—இன்பந்
தருவாய் முடிவில்இரு தாளை யெனக்குத்
தருவாய் குருவான தால் II

காப்பு

வர்க்கவெண்பா வொன்றை (வ)முத்த மனமுவந்தேன்
நற்கவிய தாய்முடிய நாவினில்—முற்கதையை
மேருமலை யிற்பொறித்த வேள்முகா மெய்மகி(ழ்)ந்து
கூறுகென நின்றருளிங் கு III

முருகர் துதி கவி

(ச)ரணஞ் சரணமென்று சாற்றுவே னெந்தன்
(ம)ரணபரி யந்த[2]ம் மறவேன் !—அரணாகக்
காரு மடியேனைக் கண்ணுண்டா யெப்போதும்
பாருஞ் சரவண பவா ! IV

---

1. வனசம் - தாமரை. வனசமாதை - சரஸ்வதியை.

2. மரணபரியந்தம் - மரணம் கிட்டும் வரையிலும்.

ஒன்செயலால் வாழ்வதல்லா லோகோ முருகேசா
யென்செயலால் வாழ்வதென்றே யெண்ணுகிலேன்—
முன்செயலை[1]
யானறியே னீயறிவா யாதிப் பழம்பொருளே,
வானவர் கோ[2]வேமுன் வா ! V

மால்மருகா[3] குன்றை மலைக்குமரா வென்றசொல்லைக்
கால்நா ழியுமறவேன் கண்மணியை—மாலாக
யெந்தக் கவியை யெடுத்தாலென் முன்னர்வருங்
கந்தன்சே வற்றுவசன்[4] காண் ! IV

**'உலகைப் பவனிவந்த தீரா, எனை ஆள்'!**

அன்பர் பணியும் நடரா சரின்பாலா!
யின்பசுகந் தாமுருகா யெந்தனுக்கு! - முன்பொருகாற்
நாரதர் வுந்ததரை நாணப் பவனிசெய்த[5]
தீரனெனை ஆள்வீர் தினம் 1

**வேறு கதியில்லை நீயே ஆதரி!**

ஆறுமுகா[6] வேறுகெதி யாருமில்லை பாருமெனை
மாறுபடா மற்காப்பீர் மாளுவரை - நீறுபட
வெந்தாலு நின்பதமே வேண்டினேன் வேலவனீ
தந்தா தரியெந்த னை 2

**"சூரனை வதைத்தோனே எனை ஆள்!"**

இன்றிருப்போம் நாளை பிறப்போமென் றெண்ணுதற்கு
ஒன்றறியேன் ஞானவழி உம்மையல்லால் - வென்றிமயில்

---

1. முன் செயலை - முன்பிறப்பு பற்றிய செயல்களை.
2. வானவர்கோ - முருகன்.
3. "செங்கட் கருமுகில் மருகா" என்பார் அருணகிரியாரும் (திருப்புகழ்).
4. சேவற்றுவசன் - சேவற்கொடியோன்; முருகன்.
"புகரில் சேவலங் கொடியன்" என்றார் நக்கீரர்
5. முன்பொருகால் நாரதர் கனிகொண்டு வந்து தர, அதனைப் பெறுவதற்காக முருகனும் பிள்ளையாரும் "யார் உலகத்தை முதலிற் சுற்றி வருகிறார்களோ அவர்க்கே கனி" என்ற போட்டிக்காக வலம் வந்த புராணம் ஈண்டு கருதத்தகும்.
6. ஆறுமுகன் - முருகன். "மூவிரு முகனு முறைநவின் றொழுகலின்" என்றார் நக்கீரர் (திருமுரு காற்றுப்படை: 103).

வீரனே சூருடலம்[1] வேறுகூ றாக்கிவிட்ட
தீரனே யாள்வீர் தினம்! 3

### வறுமையாளன் எப்படி ஈவேன்?

ஈய்கை[2] பெரிதென் றிசைத்தாரீ சன்பாலர்
மாய்கைதருஞ்[3] சொத்திருந்தால் மானுமே[4]-காயம்[5]
மெடுத்தும் வறுமை யெயிதியே வாழ்ந்தாற்,
கொடுத்திடுவ தெந்தவிதங்? கூறு! 4

### சீவனுள்ளவரை செம்மைப்பட ஆளப்பா!

உம்மைத் துதிப்பேன்; உனதிருதா ளைப்பணிவே(ன்);
செம்மைபட வாண்டருள்என் சீவவரை! - மும்மை
வினையிருந்தா லும்போக்கி, வீடுதர மேலாம்
மனையிருக்கக் கொண்டேன் மனம்! 5

ஊன்கொடுத்து ... வறுமையோட்டி ...
வீண் ... பாயே ஏன்பிறக்க வேணும்யான்?...
காட்சியெல்லாங் கண்டுவிட்டேன் சாந்தாகரு...
தாட்சியின்றிப்[7] பாரென் தனை 6

எந்நாளு நின்றா ளிறஞ்சுவே னென்றாயே
கண்ணா லெனைப்பாருங் சந்தகுகா! - தண்ணார்
மதிமுடியார்க் கோதுசுப்ர மண்யமே யென்று
மதி(க)திதா நன்மார்(க்)க மாய்! 7

ஏடுபுண் ணாக்க கவிதையேவ ரைந்தேனி...
பாடுதெரி விருதவி பண்ணுவீர் - ஆடும்...
வீரனே குன்றைவரை வேலனே விண்முழுதா...
வீரசம்மா பத்துரையே சொல்! 8

---

1. சூரனை வதைத்தது ஈண்டு குறிக்கப்பெறுகிறது.
''சூர்முதல் தடிந்த சுடரிலை நெடுவேல்'' (திருமுரு: 46)
என்ற நக்கீரர் வாக்கு காணத்தகும்.
2. ஈகை.
3. மாயை தரும்; பொய்த்தோற்றத்தைத் தரும்.
4. இயலுமே.
5. உடல்.
6. ஓலைச்சுவடியில் இப்பாடல் மிகவும் சிதிலமாகிக் காணப்படுகிறது.
7. தாமதமின்றி.

### "மாறிப் பிறவாது காப்பாயாக!"

*ஐந்தெழுத்தைச் சிந்தையுற்றேன் ஐந்துமுகத் தார்[1]புதல்வா!*
*செந்தமிழால் நின்கீர்த்தி செப்பிடுவேன் - பைந்தொடியா(ர்)*
*மையல்வலைக் கட்டறுத்து[2] மாறிப் பிறவாமல்*
*துய்யநின் றாள்தா சுகம்!* 9

### உனதடிமையைத் தாழவிடலாமா?

*ஒன்னடுமை[3] யானென் றுலகமதிற் பேராயும்*
*யின்(ன)ல் வருத்துதே யென்செய்கேன் — வன்மயிலே!*
*ஆளனே! தெய்வானை யன்பனே! ஆறுமுகா!*
*தாழவிடா தேசெல்வந் தா!* 10

### நல்லியலாக் காக்கவேண்டும் கடவுளே

*ஓகோகார்[4] கந்தனென்றே ஓதுதே யெந்தனா*
*வாகோநீர் தேடா வகையாமா?—பாகார்ந்த*
*சொல்லிதெய்வ குஞ்சரியாள்[5] தோள்சேர் சுகலீலா,*
*நல்லியலாய்க் காத்திடுயின் னாள்!* 11

*ஔவியல்[6] நெஞ்சத் தறிவை யுணர்த்திடுவீர்;*
*செவ்வியோய்! குன்றைவரைச் செவ்வேளே! -......*
*லொன்றாக வேசெனித்தீ ரோங்கசுரா ளைக்கடிந்தீர்[7]*
*என்றாயே[8] காப்பீ ரினி!* 12

---

1. ஐந்து முகத்தார் - சிவனார். ஒருமுறை சிவன், ஆறுமுகங்களையுடை முருகனுக்கு, ஆறுமுகங்களிலும் ஒரே சமயத்தில் முத்தம் கொடுக்க விழைந்தான். அவனுக்கோ ஐந்து முகங்களே! என்ன செய்வான்? உடனே, பார்வதியை அழைத்து அவளும் அவனுமாகச் சேர்ந்து ஆறுமுகங்களுக்கும் ஒரே நேரத்தில் முத்தமிட்டனர் என்று ஒரு கதை உளது.

2. "கால்காட்டிக் கைகாட்டிக் கண்கள்முகந் தான்காட்டி
மால்காட்டும் மங்கயரை மறந்திருப்ப தெக்காலம்?"
எனும் பத்திரகிரியாரின் (எக்காலக்கண்ணி: 11) கருத்து இங்கு நினைதல் தகும்.

3. உனதடிமை.

4. கார் - காப்பாயாக.

5. குஞ்சரியாள் - தெய்வயானை.

6. ஔவியல் நெஞ்சத்து - பொறாமை கொண்ட நெஞ்சத்திற்கு.

7. "மாறுபடு சூரரைவ தைத்தமுக மொன்றே!" எனும்பழம் துதிப்பாடல் கண்டு நினைந்து மகிழத்தகும்.

8. என்+தாயே எனப்பிரிக்க.

### பொருளின் அளவு குன்றி, விலை கூடிவிட்டதே

அக்கஞ் சுருக்கேலென் றேயறைந்தா ளேயவ்வை[1]
மிக்க விலைசுருங்கி விட்டதுவே!-தக்கோனே
ஆறுபடை (வீ)ட்டில் அமர்ந்தவனே[2], யாறுமுகா,[3]
கூறுவிலை மேலாக்கிங் கு 13

### நாயடியேனுக்கு நின்தாளே கதி!

கற்றதனா லேயறிந்தேன் கர்த்த னெனத்தெரிந்தேன்
நற்றவஞ்செய் தேனிலேன் நாயடியேன்[4] - சொற்றவறேன்
யேதாமோ யிவ்வுயிர்தா னெந்தாய் முருகேசா
நீதாதா வென்பே னிதம். 14

காவில் தினைப்புனத்தை(க்) காவபுரி மின்னாளை[5]
மேவிச் சுகமடைந்த மேலோனே!-நாவிற்
கினியாய்குன் றாக்குடிவா ழென்கோவே யென்னைக்
கனிவாய்ப்பார் நின்றாள் கதி! 15

---

1. ''அஃகஞ் சுருக்கேல்'' (ஆத்திச்சூடி, 13) எனும் ஔவை வாக்கு அறியத் தகும்.

2. ''ஆறு திருப்பதிகண் டாறெழுத்தும் அன்பினுடன்
கூறுமவர் சிந்தைகுடி கொண்டோனே''—
எனக் குமரகுருபரர் (கந்தர் கலிவெண்பா 109) கூறுவதால், முருகன் ஆறு தலங்களில் வீற்றிருத்தல் தெளிவாம்.

3. ''அஞ்சு முகம்தோன்றில் ஆறு முகம்தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும் - நெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலும் தோன்றும்
முருகாவென் றோதுவார் முன்'' எனும் பழம் பாடல் இங்கு நினைத்தின்புறத்தக்கது.

4. ''நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற்சிறந்த தயாவான தத்துவனே!''
(திருவாசகம், சிவபுராணம் 60) என்று மணிவாசகர் கூறலாலும், 'நாயடியேன்' எனக் கவிஞர்கூறும் உளப்பாங்கு தெளியப்பெறும்.

5. வள்ளியை. ''வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே'' எனும் பழம்பாடலை அறியலாம்.

### கந்தனருளால் மோட்சம் கிட்டும்

கிட்டுமே கந்தர் கிருபைசெய்வா ரென்றிருந்தால்
யெட்டுமே மோட்சம் யியல்பாக - மட்டடங்கா
வந்தெதிர்த்த சூர்படையை மாளவொரு கைவேலால்
அந்தோ வதைத்தா[1] ரருள்! 16

### ஆற்றுப்படை பிள்ளைத்தமிழ்போல் என் கவியையும் வளர்க்க!

கீரனைமுன் னாள்அடைத்தே கேட்டார்ஆற் றுப்படையை[2]
மாரனை[3]நேர் கந்தன் வருகவென்றே - தீரமதாய்ச்
செய்தபிள் ளைக்கவிக்கிச் சிங்கார மாய்நடித்தாய்[4]
வையத்தி லென்கவிமுன் வா! 17

### அனைவருக்கும் அருளப்பா!

குற்றங் களைவீர், குறையா நிதிதருவீர்
சுற்றஞ்[5] சுதர்க்குச்[6] சுகந்தருவீர் - நற்றமிழாய்[7]
கூருமடி யேற்குக்[8] கொடுப்பீ ரிருதாளை;
ஆருமிலேன்[9] கந்தா அருள்! 18

---

1. "சோரநிட் டூரனைச் சூரனைக்
காருடல் சோரி கக்கக்
கூரகட் டாரியிட் டோரிமைப்
போதினிற் கொன்றவனே !" (கந்தர் அலங்காரம். 4)

என அருணகிரிநாதர் பாடுவதையும் காணலாம்.

2. கீரனை அடைத்து ஆற்றுப்படை கேட்டது:
நக்கீரர் இமயமலையை அடையும் வழியிலே ஓரிடத்தில் தியானம் செய்தார். அப்போது, ஆலிலை ஒன்று பாதி நீரிலும் பாதி கரையிலுமாக விழ, நீரில் விழுந்த பகுதி மீனும், கரையில் விழுந்த பகுதி பறவையுமாகி, மீன் நீருக்கும் பறவை கரைக்குமாக இழுத்தன. இவ்வதிசயத்தைக் கண்ட நக்கீரர், தியான நிலை தவறினார். அச்சமயத்தை எதிர்நோக்கியிருந்த பூதம் அவரைச் சிறையிலடைத்தது. சிறையிலிருந்த மற்ற 999 பேரும் உய்ய, அஞ்ஞான்று நக்கீரர் பாடியதே 'திருமுருகாற்றுப்படை' என ஒரு கதை வழங்கிவருகிறது.

3. மாரன் - காமன்.

4. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழாயிருக்கலாம். முருகன் பூசாரி வேடமிட்டு வந்து, குமரகுருபரர்க்குத் திருநீரளித்து, பிள்ளைத்தமிழ் பாடும் படிக் கேட்டதாகக் கதையுளது.

5. சுற்றம் - உறவினர்.

6. சுதர் - மகன்.

7. நற்றமிழை ஆயும் புலவனாம் எனக்கு.

8. உனை நெஞ்சிற்கொண்டிருக்கும் அடியவனாம் எனக்கு.

9. யாருமில்லாதவன்.

### பழிசெய்வோர் வாழ்வது, வணங்குவோர் காய்வதா?

*கூட்டிற் பறவைதனைக் கொண்டடைத்தோ, ரூன்பொசித்தோர்[1]*
*நாட்டிற் சிலாக்கியவா னாவ[2]தென்ன? - தாட்டிகமாங்[3]*
*கந்தா! முருகா! கடம்பாயென் பார்க[ள்]தினஞ்*
*சிந்தாகு லப்படலென் செப்பு!* **19**

### வாழ்ந்தோர் கெடுவதென்ன?...

*கெண்ணிதையாய்[4] வாழ்ந்தவர்கள் கெட்டலைந்து போவதென்ன ?*
*புண்ணியமி லாதோர் பொலிவென்ன?—எண்ணிலிது*
*ஊழ்வினையா? கந்தரென் றேயுன்னாத்[5] தன்மையா?*
*பாழ்மனதுக் கோது பரிந்து !* **20**

### ...கெட்டாலும் மேலுலகு கிட்டுமே!

*கேளாய், மடநெஞ்சே! கெட்டலைந்தே போனாலும்,*
*ஆளாவாய் குன்றை[6]முரு கையரெனிற்—மீளா*
*நரகிலணு காய்கந்தன் நற்றா ளடைவாய் !*
*திரமிதுவே நன்றாய்த் தெளி !* **21**

---

1. ஊண் பொசித்தோர் என்றே ஓலையிலுளது. ஊன் பொசித்தோர் - மாமிசம் உண்டோர்.
2. சிலாக்கியவான் - புகழுடையவன்.
3. தாட்டிகம் - வலிமை; வலிமைமிகு உன்னையே துதிப்பவர்கள் வருந்துவதென்ன ? சிந்தாகுலம் - மனக்கவலை.
4. மேன்மையாய்.
5. உன்னுதல் - நினைத்தல், உருகுதல்.
6. "இக் குன்றக்குடியின் வேறு பெயர்கள்: மயூர நகரம், அரசவனம், கிருஷ்ண நகரம், மயில் மாலை என்பன." — (Tamilnadu District Gazetteers, Ramanathapuram (1972) - p. 905.

### இச்சென்மம்நீக்கி, இருதாளைத்தா!

*கைப்பா[1]மில் வாழ்விற் கவலையே யல்லாமல்,*
*மெய்ப்பாஞ் சுகமறியேன், வேல்முருகா!-பொய்ப்பான*
*யிச்சென்ம நீக்கி யிருதா ளெனக்களித்து*
*முச்சென்மத் தீங்கை முனி.[2]* 22

### வாளாவிருப்பதேன், கந்தா?

*கொண்டிருக்கும் ஆசைசொல்லக் கூடுமோ? கூடாதோ!*
*கண்டிருந்து மேதளித்தீர் கந்தையா?-உண்டிருக்க*
*மாட்டேனின் சீரடிக்கே மாண்டு வருமளவும்*
*போட்டேன் பழிசுமரும் போம்!* 23

### திசைமாறிய என்னை, உன்வசம் சேர்!

*கோதையர்கள் மேலாசை கொண்டேன், அறியாமல்!*
*வாதையல்லால், மோக்ஷவழி யி(ல்)லையே![3] - பாதை*
*தவறினே னாகிலும், நின்றாள்சே ருங்கந்தா,*
*சிவனாம முச்சரிக்குஞ் சேய்!* 24

### அனைவர்க்கும் செல்வம் கிடைக்க வேண்டும்!

*கௌவைசொல்லி[4] வாழும் கசடர்க்குக் காலமிது!*
*செவ்வையுள்ளா ரெல்லார்க்குஞ் சீர்குறைவு - தௌவை[5]*
*அகல, கிறுபை அருள்வாய் முருகேசா!*
*சகலர்க்குஞ்[6] செல்விவரச் சாற்று!* 25

---

1. கைப்பு - கசப்பு, வெறுப்பு.
2. ''ஊழ்வினையை மாற்றி உலவாத பேரின்ப
வாழ்வுதருஞ் செய்ய மலர்முகமும்'' (கந்தர் கலி வெண்பா. 43)
எனக் குமரகுருபரர் முருகனாற்றல் குறித்துப் பாடுவதுபோன்றே, இவரும் முன் ஜென்ம வினையைத் தீர்க்கப் பாடுகிறார்.
3. ''வடுப்படுந் தொண்டையாலும்
விரைத்திடுங் கொண்டையாலும்
மருட்டிடுஞ் சிந்தைமாதர் வசமாகிப்'' போன எனக்கு உன் தாள் தா என அருணகிரியார் (திருப்புகழ்: 12) இறைஞ்சுவதை ஒப்பு நோக்கலாம்.
4. கௌவை - பழிச் சொல்.
5. தௌவை - மூதேவி.
6. அனைவருக்கும்.

### அவனது ஐந்து நாமங்களும் எனக்கு ஐஞ்சுவைகள்!

சக்கரைதே னோடாகச் சார்பான முக்கனியும்[1]
அக்கரையாய்ச் சேர்க்கில் ருசி(யது)போல்—எக்காலுங்
கந்தன் குகன்[2]கடம்பன் கார்த்திகே யன்[3]முருகன்
ஐந்தாம் ருசியெனக்கே யாம்[4]! 26

### வண்டமிழால் வழுத்துவேன், வாழ்வு தா!

சாற்றுவே னித்தந் தமிழொன்றைச் சண்முகர்மே(ல்)
ஒற்றுவேன் நாவுக் கினிதாக—மாற்றுயர்ந்த
தங்கமே குன்றைநின்ற தற்பரனே[5] சூர்தடிந்த[6]
சிங்கமே தானீ[7] செயம்! 27

### மயில்வாகனனே, என்முன்வருக!

சிந்தா குலமகலுஞ்[8] சித்ரமயில் வேலரென்றால்
நந்தாது கல்வியும் நல்குமே—யெந்தாயாஞ்
சங்கரிய(ாள்)[9] கண்மணியே சங்கரனார்(க்) குங்குருவே[10]
மங்கையர் மோகாமுன் வா! 28

---

1. முக்கனி - மா, பலா, வாழை.

2. குகன் - முருகன்; அடியார் மனக்குகையில் உறைவதால், முருகனுக்கு இப்பெயர் வந்ததென்ப.

''கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே!'' என்பார் அருணகிரியார் (கந்தர் அனுபூதி. 51)

3. ஆறு கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப் பெற்றவன் ஆதலால் கார்த்திகேயன்.

4. 'யாஞ்' என்றே ஓலையில் வெண்பா முடிகிறது.

5. தற்பரன் - கடவுள், பரம்பொருள்.

6. சூர்தடிந்த - சூரனைக் கொன்ற.

7. தான்+நீ எனப்பிரிக்க. தான்+ஈ, எனப் பிரித்து, 'ஈ செயம், வெற்றிதா! எனவுங் கூட்டலாம்.

8. அகலும் - நீக்கும். சிந்தாகுலம் அகலும்-மனக்கவலை நீக்கும்.

''சிந்தாகுலமுற்றென்னோ வென்னை வாட்டத்திருத்துவதே?'' (திருக்கோவை. 12).

9. சங்கரியாள் - பார்வதி.

10. சங்கரனார் - சிவன்; பிரணவப் பொருளைச் சங்கரனுக்கு ஓதியதால் சங்கரனார்க்குங் குருவானார் முருகன்.

''பொன்னங் கடுக்கைப் புரிசடையோன் போற்றிசைப்ப
முன்னம் பிரம மொழிந்தோனே!'' (கந்தர் கலிவெண்பா. 93)

என்பார் குமரகுருபரர்.

### என்னைக் காப்பாயாக!

சீவனுடன் முத்திநெறி சென்றாரின் னூலறிந்தே
ஆவலுடன் யான்றொண்டன் ஆகினேன்—சேவலா[1]
பார்ப்பீர் எனதுமுகம்' பன்னிரு கண்ணருளால்!
காற்பீர் சரணமுரு கா! 29

### காக்குத்தன் மருகனே வாக்குத்தா!

சுப்ரமண்ய[2] மென்றே துதிக்கச் சுகந்தருவார் !
யெப்பிறப்பா னாலு(ம்)நினை யேற்றுதற்கே — இப்பிறப்பில்,
வாக்குத்தா, கந்தா! வராகவதா ர(ம்)மெடுத்த
காக்குத்தன் சொந்தமரு கா ![3] 30

### எப்போதுதான் காப்பீர்?

சூரசம்மா ரத்துரை[4]நீ ! சுப்ரமண்ய மெய்ப்பொருணீ !
பாரவடி வே(ல்தா)னீ! பாவ(ல)[5]நீ ! — தீரனென்றே,
யெக்காலு நின்றாளை யென்னறிவிற் கொண்டிருப்ப
யெக்காலங் காப்பீர் ? இயம்பு ! 31

### செல்வம் வேண்டாம், சீரடியே வேண்டும்!

செட்டி[6]யென்றும் பேர்படைத்தீர், சேவற் கொடிபிடித்தீர்
அட்டி[7]பண்ண லாகாதே, யன்பனுக்கே!—மட்டில்[8]லாச்
செல்வந்தான் அல்லால்நின் சீரடியிற் சேர்த்துக்கோ,
கல்மனதா? சொல்லுமுரு கா! 32

---

1. சேவற்கொடியோனே.

2. சுப்ரமண்யம் - முருகன். எங்கும் நிறைந்த ஒளியே முருகனாதலின், சுப்ரமண்யன் என்ற பேர் வந்தது.

3. நாராயணனின் அவதாரங்களில் பன்றி(வராகம்)யும் ஒன்று. அந்த வராக அவதாரமெடுத்த நாராயணனின் மருமகன், முருகன்.

4. சூரனை வதைத்த அரசன் நீ.

5. ''நூலறி புலவ!'' (திருமுருகாற்றுப்படை. 261) என்றும், ''பலர் புகழ் நன்மொழிப் புலவரேறே!'' (268) என்றும் நக்கீரர் பாடுவதனாலறியலாம்.

6. செட்டி - முருகருக்குரிய பல பெயர்களில் ஒன்று. வள்ளியை மணப்பதற்காக, வள்ளிமலைக்கு வந்து முருகன் நிகழ்த்திய பல திருவிளையாடல்களில் வளையல் விற்கும் செட்டிவேடமும் ஒன்று. ஆதலின் முருகனுக்குச் 'செட்டி' என்று ஒரு பெயர் அமைந்தது.

''செட்டியென்று சிவகாமி தன்பதியில்'' (திருப்புகழ். 558)
என்பார் அருணகிரியார்.

7. அட்டி பண்ணுதல் - தடைபண்ணுதல்.

8. மட்டில்லா - அளவில்லா.

### வள்ளிமணவாளா, தினமும் காப்பாயாக!

*சேவற் கொடிபிடித்தீர், சித்ரமயில் மேல்நடித்தீர்,*
*ஆவற் படி[1] கொடுத்தீர், அன்பருக்கே!—காவல்*
*தொழில்புரிந்த[2] வள்ளியிளந் தோகைமண வாளா[3]*
*தெளிவுபெறக் காத்தான்[4] தினம்!* 33

### என்றும் நீயே துணை, என் முன் வா!

*சையோத்தி[5] யாய்வாழ்ந்தார், சாவாரோ? சாகாரோ?*
*மெய்யான மோக்ஷமுண்டோ? மேவாரோ?—பொய்யான*
*காயமி[6] றந் தாலுநின்னைக் கைவிடே னின்கழல்சேர்*
*மாயன் மருகா,[7] முன் வா!* 34

### இப்பாடல்களைப் படிப்போர் உனையடைவர்

*சொர்(க்)கமத்ய, பாதாளத் துள்ளார் துயரகல,*
*வர்(க்)கவெண்பா வொன்றை வழுத்தினேன்!—நற்குன்றைக்*
*கந்தன்[8], குகன், கடம்பன், காங்கேயன்[9], ஞானசம்*
*பந்தன், பதஞ்சேர்வர்[10] பார்!* 35

---

1. ஆவற்படி - ஆவலின்படி.

2. வள்ளிநாயகி தினைக்காட்டைக் காவல் புரிந்துலந்தாள். அச்செயலே ஈண்டுச் சுட்டப்பெறுகிறது.

3. முருகன் வள்ளிமணவாளன் என்பதை மிகச்சிறப்பாக நக்கீரர் பாடுகிறார். "ஒருமுகம்
குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே!" (திருமுரு. 100-102)

4. காத்து+ஆன் எனப் பொருள் கொள்க.

5. சையோத்தியாய் வாழ்வது - சிறப்பாக வாழ்வது.

6. பொய்யான காயம் - பொய்யான உடம்பு.
"நீர்மேற் குமிழிபோல் நிலையற்ற காயமிதைத்
தாரகமென் றெண்ணிநான் தட்டழிந்தேன்! (பூரணமாலை: 87) என்பார் பட்டினத்தார்.

7. மாயன் மருகன் - நாராயணன் மருமகன், முருகன்.

8. கந்தன் - ஆறு குழந்தைகளை ஒன்றாகச் சேர்த்தணைத்தாள் பார்வதி. அப்போது உருவான முருகன், கந்தன் என்ற பேர்பெற்றான்.

9. காங்கேயன் - கங்கையில் முருகன் வளர்ந்த காரணத்தால் காங்கேயன் எனப் பேர்பெற்றான்.

10. பதஞ்சேர்வர் - தாள் சேர்வார்கள்.

### மோகவலைதீர் ! அருள் தா !

சோகந்[1] தவிர்த்தெனையாள் சுப்ரமண்ய மெய்ப்பொருளே,
மோகவலை[2] தீர்த்திடயென் முன்னேவா !—வாகைபுனை
தோழா, குறிஞ்சித் துரையே[3], சுகலீலா
தாளா தருலென்றுந் தா ! 36

### ஒளவையால் தெளிந்தேன்! அருள்செய்!

சௌவாரி[4] செய்தீர் தகர்[5]மீதிற் சண்முகரே
செவ்வாய் மொழியாரைச் சேர்ந்திட்டீர் – அவ்வை
மொழிந்தாள்[6] கல்விசெய்யு முத்தைய ரென்றே
தெளிந்தேன் அருள்செய் தினம் ! 37

### குற்றேவல் தொண்டனுக்குச் சுகம்தா!

ஞானவழி யுந்தெரியே னாதா[7] சரவணா[8]!
கானக் குறமின்[9]மேற் காதலாய்!—ஆனந்தங்
கொண்டனைந்த குன்றைக் குமரேசா,[10]குற்றேவல்
தொண்டனையா, நீதா சுகம்! 38

---

1. சோகம் - வருத்தம்.

2. மோகவலை - பொருள்கள் மீது பேரவாக் கொள்ளும் தன்மை.

3. குறிஞ்சித் துரை - குறிஞ்சித் தலைவன்.

''விரும்பிக் கழலழக் குன்றழச் சூரழ விம்மியழுங்
குருந்தைக் குறிஞ்சிக் கிழவனென் றோதுங் குவலயமே!''
(கந்தரலங்காரம். 5)

என்பார் அருணகிரியார் (கி. பி. 15)

4. சௌவாரி - சவாரி - குதிரை, வண்டி முதலியன மீது செல்லுகை.

5. தகர் - ஆடு. நாரதர் யாகத்தினின்று வெளிவந்த கடாவை அடக்கியவர் முருகர். தகர் - யானை எனக்கொள்ளின் முருகன் வாகனமாம் யானை மீது இவர்ந்ததைக் கோடலாம்.

6. அவ்வை மொழிந்தாள் : ''அரியது கேட்கின் வரிவடி வேலாய்'' எனும் தனிப்பாடலில், வானவர் நாடு வழி திறந்திடுவதற்கு அடிப்படையாகக் கல்வியும் ஞானமும் பெறவேண்டும் எனப் பகன்றுள்ளார் ஒளவையார். அதனையே இங்குக் குறித்த கவிஞர், ''அத்தகு ஞானமெல்லாம் இல்லாத எனக்கு, நீயே அருள் செய்ய வேண்டும்'' எனப் பாடுகிறார்.

7. நாதா - கடவுளே.

8. சரவணா - சரவணப் பொய்கையில் பிறந்ததனால், முருகன் சரவணன் எனப்படுகிறான்.

9. குறமின் - வள்ளி.

10. குன்றக்குடி மலையில் கொலுவீற்றிருக்கும் குமரனே!

### மலையாது, மகிழ்ந்து, அருள்செய்க!

*ஞெகிழாது நெஞ்சு நினைப்பன் முருகேசா,*
*மகிழா திருப்பதென்ன மாண்போ?[1]—முகிழாம்[2]*
*முலைமாதர்க் காசைதந்த முத்தையா வென்சித்தம்*
*மலையாதே யென்றுரைசெய் வாய்!* 39

### பட்டதெல்லாம் போதாதா, முருகா?

*தக்கபடி செல்வந் தருவாய் முருகேசா,*
*கக்கிச[3]மாய் வாழ்வதாற் கார(ணமென்)?—முக்கியமாய்*
*பட்டநாட் போதும், படக்கூடா தென்னாலே,*
*கட்ட[4]மதைப் போக்கியெனைக் கார்!* 40

### மயிலும் அயிலுமாக வந்து காப்பாயாக!

*தாயுநீ! தந்தையுநீ! தாபரிக்குந்[5] தெய்வநீ!*
*ஆயுங் கலைமுதல்வ னாகுநீ!—தூய*
*மயில்மீதி லேறி மரணாந்த முன்னே[6]*
*அயிலெடுத்து[7] முன்வந் தருள்!* 41

### தினம் பணிவேனுக்கு மனங் கனியக்கூடாதா?

*தினம்பணிவே னே,பழனிச் சேவகர் தொண்டன்;*
*மனங்கனிய நீர்கிறுபை[8] வைப்பீர்!—அனங்கவேள்[9]*
*வாதிக்கண் பூவில் வருத்துமின்றி யேவாழும்*
*ஆதிப் பொருளே யருள்!* 42

---

1. என்ன மாண்போ? - என்ன பெருமையோ?
2. முகிழ் - அரும்பு.
3. கக்கிசம் - வருத்தம். ''வருத்தமுடன் நான் வாழ்கின்றேன்; அதன் காரணமென்ன?'' என்பதே இவ்வடியின் பொருளாம்.
4. கட்டம் - கஷ்டம்.
5. தாபரிக்கும் - ஆதரிக்கும், காக்கும்.
6. மரணாந்தம்+முன்னே எனப் பிரிக்க. மரணம் வரும் முன்னே எனப் பொருள்படும். ''மரணம் வந்துற்றபோது, என் முன்னே'' எனவும் கோடலாம்'
7. அயில் - வேல்.

''படிக்குந் திருப்புகழ் போற்றுவென்
கூற்றுவன் பாசத்தினாற்
பிடிக்கும் பொழுது வந்தஞ்ச லென்பாய்!'' (கந்தரலங்காரம். 50.)

என்பார் அருணகிரியார்.

8. கிறுபை - கிருபை - கருணை.
9. அனங்கவேள் - கடவுளாகிய குமரன்.

### உனையன்றி வேறில்லை!

*தீராக் கவலைபிணி தீர்ப்பீர்தெண் டாயுதனே[1], 43*
*ஆராய்ந்து பார்க்கிலுமை யன்றியில்லை!—பீராய்ந்து[2]*
*தேடியசொத் தெல்லாமுந் தேவற்சே னாபதி[3]தாள்*
*கூடியதென் நெஞ்சமகிழ் கொண்டு!*

### பிறந்து எய்த்த எனக்கு நின் தாள்தா!

*துக்கக் கடலின் துரும்பலைக்குள் ளாவதுபோல்[4]*
*யெக்காலும் யான்பிறந்தே யெய்த்துவிட்டேன்—முக்காலுந்*
*சண்முகமென் றேநாத் தழும்பாகச் சாற்றுவதால்,*
*தண்முகமாய்[5] நின்றாளைத்[6] தா! 44*

### தூண்டில் மீன்போல் துன்பப்படுகிறேனே கந்தா!

*தூண்டில் இடைப்பட் டுழல்மீன்துன் பம்[7]அவைபோல்,*
*மாண்டிலுந் துன்பமொன்றும் வாராமல்—பாண்டிநா*
*டாளுஞ்[8], செகன்மா தருளுங் குமரேசா,*
*வாழ்வும் பதமருள்செய் வாய்! 45*

### மன்னா! இந்த அடிமையைப் பாரப்பா!

*தென்னவராய் முன்னொருகாற் செங்கோலைக் கைப்பிடித்த*
*மன்னெரும்நீர் அன்பன் மலைக்காமற்—சொன்ன[9]மக*
*மேருவினில் வைப்பெ[10]டுத்து மேன்மைதந்த வேண்முருகா*
*காரும் வழியடுமைகாண்! 46*

---

1. தெண்டாயுதன் - தண்டாயுதன் - முருகன்.
2. சேனாபதி - சூபர சூரபத்மனது தம்பியை வதைக்கத் தேவர்களுக்குச் சேனாதிபதியாகச் சென்றதால், முருகன் 'சேனாபதி' என்ற பேர் பெற்றான்.
3. பீராய்ந்து - சிறிது சிறிதாகச் சேர்த்து சென்னையில் இச்சொல் வழக்காற்றில் உளது.
4. துரும்பு துக்கடலின் அலைக்குள்ளாவது போல என மாறிக் கூட்டுக.
5. தண்முகம் - குளிர்ந்த முகம்.
6 நின் + தாள் எனப் பிரிக்க.
7. ஓலையில் 'எவையோ' எனும் சொல்லும் அவ்விடத்தில் எழுதப்பட்டுளது.
8. உக்கிரப்பெருவழுதியாக வந்து பாண்டி நாட்டை ஆண்டவர் முருகர் எனும் கருத்து இங்கு நினையத் தகும்.
9. சொன்னம் - சொர்ணம் - பொன்.
10. வைப்பு - ஊர், இருப்பிடம். ''யானுங் குளனும் வேறுபல் வைப்பும்'' (திருமுரு : 224) என்றார் நக்கீரர்.

### குன்றாக்குடிவாழ் குமரனே, தினமும் காப்பாயாக!

தேரை[1] கடம்பணியு மார்பர், திரண்டகொங்கை
மானார்[2] கலவி மகிழ்வோனே!—ஞானா
கரனேகுன் றாக்குடிவாழ் கந்தனே, யெந்தன்
பரனே[3], தினங்கார் பரிந்து! 47

### நாள் வீண் கழியாமல் நல்கிடப்பா!

தைமாதம் பூசந் தனிலன்ப ரைக்காக்க
மெய்யான பத்தர்கள் மேல்வருவீர்,—பொய்யான
வாழ்வைமதிக் கேன்முருகா, வந்தன் பனையாள்வீர்,
நாள்வீண் கழியாமல் நல்கு! 48

### எப்போதும் உன்னாமந்தான் முருகப்பா!

தொந்தரவேன்? பந்தத் துயரேன்? முருகேசா!
சந்தமுடன் நற்கவியாய்ச் சாற்றலுடன்—அந்திசந்தி
உச்சியினு[4] நின்றாளை யுன்னுவே னென்னுளத்தே
தச்சிருக்கு நின்னாமந் தான்! 49

### நீ உள்ளிருந்தால், எல்லாம் எனக்குண்டு !

தோகைமயி லாளா, துரைமுருகா, சுப்ரமண்யா,
ஓகை[5]யு டனெஞ்சகத்தி னுள்ளிருந்தால்—வாகைபுனை
வீரமுண்டு, செல்வமுண்டு, வெள்ளாண்மை[6] விர்த்தியுண்டு,
சாரமுண்டாம் நற்றாளைத் தா! 50

---

1. தேனார் - தேன் நிறைந்த. "தேனார் பூஞ்சோலைத் திருவேங்கடச் சுனையில்" [குலசேகரர் (கி.பி. 9) பெருமாள் திருமொழி]

2. மானார் - பெண்கள்.

3. பரனே - கடவுளே.

4. அந்தி சந்திஉச்சி - மாலை, காலை, பகல் எப்பொழுதும்.

5. ஓகை - உவகை.

6. வேளாண்மை.

### பரமனுக்கு அருளியவனே, பாதத்தைத் தா!

தௌவித்[1] திரிகாலந் தன்னிலறி யாமையினால்
திவ்யவடி வேற்றுரையைத்[2] தேடிலேன்! — முவ்வரியல்
ஆனார் பரமர்க் கருளினீ ரென்[3]றறிந்தேன்
ஞானா கரந்தான் நவில்! 51

### அன்னம் கொடு ஆறுமுகனே!

நம்பினேன் குன்றைமலை நாதா, சரவணா
வம்பியலேன் துன்பு வருத்தாமற்—கும்பி[4]
குறையாமல், அன்னங் கொடுத்தாள் குகனே!
யிறையோன்[5] மகனே, யினி! 52

### நாடினார்க்கு அருளும் நாதனே, அருள்!

நாடினார்க் கின்பமிக நல்குங்குன் றாக்குடியீர்
வாடினான்[6] துன்படையா வாராகத்—தேடிநிதங்
காற்பதுதா னுந்தன் கடனாமே, கந்தையா!
ஆர்ப்போடு முன்னின் றருள்! 53

### பக்திமான் இல்லை; ஆயின் அனுதினமும் நினைப்பேன்; எனக்கு அருள்செய் குகனே!

நித்தந் துதிப்பேன், நினைப்பணி வேன், மகிழ்ந்தே
சித்தமிரங் கிச்சிலுவை[7] செய்கந்தா! — பத்திமான்
ஆகேன், சிறியேன், அனுதினமு மேநினைப்பேன்,
வாகா வெனையாள வா! 54

---

1. தாவி - குதித்து
2. வடிவேல் + துரையை எனப் பகுக்க.
3. சிவனுக்குப் பிரணவப் பொருளை விளக்கியவர் முருகன். அதனால் 'தகப்பன்சாமி' என்ற பெயரும் அவருக்கு வாய்த்தது என்பர்.
4. கும்பி - வயிறு.
5. சிவன்
6. வாடி + நான் எனப் பிரிக்க.
7. அருள்.

**பொன்மயிலாளன் பதத்தைப்**
**போற்றுவோம் !**

*நீறணிவோன்[1] தந்தசுதர், நித்யவஸ்து, வாங்கடம்பின்*
*றாரணிவோன்[2], குன்றைத் தலத்துறைவோன், - நாரணனார்*
*தன்மருகா! நன்முருகா! தானவரைத் தான்தடிந்த*
*பொன்மயிலா[3] என்பதத்தைப் போற்று!* 55

**துயர் தீரும்படி எனைப்**
**பார்ப்பாயாக !**

*நுண்ணறிவா லாராயில், நுஞ்செயலே யல்லாமல்*
*யெண்ணம(த)ால் ஆவதொன்று மில்லைஅய்யா-விண்ணவரை(க்)*
*காத்தீர், அசுரரைக் கண்டித்தீர், கந்தயெனைப்*
*பார்த்தீர், துயர்போம் படி!* 56

**நகைத்தவர்முன் என்னைக்காத்த**
**கடவுளே!**

*நூர்யாகஞ் செய்துதவ நோற்றாலுந் தோற்றறியாய் !*
*பார்யான் சரவணப வாவென்க - யார்யார்*
*பகைத்தாலும், "அஞ்சாயென் பாலா"வென் றோதி,*
*ந(ை)கத்தார்முன் காத்தாரின் னாள்!* 57

**நான் நொந்து வருந்தாமல்**
**நோக்கப்பா !**

*நெஞ்சார வேதுதிப்பேன், நித்த(ம்) (மற)வாமல்*
*அஞ்சா மனத்தோன்[4] அருள்வே(ண்டித்)—தஞ்சமென்றே*
*வந்தடைந்தா ரைக்காக்கும் வள்ளல் முருகேசா*
*நொந்திடை(ட)ந்து வாடாமல் நோக்கு !* 58

---

1. சிவன்.
2. கடப்ப மலராகிய மாலையணிவதால் முருகனுக்குக் 'கடம்பன்' என்ற பெயர் வாய்த்ததென்ப.
3. பொன் மயில் - உவமைத் தொகை.
4. னத்தோன் எனப்பாடம்.

### என் தாயாகிய முருகனை மதித்து வணங்குவோம்

நேரே யெதிர்சூரை நிர்தூளி[1] யாக்கியுநீர்
பாரே படைத்தோனைப் பண்பளித்தீர்—சீரேர்
புகழோடுங் குன்றைப் பொருப்பு[2]றையென் றாயை[3]
மகிழோடு நித்தம் மதி ! 59

### கண்ணுதலான் மகனே, காப்பாயாக

நைந்துசிந்தை வாடாமல், நல்வசனங் கூறிடவா!
ஐந்தறிவோ டேமனத்தோ டாறறிவுங் - கந்தரென்றே
யெண்ணுவதல் லால்வேறே யெண்ணமிது போல்இல்லைக்
கண்ணுதலாற்[4] தந்தசுதா, கார்! 60

### உன்பதத்தில் எனைச்சேர்க்க அருள்!

நொந்திடைந்து[5] வாழ்வதிலும் நோகாமல் நும்பதத்தில்
வந்தடைய(ப்) புத்தி வருத்துதெனை - பைந்தொடிமார்
மைய[6]வலைக் கட்டறுத்தும் மாறிப் பிறவாம
லைய[7] முருகோனே, அருள்! 61

### வேறு கதி இல்லையப்பா !

நோ(ய)ால், வறுமையால், நொந்துசிந்தை வாடாமல்;
வாயால் துதித்திரந்து வாங்காமல்[8]—ஓயாமற்
சொல்லாம லெந்தன் துயர்களையுஞ், சுப்ரமண்யம்
அல்லாமல், வேறுகெதி யார் ? 62

---

1. நிர்த்தூளி - முழு நாசம். சூரனை அழித்த முருகன்.
''சூர்நவை முருகன்'' (புற : 23) என்றார் கல்லாடனாரும்.
''சூர் மருங் கறுத்த சுடரிலை நெடுவேல்'' (அகம். களிற். 59) என்பார் மருதனிள நாகனார்.
2. பொருப்பு - மலை.
3. யென் + தாயை எனப்பிரிக்க. என்தாயை=முருகனை
4. கண்ணுதலார் - சிவன்; கண்ணுதலார் தந்த சுதன் - முருகன்,
5. இடைந்து - வருந்தி.
6. மையல் வலை.
7. ஐய - ஐயனே - கடவுளே, தலைவனே.
8. இரந்து வாங்குதல்-யாசித்தல்.

### வானவரைக் காத்தவரே அலையவிடாது காப்பீர் !

நௌவி[1] யுமைப்பணிவே னாயேன் முருகேசா !
செவ்விதமாய் ஆண்டருள்செய் சேவகனே—மூவர்முத
லானவரே யென்னை யலையவிடா தாதரிப்பீர்
வானவரைக் காத்தமுதல் வா ! 63

### பிறவாமலிருக்க வேண்டுகிறேனப்பனே !

பண்போடு மன்பர் பணியப் பரமசிவம்
நண்(பே)பாடுந் தந்தகந்த நாதனே! - கண்போதே
கண்டேன் துயரனந்தம்[2] கர்த்தமுரு கேசரென்றே
விண்டே[3] னினிப்பிறவா மே ! 64

### மரணமிலாப் பெருவாழ்வு வேண்டுதல்

பாவனா யறியாக் காலம் பலபகல் கழித்து விட்டேன்,
காலனா ர்[4]ணுகா வண்ணங் காத்தருள் ஞான கந்தா!
ஆலமது வுண்ட கண்டர்[5] அருளிய சேயே யிந்த
ஞாலமீ தருளை நல்கி நல்வழி சேர்ப்பிப் பீரே! 65

யெடுத்தசென்மம் முத்திபெற எந்தாய், முருகா,
அடுத்தேன் தினந்துதித்தே னையா! - தடுத்தென்னை
ஆள்வாய் மறலி[6] அணுகா வகைசெய்தே
தாள்தா நினதடியேன் றான்! 66

முற்றும்

1. நௌவி - நவ்வி-முழுதும் நம்பி.
2. துயர் அனந்தம் - துயர் அளவற்றது.
3. விண்டேன் - கூறினேன்.
4. காலனார் - எமன். ''காலனென்னுங் கண்ணிலி'' (புறநா. 240)
5. ஆலம் உண்டகண்டர் - சிவன். ''விரித்த சடையினன் விண்ணவர்கோன் விடமுண்ட கண்டன்'' என்பது அப்பர் வாக்கு.
6. மறலி - காலன்.

# பாடல் முதற்குறிப்பு அகராதி


| | | பாடல் எண் |
|---|---|---|
| அன்பர் பணியும் | .. | 1 |
| அன்பனுமை யடுத்தே | ... | II |
| ஆறுமுகா வேறுகெதி | ... | 2 |
| இன்றிருப்போம் நாளை | ... | 3 |
| ஈய்கை | ... | 4 |
| உம்மைத் துதிப்பேன் | ... | 5 |
| ஊன்கொடுத்து | ... | 6 |
| எந்நாளு | ... | 7 |
| ஏடு புண்ணாக்க | ... | 8 |
| ஐந்தெழுத்தை | ... | 9 |
| ஒன்செயலால் | ... | V |
| ஒன்னடுமை | ... | 10 |
| ஓகோ கார் | ... | 11 |
| ஔவியல் நெஞ்சத்து | ... | 12 |
| அக்கஞ் சுருக்கேல் | ... | 13 |
| கற்றதனாலே | ... | 14 |
| காவில் தினைப்புனத்தை | ... | 15 |
| கிட்டுமே கந்தர் | ... | 16 |
| கீரனை முன்னாள் | ... | 17 |
| குற்றங்களைவீர் | ... | 18 |
| கூட்டிற் பறவைதனை | ... | 19 |
| கெண்ணிதையாய் | ... | 20 |
| கேளாய் மடநெஞ்சே! | ... | 21 |
| கைப்பாமில் வாழ்வில் | ... | 22 |
| கொண்டிருக்கும் ஆசை | ... | 23 |
| கோதையர்கள் மேலாசை | ... | 24 |

| | | |
|---|---|---|
| கௌவை சொல்லி | ... | 25 |
| சக்கரைதேனோடு | ... | 26 |
| சரணஞ் சரணமென்று | ... | IV |
| சாற்றுவேன் நித்தம் | ... | 27 |
| சிந்தாகுல மகலும் | ... | 28 |
| சீவனுடன் முத்தி | ... | 29 |
| சுப்பிரமண்யமென்றே | ... | 30 |
| சூரசம்மாரத்துரை | ... | 31 |
| செட்டியென்றும் பேர் | ... | 32 |
| சேவற்கொடி | ... | 33 |
| சையோத்தியாய் | ... | 34 |
| சொர்க்கமத்ய | ... | 35 |
| சோகந் தவிர்த்து | ... | 36 |
| சௌவாரி செய்தீர் | ... | 37 |
| ஞானவழி | ... | 38 |
| ஞெகிழாது | ... | 39 |
| தக்கபடி செல்வம் | ... | 40 |
| தாயுநீ | ... | 41 |
| தினம் பணிவேனே | ... | 42 |
| தீராக் கவலை | ... | 43 |
| துக்கக் கடலின் | ... | 44 |
| தூண்டில் இடைப்பட்டு | ... | 45 |
| தென்னவராய் | ... | 46 |
| தேனார்கடம்பு | ... | 47 |
| தை மாதம் | ... | 48 |
| தோகை மயிலாளா! | ... | 50 |
| தௌவித்திரி | ... | 51 |
| நம்பினேன் | ... | 52 |
| நாடினார்க்கு | ... | 53 |
| நித்தந்துதிப்பேன் | ... | 54 |

| | | |
|---|---|---|
| நீறணிவோன் | ... | 55 |
| நுண்ணறிவால் | ... | 56 |
| நூர்யாகம் | ... | 57 |
| நெஞ்சாரவே துதிப்பேன் | ... | 58 |
| நேரேயெதிர் சூரை | ... | 59 |
| நைந்து சிந்தை | ... | 60 |
| நொந்திடைந்து | ... | 61 |
| நோயால் வறுமையால் | ... | 62 |
| நௌவியுமைப் பணிவேன் | ... | 63 |
| பண்போடு | ... | 64 |
| பாலனாயறியாக் காலம் | ... | 65 |
| மாதுதெய்வ குஞ்சரி | ... | I |
| மால்மருகா | ... | VI |
| யெடுத்தசென்மம் | ... | 66 |
| வர்க்கவெண்பா வொன்றை | ... | III |

# அச்சில் வெளிவந்துள்ள அம்மானை நூற்கள்

(ஆ - ஆசிரியர் — ப - பதிப்பித்தவர்.)

| வரிசை எண் | நூலின் பெயர் | வெளிவந்த ஆண்டு | ஆசிரியர் / பதிப்பித்தவர் |
|---|---|---|---|
| 1 | பவளக்கொடி மாலை | 1869 | கருணானந்த சுவாமிகள் & கேசவ முதலியார் |
| 2 | கான்சாயபு சண்டை | 1870 | கந்தசாமி முதலியார் (ப) |
| 3 | பஞ்சபாண்டவர் வனவாசம் | 1870 | புகழேந்திப் புலவர், கந்தசாமி முதலியார் பதிப்பு |
| 4 | ஸ்ரீராமர் சீதாதேவி வனவாசம் | 1871 | கந்தசாமி முதலியார் (ப) |
| 5 | ஹரிஹரபுத்திரரென்னும் ஐயனார் கதை | 1871 | காயற்பட்டணம் ஹைறகுலப்பை |
| 6 | அல்லியரசாணி மாலை | 1872 | புகழேந்திப் புலவர், ஆறுமுக சுவாமிகள் பதிப்பு |
| 7 | அலசம்மானை | 1874 | அருணாசல செட்டியார் (ப) |
| 8 | சீராளன் அம்மானை (சிறுத்தொண்ட பக்தன் கதை) | 1874 | புகழேந்திப் புலவர் (ஆ) |

| | | | |
|---|---|---|---|
| 9 | தேசிங்குராசன் கதை | 1874 | புகழேந்திப் புலவர், நாராயணசாமி நாட்டார் பதிப்பு |
| 10 | பொன்னுருவி மசக்கை(மூன்றாம் பதிப்பு) | 1874 | நாராய்ணசாமி நாட்டார் (ப) |
| 11 | வைகுந்த அம்மானை (மாவிந்தம்) | 1874 | புகழேந்திப் புலவர் (ஆ) |
| 12 | மூவர் அம்மானை | 1874 | கருணானந்த சுவாமிகள் |
| 13 | ஆதியூர் அவதானி சரிதம் | 1875 | சேஷையங்கார். |
| 14 | பப்பரத்தியார் அம்மானை | 1875 | சையதுமீரான் புலவர் (ஆ) |
| 15 | அர்ச். கித்தேரியம்மாளம் மானை | 1876 | வீரமாமுனிவர் (ஆ) |
| 16 | அர்ச். மேரி கருதம்மாள் அம்மானை | 1876 | அப்துல்லா சாயபு (ப) |
| 17 | குருச்சேத்திர அம்மானை | 1876 | குஞ்ஞூமூசுலப்பை காறியாலிம் புலவர் (ஆ) |
| 18 | அர்ச். அந்தோணியார் அம்மானை | 1878 | எஸ். ஜகராவ் முதலி. (ப) |
| 19 | தருமர் அசுவமேத அம்மானை | 1878 | அருணாசல செட்டியார் |
| 20 | நபியவதார அம்மானை | 1878 | சையது மீரான் புலவர் (ஆ) |
| 21 | பப்பரத்தியார் அம்மானை | 1878 | முகம்மது இப்ராகிம் (ஆ) |
| 22 | மலுக்கு முலுக்கு ராஜன் கதை | 1880 | வா. அப்துல்காதிர் சாயபு |
| 23 | கோவிலன் கதை | 1881 | புகழேந்திப் புலவர். முத்துசாமி முதலியார் பதிப்பு |
| 24 | நபியவதார அம்மானை | 1882 | கலிக்களஞ்சியப் புலவர் |
| 25 | இரணியாசுரன் கதை | 1890 | சுந்தரராச கவிராயர் (ஆ) |
| 26 | ஞானசவுந்தரி அம்மானை | 1890 | மயிலு பிள்ளை |
| 27 | பொன்னர் சங்கர் அம்மானை | 1891 | வாரணவாசிக் கவிராயர் (ஆ) |
| 28 | அந்தோணியார் அம்மானை | 1892 | தோமைப் பிள்ளை பட்டங்கட்டியார் |

| | | | |
|---|---|---|---|
| 29 | சந்தந்தோனியார் அம்மானை | 1892 | ... ... |
| 30 | பஞ்சரதி அம்மானை | 1892 | சி. வி. வேல்முருகா பாண்டியன் |
| 31 | மகாபாரத அம்மானை(முதற் பாகம்) | 1892 | சைமுகம்மது அண்ணாவியார் |
| 32 | மதுரை வீரன் அம்மானை | 1892 | மீனாட்சி தாசர் (ஆ) |
| 33 | ஸ்நாபக சஞ்சுவாம் அம்மானை | 1892 | புவிமன்ன சிங்கமுதலியார் |
| 34 | அகினேச கன்னி அம்மானை | 1893 | செயின்ட் அகினேசு (ஆ) |
| 35 | தேவமாதா அம்மானை | 1893 | மேரி |
| 36 | பாகவத அம்மானை | 1893 | அ. சங்கரமூர்த்திக் கோனார் |
| 37 | பாகவத அம்மானை | 1893 | மு. மாரியப்ப கவிராயர் (ஆ) |
| 38 | விராடபர்வ அம்மானை | 1893 | சிறுமணலூர் முனிசாமி முதலியார் |
| 39 | அபிமன்னன் சண்டை | 1894 | வீரபத்திர தாஸர் |
| 40 | மாதர்நீதி அம்மானை | 1895 | இராமலிங்கம் பிள்ளை |
| 41 | பொன்னரங்கர் அம்மானை | 1899 | எம். வடிவேலு முதலி |
| 42 | சீரங்க அம்மானை | கி.பி. 19 | ... ... |
| 43 | காட்டுபாவா சாகிப் அம்மானை | 1900 | முத்துமுகம்மது புலவர் (ஆ) |
| 44 | மகாராணி அம்மானை | 1901 | பெரியசுப்பா ரெட்டியார் |
| 45 | நளச்சக்கரவர்த்தி அம்மானை | 1904 | எம். எஸ். முத்துபழனிய பிள்ளை |
| 46 | மாணிக்கவாசகர் அம்மானை | 1904 | நாகலிங்கம் பிள்ளை |
| 47 | புவனேந்திர அம்மானை (விக்ரமாதித்தன் கதை) | 1905 | சரவண பெருமாள் கவிராயர் (ஆ) |
| 48 | சுந்தரி கல்யாண அம்மானை | 1906 | சுப்பிரமணியபிள்ளை |
| 49 | ஸ்ரீராமர் வனவாசம் | 1907 | மதுரை என். ராமலிங்கம் பிள்ளை |

| | | | |
|---|---|---|---|
| 50 | பசுக்கடை அம்மானை | 1909 | குழந்தைவேலு பிள்ளை |
| 51 | வழக்குரைத்த அம்மானை | 1910 | பி. கதிர்வேலு பிள்ளை |
| 52 | ஏறல் மாநகரம் சேர்மன் அருணாசல சுவாமிகளின் சித்துவிளையாடல் அம்மானை | 1911 | இராமகிருஷ்ண முத்துநாடார் |
| 53 | திருச்செல்வர் அம்மானை | 1911 | திருச்செல்வராயன் |
| 54 | சுந்தரம்மானை | 1912 | வி. இராமலிங்க செட்டி |
| 55 | சித்து விளையாடல் அம்மானை | 1912 | கந்தசாமி நாடார் |
| 56 | ஐரோப்பிய யுத்த அம்மானை (I) | 1915 | எஸ். ஆர். நாதன் (ஆ) |
| 57 | நன்மரண அம்மானை | 1915 | எஸ். ஆர். சூசைய பிள்ளை (ஆ) |
| 58 | சந்நீக்கிலாவின் தவசதித அம்மானை | 1916 | மரியம் பிள்ளை (ஆ) |
| 59 | திருமுருக அம்மானை | 1916 | டி. ஏ. பெருமாள் பிள்ளை |
| 60 | செழுகை அம்மானை | 1918 | எஸ். எஸ். இராமசாமி பிள்ளை |
| 61 | செழுகை அம்மானை | 1919 | பி. மாணிக்கசாமி முதலி |
| 62 | பொன்னாக்ஷி அம்மன் அம்மானை (மறவர் குலப் பெண் பற்றியது) | 1922 | கருப்பசாமி கவி (ஆ) |
| 63 | வள்ளிநாயகி அம்மானை | 1923 | ஆறுமுக நாடார் |
| 64 | கள்ளழகர் அம்மானை | 1924 | பி. என். சிதம்பர முதலி |
| 65 | வீரப்பம்மாள் அம்மானை | 1927 | டி. சங்குப் புலவர் (ஆ) |
| 66 | காந்தி அம்மானை | 1935 | எம். எச். கான் முகமது |
| 67 | கண்ணப்பர் அம்மானை | 1940-50 | வெ. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் (ப) |
| 68 | காந்தி அம்மானை | 1948 | ஆதித்தர் |

| | | | |
|---|---|---|---|
| 69 | இராமப்பய்யன் அம்மானை | 1950 | எம். இராமச்சந்திரன் செட்டியார் (ப). |
| 70 | இராமப்பய்யன் அம்மானை | 1951 | எஸ். வையாபுரிப் பிள்ளை (ப) |
| 71 | ரூத் அம்மானை | ... | ... ... |
| 72 | திருவிளையாடல் அம்மானை | ... | ... ... |
| 73 | ஆரவல்லி கதை | ... | ... ... |

15912
([illegible])